GOKULAM மே '95 • ரூ. 5.00

கோகுலம்



பாராட்டும் ரோபோவே

பரிசு எங்கே ரோபோவே?



Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2 NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad** : • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore** : Sapna Book Stall, Gandhi Nagar. •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut** : Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

1995
மே மாத
இதழ்
மலர் : 13
இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
— பாரதியார்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம். விடுமுறை தொடங்கியிருக்குமே?

'கோடை விடுமுறைக்கு நாங்கள் வெளியூர் போகவில்லை. எப்படிப் பயனுள்ள முறையில் எங்கள் விடுமுறையைக் கழிப்பது?' என்று திண்டிவனத்தில் இருந்து ஒரு சுட்டிச் சிறுவன் கேட்டிருக்கிறான்.

அம்மா அப்பா இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களில் வீட்டை ஒழுங்குபடுத்தி வைக்கவோ, கதவு மூலைகளில் மண்டிக் கிடக்கும் ஒட்டடைகளைத் தட்டி எடுத்து சுத்தப்படுத்தவோ யாருக்கும் நேரம் இருக்காது. கழிக்க வேண்டியவைகளையெல்லாம் கண்டுபிடித்து ஒழித்துக்கட்ட இந்த விடுமுறையைப் பயன்படுத்தலாம். சிலர் வீடுகளில் கிழிசல் துணிகள் மூட்டை மூட்டையாக இருக்கும். வெளியே எறியவும் மனம் வராது. 'தேவைப்பட்டவர்கள் கேட்டால் கொடுக்கத் தயார். ஆனா யாரிடம் கேட்பது?' என்பார்கள். அம்மா உட்கார்ந்து காய்கறி நறுக்கிக் கொண்டிருக்கும் போது, இந்த மூட்டைகளைப் பிரித்து ஒவ்வொன்றாகக் காட்டி, ''தேவையா?'' என்று கேளுங்கள். தேவை என்பதையெல்லாம் ஒழுங்குபடுத்தி, 'தேவை இல்லாதவை' என்பனவற்றைக் குப்பைத் தொட்டியில் போட்டுக் கொளுத்தி விடலாம். காலாவதியான மருந்துகளை எடுத்து தூரப் போட்டு விட்டு, நல்ல மருந்துகளை மட்டும் அலமாரியில் தூசு தட்டி ஒழுங்காக வைக்கலாம்.

அம்மா அப்பாவிடம் கேட்டால், அவர்கள் தங்களால் முடியாமல் ஒத்திப் போட்டு வரும் பல வேலைகளைக் கூறுவார்கள். அவைகளைச் செய்வதில் நீங்கள் உதவக்கூடும்.

வீட்டு வேலைகளைச் செய்யவும், சமையல் பண்ணவும் தெரிந்து கொள்ளலாம். தம்பிகளுக்கும் சேர்த்தே கூறுகிறேன். சமையல், வீட்டு வேலை என்பவை பெண்களுக்கு மட்டும் என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள். மேல்படிப்புக்காக வெளியூரில் இருக்க வேண்டிய நிலை வந்து, ஹாஸ்டலிலும் இடமில்லை என்றால் என்ன பண்ணுவீர்கள்? சமையல் செய்யக் கற்று வைப்பது தம்பி தங்கைகள் இருபாலாருக்கும் மிக மிக அவசியம். வாரத்தில் ஒருநாள் அம்மாவை உட்கார வைத்து, மேற்பார்வையிட வைத்து நீங்களே சமைக்க ஆரம்பியுங்கள். உங்கள் பள்ளி நாட்களில் படபடக்க பறந்து பறந்து வேலை செய்து களைத்திருக்கும் பெற்றோர்களுக்கு, உங்கள் விடுமுறை நாட்களில், தவிப்பைக் குறைத்து, மனதுக்கும் உடலுக்கும் ஓய்வு தருவது உங்கள் கடமையல்லவா?


இந்த இதழில் இரண்டாவது பரிசு பெற்ற கதை வெளியாகிறது. முதல் பரிசு பெற்ற கதைக்கு ஏக வரவேற்பு இருந்ததைப் போல் இதற்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

கோடை விடுமுறைப் போட்டி, கதையை முடியுங்கள் போட்டி இரண்டும் இந்த இதழில் வெளியாகின்றன. வாண்டு மாமாவின் சித்திரத் தொடர் இந்த இதழில் முடிகிறது. அடுத்த தொடர் உடனே ஆரம்பமாக உள்ளது. மகிழ்ச்சி தானே?

அன்புடன்
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)




கோகுலம்
மே 1995
இந்த இதழில்...



* குருவி நடக்குமா?
பக்கம் 23

* அருமைச் சிறுவர் சிறுமியரே 1
* இந்த இதழில் 2
* தாகம் தீர்க்கும் பழம் (பாடல்) - 3
* மீனவனும் மீன்களும் 4

* சூரிய குடும்பம்
பக்கம் 17




* கப்பல்கள் (சித்திர அறிவியல்) 13
* சூரிய குடும்பம் 17
* உனக்கு வந்திருந்தால் 20
* என்ன செய்கிறீர்கள்? 22
* குருவி நடக்குமா? 23
* எங்கள் ஊரில் நடந்தது 28
* நேர்மையின் பரிசு 32
* கதையை முடியுங்கள் - போட்டி - 34
* நல்லா வேஷம் போடறான் 35
* அறிவியல் விருந்துக்கு வாருங்கள் 6
* குறை தீர்ந்தது - உங்கள் நூலகம் 8
* எந்தக் கால் எதனுடையது? போட்டி முடிவு - 9
* கோடை விடுமுறைப் போட்டி 1 - 10
* வாருங்கள் (பாடல்) - 12

* ரத்தினபுரி ரகசியம்
பக்கம் 45



* ஒரு நுரையீரலுடன் வாழ முடியுமா? 42
* சிரிப்.... 44
* ரத்தினபுரி ரகசியம் (சித்திரத் தொடர்) 45
* எலிகிலி! 57
* எது உறுதி? 58
* இரண்டாவது சாவி - 59 (தொடர் கதை)
* தெரிஞ்சாத்தானே? 65 (நாடகம்)
* நடக்காத பாடம் 69
* விடுமுறையைக் கழித்தேன் 72
* மந்திரப் பரங்கிக் காய்கள் 75
* கோஹினூர் எங்கே இருக்கிறது? 78

* கப்பல்கள் பக்கம் 13



* பிருந்தாவனக் கவியரங்கம் 81
* கலைப் பொருள் செய்வோம்! - 84
* தைரியம் காத்த தலைவர் 86
* எனக்குப் பிடிக்கலே! 88
* எஜமானனைத் தேடிய நாய் 90
* பாராட்டுகிறோம்! 92
* இவனெல்லாம் நண்பனா? 93
* சார் தபால்! 96



தாகம் தீர்க்கும் பழம்

தர்பூசணிப் பழமாம்
தாகம் தீர்க்கும் பழமாம்.
சர்க்கரை போல இனிக்கும்;
சாறு கொண்ட பழமாம்.

கோடை வெயில் காலத்தில்
கொளுத்தும் கத்தரி வெயிலில்
வாடைக்காற்று வீசினும்
வறண்டு நாக்கு போயினும்

குளிர்சாதனக் கருவிபோல்
குளிர்ச்சி யூட்டும் பழமாம்
களிப்பாய் நாமும் உண்டு
களைப்பைப் போக்கிக் கொள்வோம்.

கொஞ்சம் காசே போதும்
கொடுத்து வாங்கி உண்ண
நெஞ்சின் வறட்சி தீர்க்கும்
நேர்த்திமிக்க பழமாம்.

சிவந்த ரத்தம் போன்ற
செம்மை நிறப் பழமாம்
குறைந்த செலவில் கிடைக்கும்
குளிர்ந்த பானம் இதுவே.

— வள்ளிதாசன்

எழுத்துக் கூட்டி உரக்கப்

ஏரிகள் நிறைந்த ஓர் ஊரில் மீனவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் ஒரு புல்லாங்குழல் இருந்தது. அதைக் கொண்டு அவன் மிக அழகாகப் பாடல்களை இசைப்பான். மீன் பிடிப்பதைவிட அவன் புல்லாங்குழலை இசைப்பதையே பெரிதும் விரும்பினான். ஆயினும், நாள் முழுவதும் புல்லாங்குழலையே வாசித்துக் கொண்டிருந்தால் பிழைப்பு என்ன ஆவது? அதனால் வேண்டா வெறுப்பாக மீன் பிடிக்கப் போவான்.

மீனவன் புல்லாங்குழலை வாசிக்க ஆரம்பித்தால் அந்த ஊரில் உள்ள எல்லாக் குழந்தைகளும் ஆடிக் கொண்டே அவன் பின்னால் ஓடி வருவார்கள். தன்னுடைய புல்லாங்குழல் வாசிப்புக்கு மற்றவர்களை ஆட வைக்கும் அதிசய ஆற்றல் இருப்பதாக அவன் நம்பினான். அந்த நம்பிக்கையைச் சோதித்துப் பார்க்க மீனவன் விரும்பினான்.

மீனவனும்

அடுத்த முறை மீனவன் மீன் பிடிக்கப் போன போது, ஏரியில் வழக்கப்படி வலையை வீசவில்லை. வலையைப் படகில் போட்டு, வலையின் வாயை மட்டும் திறந்து வைத்தான். படகை ஏரியின் மையத்திற்குக் கொண்டு போய் நிறுத்தினான். புல்லாங்குழலை எடுத்து இசைக்கத் தொடங்கினான்.

மீனவனின் இனிமையான புல்லாங்குழல் இசையைக் கேட்டு, சிறுவ



ரெல்லாம் கரையில் கூடினர். அங்கிருந்தபடியே மகிழ்ச்சிக் கூத்தாடினர்.


நீண்ட நேரம் வாசித்துக் களைத்த மீனவன், இசையை நிறுத்திவிட்டு, படகில் இருந்த வாய் திறந்த வலையைப் பார்த்தான். அது காலியாகவே இருந்தது! எந்த மீனும் இசையில் மயங்கி, அதில் வந்து விழவில்லை!

மீனவனுக்கு ஆத்திரம் வந்தது. "என் இசையைக் கேட்டு ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் மகிழ்ந்து ஆடுகிறார்கள். உங்களுக்கு மட்டும் என்ன கேடுவந்தது? ஆடிக் கொண்டே வந்து என் வலையில் விழ வேண்டியதுதானே?" என்று மீன்களைப் பார்த்துக் கேட்டான். பிறகு வலையை எடுத்து வீசினான். இழுத்தான். ஏராளமான மீன்கள் வலையில் சிக்கிக் கொண்டன. வலையில் இருந்தபடி அவை துள்ளித் துள்ளித் தண்ணீரில் விழ முயன்றன.

மீன்களும்!

"நீங்கள் ஆட வேண்டும் என்பதற்காக நீண்ட நேரம் குழலூதினேன். நீங்கள் சட்டை செய்யவே இல்லை. இப்பொழுது குழலூதுவதை நிறுத்தியதும் இப்படிக் கூத்தாடுகிறீர்களே! இசை அறிவு இல்லாத மட மீன்களே!" என்று மீனவன் மீன்களைத் திட்டினான்.

ஒருவருக்கு கலைத் திறமை மட்டும் போதாது. அது சிறக்க பொது அறிவும் தேவை.




அறிவியல் விருந்துக்கு வாருங்கள்!

ஒரு ராக்கெட்டில் உங்களை ஏற்றி சந்திரனுக்கு அனுப்பினால் உங்கள் எடை எவ்வளவாக இருக்கும் என்பது தெரியுமா?

உங்களால் கூற முடியாது என்பது தெரியும். ஏதோ ஒரு சிலரால்தான் கூற இயலும். ஆனால், பெரியார் தொழில் நுட்ப அறிவியல் மையத்தில் உள்ள அறிவியல் காட்சிக்குப் போனால் எல்லோராலும் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூற முடியும். இதற்கு மட்டும் அல்ல, சுவையான அறிவியல் தொடர்புடைய பல வினாக்களுக்கும் பதில் கூற இயலும். இது எங்கே இருக்கிறது?

சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் இருந்து நடந்து செல்கின்ற தொலைவில்தான் இந்த பெரியார் தொழில் நுட்ப அறிவியல் மையம் அமைந்துள்ளது. இது அமைந்துள்ள சாலைக்குப் பெயரே காந்தி மண்டப சாலைதான்.

தமிழ்நாட்டு மக்களின், குறிப்பாக சிறுவரது அறிவியல் உணர்வை வளர்க்க வேண்டும் என்ற மிக உயர்ந்த நோக்கத்துடன் இந்த மையம் தமிழக அரசால் தொடங்கப்பட்டது. சிறுவரையும் பொது மக்களையும் கவரக்கூடிய அறிவியல் தொடர்பான பல பொருள்களை இங்கே காட்சிக்கு விருந்தாக வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பொரு ளுக்கு அருகிலும் விளக்கம் இருக்கிறது. வாய்வழி விளக்கம் அளிக்கவும் செயல் முறையைக் காட்டவும் உதவியாளர்கள் இருக்கிறார்கள்.






ஒளி, இயற்பியல், உருளை சக்தி, இயந்திரவியல், அணுஇயல் என்று பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் சாதாரண மக்களும் புரிந்து வியக்கும்படி அவை எப்படி இயங்குகின்றன என்பதை விளக்கியிருக்கிறார்கள். விசைகளின் விளையாட்டுக் கூடத்தில்தான் அதிகக் கூட்டம். ஒரு சரிவில் உருளும் பந்து எப்படியெல்லாம் மேலும் கீழுமாக இறங்கி ஏறி உருண்டு உந்து சக்தியைப் பெற்று மணியை அடிக்க வைத்து. திரும்பும் அதிசயத்தை எல்லாரும் செய்து பார்த்துவிட்டுத்தான் நகர்கிறார்கள்.

பஸ்ஸின் ஓட்டுநராகி அவரது இருக்கையில் அமர்ந்து நாமே பேருந்தை இயக்கி மகிழும்படி செய்

திருப்பதுடன், அது இயங்கும் போது அதன் பல உறுப்புகளும் எப்படி செயல் படுகின்றன என்பதைக் கண்டுகளிக்க முடிகிறது.

தொலைத் தொடர்பு செயற்கைக் கோள் எப்படி இயங்குகிறது என்பதை அதன் மாடல் வியக்கவைக்கிறது. இதே போல் வானொலி, தொலைக்காட்சிகளின் ஒலி, ஒளி அலைகள் எப்படி அனுப்பப் படுகின்றன என்பதையும் காண்பிக்கிறார் கள். உருளைகள் இயங்கும் அற்புதத்தை யும், கூம்புகள் உருண்டு விளைவிக்கும் செயல் பாட்டையும் காற்று மின் உற்பத்தி மாடலையும் அறிவியல் பூங்காவில் அமைத்திருக்கிறார்கள்.


கைகளைத் தட்டினால் ஒளிரும் மின் விளக்குச் சரங்கள் பாமரர்களுக்கு அதிசயம். அவை அறிவியலில் ஆர்வ முள்ளவர்களுக்கு விருந்து! இருந்து மணிக்கணக்கில் பார்த்து அறிந்து அதிசயிக்க வைக்கக்கூடிய காட்சிப் பொருள்கள் ஏராளமாக உள்ளன. க்விஸ் வினாக்களுக்கு சரியான விடையை உள்ள பொத்தானை அழுத்தி னால், க்விஸ் ரோபோ என்ற இயந்திர மனிதன் கை குலுக்கித் தன் பாராட்டைத் தெரி விக்கிறான்! அருகிலேயே பிளானி டோரியம் என்ற வான்காட்சியகம் இருக்கிறது. மையத்தை நன்கு பராமரித்து, வருபவர்களுக்கு சலிக்காமல் விளக்கம் தரும் உதவியாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



விடுமுறையில் சென்னைக்கு வரும் சிறுவர்களுக்கு, பொழுதுபோக்காகவே அறிவியல் அடிப்படைகளைக் கண்டு களிக்க இந்த மையம் ஏற்ற இடம். விடுமுறை நாட்களிலாவது காந்தி மண்டபம் வரை வரும் பேருந்துகளை இதன் வழியே திருப்பினால் சிறுவரின் அறிவியல் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிவதாக இருக்கும்.

அட்டையில் க்விஸ் ரோபோவுடன் சிறுமி துர்கா.

வண்ணப்படம் & புகைப்படங்கள் :
கேமிரா திருஞானம்



உங்கள் நூலகம்

குறை தீர்ந்தது!

பள்ளிகளில் நடிக்க இலக்கிய நாடகங்கள், பேராசிரியர் ஜோதி, பக். 120, ரூ 18/- நன்மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச்சேரி - 605 001.

முதியவர் வேடமிட்டு வழக்குத் தீர்த்து வைத்த கரிகால் வளவனின் ஆற்றலும், புலவருக்குத் தலை தந்து கொடை வழங்க முனைந்த குமணவள்ளல் கதையும் எத்தனை படித்தாலும் அலுக்காதவை. இவைகளோடு புறநானூற்றுக் கதைகள் சிலவற்றையும் சிறுவர் படித்து, மேடையில் நடிக்கத்தக்க நாடகங்களாக ஆசிரியர் தந்துள்ளார். தெளிவான நடை. மாணவர் உலகுக்கு நல்ல விருந்து. ஒவ்வொரு நாடகத்திற்கும் ஒரு படமாவது போட்டிருந்தால் இன்னும் அழகாக இருக்கும்.

சந்திரன் மேல கால வச்ச காலம்! டாக்டர் ஆர். ராமானுஜம், பக் 32, ரூ. 5/- சயின்ஸ் பப்ளிகேஷன்ஸ், 6 ஏ.ஆர்.கே. காலனி (முதல் தளம்), எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

மனிதன் சந்திர மண்டலத்தில் காலடி வைத்த வெள்ளி விழா ஆண்டில் இந்தப் புத்தகம் வெளிவந்திருக்கிறது. மனிதன் சந்திர மண்டலத்தில் காலடி வைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு என்ன அவசியம், இந்தத் தொடக்க முயற்சியில் விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்ட முட்டுக் கட்டைகள், இவைகளை அவர்கள் வெற்றி கொண்ட விதம், சந்திர மண்டலப் பயணம், அங்கு காலடி வைத்ததும் கண்ட காட்சிகள், என்ன செய்யப்பட்டன, அவற்றின் விளைவுகள் என்று எல்லாத் தகவல்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கையடக்கமான புத்தகம் எனினும், இதுவரை நாம் அறியாத பல தகவல்கள் இதில் தரப்பட்டுள்ளன. விண்வெளிப் பயண வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெறத்தக்க அருமையான சின்னப் புத்தகம்! ஏராளமான புகைப்படங்கள் நூலின் பெருமையைக் கூட்டுகின்றன.

முட்டாள் குருவும், மூடசீடர்களும், எஸ். குமார கிருஷ்ணன், பக். 160, ரூ 25/- நன்மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச்சேரி - 605 001.

தலைப்பையும் அட்டையையும் பார்த்தவுடன், வீரமா முனிவர் தந்த அதே பரமார்த்த குரு கதையோ என்று தோன்றும். ஆனால் படித்துப் பார்த்தால்தான், பரமார்த்த குரு கதாபாத்திரங்களை வைத்து புதிதாகப் படைக்கப்பட்ட கதைகள் என்பது தெரியும். உண்மையாகவே, பழைய பரமார்த்த குரு கதைகளை விட, ஆசிரியரின் புதிய கதைகள் சுவையாக உள்ளன. ஒவ்வொரு கதையையும் நகைச்சுவை சொட்ட எழுதியிருப்பது படைப்பாளரின் சிறந்த திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. சிறுவர் இலக்கியத்தில் நகைச்சுவைக் கதைகளுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சத்தை இந்தத் தொகுப்பு கண்டிப்பாகப் போக்கும்.

கற்பனையும் கைத்திறனும், தொகுப்பு எஸ். சுஜாதா & ஜ. ராமலிங்கம், பக். 48, ரூ. 16/- சயின்ஸ் பப்ளிகேஷன்ஸ், 6, ஏ. ஆர். கே. காலனி (முதல் தளம்) எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

சிறுவர்களின் அறிவுப் பசிக்கு அவசியம் தீனி போட வேண்டிய காலம் இது. அதிலும் குறிப்பாக, புதிதாக என்ன கைவேலை செய்யலாம் என்று அலைந்து கொண்டிருக்கும் சிறுவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஒரு வாய்ப்பு அல்ல ஏராளமான வாய்ப்புகளை இந்த நூல் தருகிறது. இலைகளை வைத்தும், காலி பாட்டில்களை வைத்தும், காகிதத்தை வைத்தும் என்னவெல்லாம் கைவினைப் பொருள்களைச் செய்யலாம் என்பதை இது சொல்லித் தருகிறது. தெளிவான விளக்கங்கள், விளக்கப் படங்கள் எல்லாம் தரப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் Activity புத்தகம் என்பார்கள். தமிழில் இத்தகைய புத்தகங்கள் அதிகம் இல்லையே என்ற குறையை இது தீர்த்து வைக்கிறது. அட்டையை இன்னும் சிறிது கனமாகப் போட்டிருக்கலாம். சிறுவர்களுக்குப் பரிசளிக்க முற்றிலும் ஏற்றது.


எந்தக்கால் எதனுடையது? போட்டிமுடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தொட்டு விட்டது! பெரும்பாலானவை சரியான விடையே! வழக்கப்படி குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது.


ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :


1) என். வெங்கடேஷ், மயிலாடுதுறை. 2) ஜே. விமல்ராஜ், சென்னை - 15. 3) பொ. செங்குட்டுவேல், சுந்தாபுரம், பழனிமாபுரம் போஸ்ட். 4) ஜி. உஷா, குருராஜபாளையம் போஸ்ட். 5) எம். ராஜ்முகம்மது, இராஜகிரி. 6) கே. தீபன்துரை, கொங்கணாபுரம் போஸ்ட். 7) ஏ. அருண்ராஜ், பாண்டிச்சேரி - 12. 8) ஏ. ஆர். ஷாரத், ராபர்ட்சன் பேட், கர்நாடகா. 9) வி. ஜெகனாதன், திருநெல்வேலி. 10) ஜி. பாரதி, திருவண்ணாமலை. 11) பா. அருண் சௌத்ரி, பெருந்துறை. 12) ஆர். தன்யா, இராஜபாளையம். 13) அழ. கருப்பையா, சென்னை - 18. 14) சோம. முத்துக்குமார், புதுக்கோட்டை. 15) ந. தமிழ்ச்செல்வி, திருவானைக்கா.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



சரியான விடை





கோடை விடுமுறைப் போட்டி - 1

இங்கே மொத்தம் 24 கட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டமும் ஒரு சொல்லையோ அல்லது சொல்லில் பாதியையோ குறிக்கிறது. இவைகளைத் தனித் தனியே குறித்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு வரிசைப்படுத்துங்கள். ஒரு கடிதம் அமையும். இந்தக் கடிதத்தின் வாக்கியத்தை அப்படியே ஒரு தபால் கார்டில் எழுதுங்கள். உங்கள் பெயர், வயது, முகவரி விவரங்களைப் பின்கோட்டுடன் எழுதியனுப்புங்கள். ஆசிரியர், கோகுலம் என்று கீழே கட்டமிடப்பட்டுள்ள பகுதியை மட்டும் கத்தரித்து, முகவரிக்கென உள்ள பகுதியில் ஒட்டி, அனுப்புங்கள். வெளிநாட்டு வாசகர்கள் இந்திய நண்பர் அல்லது உறவினர் முக வரியைக் கண்டிப்பாகத் தரவேண் டும். முடிவு தேதி : 31.5.95. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

மே '95

பெறுநர் :
ஆசிரியர் - கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.





வாருங்கள்

அந்த மானுக்கு வாருங்கள்
அழகின் ஆட்சி காணுங்கள்.
எந்தத் திசையை நோக்கினும்
எல்லாம் தென்னந் தோப்புகளே!

பசுமை போர்த்த தீவிதுங்க
பாம்பு நிறைந்த மண்ணிதுங்க
பச்சை பல்லி பாருங்க!
பார்த்தால் வியப்புக் கூடுதுங்க!

தீவின் பழமை மக்களினம்
தீர நிக்கோபர் மக்களினம்
இவரின் உணவு தேங்காயும்
இனிய தேனும் பழமாகும்.

ஓங்கே, ஷாம்பென் சென்டிலென்று
ஒதுங்கி வாழும் மக்களினம்;
இங்கு இவரை உயர்த்திடவே
இந்திய அரசு உதவுதுங்க.


பேரன் என்றொரு தீவுண்டு
பெரிய எரிமலை இங்குண்டு
வாரும் சென்று கண்டிடலாம்
வியந்து வியந்து மலைத்திடலாம்.

இந்திய நாட்டின் தென்கோடி
இல்லை இல்லை குமரிமுனை
இந்திரா முனையைக் காணுங்கள்;
இதுவே நாட்டின் தென்கோடி.

எல்லா மொழியும் இங்குண்டு
இந்தியர் என்ற உணர்வுண்டு.
செல்லூர் சிறையே சான்றாகும்;
சென்றே காண்போம் வாருங்கள்.

— தே. சந்திரன்









கப்பல்கள்

ஆழி




கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே, முதன் முதல் கப்பல் கட்டியவர்கள் எகிப்தியர்களே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எனினும், 50 முதல் 120 பயணிகள் வரை ஏற்றிச் செல்லும் கப்பல்களைக் கட்டியவர்கள் கிரேக்கர்கள் [கி.மு.1200—கி.மு. 300] என்று சொல்லப்படுகிறது.




1765-இல், ஜேம்ஸ்வாட், நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதன் பயனாக நீராவியினால் இயங்கும் கப்பல்கள் உருவாக்கப் பட்டன. 1783-இல், 'கிளாட்-டி-ஜோப்ராய்' என்ற பிரெஞ்சுக்காரர், முதன் முதலாக ஒரு நீராவிக் கப்பலைக் கண்டுபிடித்தார்.


1845-இல், 'புரொபல்லர்' என்னும் சுழல் விசிறியைப் பொருத்தி இயங்கும் நீராவிக் கப்பலை 'ஜான் எரிக்சன்' என்னும் ஆங்கிலேயர் கண்டுபிடித்தார். 1884-இல், 'சார்லஸ் பார்சன்ஸ்' என்னும் ஆங்கிலேயர் உருவாக்கிய, டர்பைர் இயந்திரம் பொருத்தப்பட்ட நீராவிக் கப்பல் முறையே இன்றளவும் பயன்பட்டு வருகிறது.




1912-இல், டீசல் இயந்திரத்தினால் இயங்கக்கூடிய கப்பல் அமைக்கப் பட்டது.

சுதந்திர இந்தியாவில், விசாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட 'ஜல உஷா' என்னும் முதல் கப்பலை 1940-இல் மிதக்க விட்டவர் இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு.







'கார்வுட்' என்னும் அமெரிக்கர் 1949-இல் இது போன்ற இரட்டை அடிவாரமுள்ள புதுமுறைக் கப்பல் ஒன்றை உருவாக்கினார். சாதாரணக் கப்பலை விடப் பலமடங்கு வேகமாகப் போகக்கூடியது. ஆனால், ஏனோ இந்தக் கப்பல், நடைமுறைக்கு ஒத்து வராமல் போயிற்று!



கப்பல்களில், பயணக் கப்பல், சரக்குக் கப்பல், எண்ணெய்க் கப்பல், திமிங்கில வேட்டைக் கப்பல், போர்க்கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் என பல வகைகள் உள்ளன.


கப்பல்களின் வேகம் 'நாட்' KNOT என்னும் அளவில் குறிப்பிடப்படுகிறது. 'நாட்' என்பது கடல் மைல். ஒரு கடல் மைல் என்பது 6080 அடி. தரையில் ஒரு மைல் என்பது 5280 அடிதான்!







உலகில் மிகப் பெரிய கப்பல் 'சிந்தரெல்லா'. இது பால்டிக் கடலில் செலுத்தப்படுகிறது. இதில் 480 கார்களை, 160 பஸ்களை, 2500 பயணிகளை ஒரே சமயத்தில் ஏற்றிச் செல்லலாம்!


உலகிலேயே மிகப் பெரிய எண்ணெய் (டாங்கர்) கப்பல் ஜப்பானின் 'குலேர்டிக் லண்டன்'! இதன் எடை 4,83,000 டன்! இதன் மேல்தளத்தில் 79 டென்னிஸ் கோர்ட்டுகள் போடலாம்!




கப்பலைச் செலுத்த உதவுவது புரொபல்லர் என்னும் கருவி. இப்போது ஜப்பானில், புரொபல்லர் இல்லாமல் புதிய முறையில் செலுத்தக்கூடிய கப்பலைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். புரொபல்லருக்குப் பதிலாக, முன்புறத்தில் 'த்ரஸ்டர்' என்னும் கருவியின் மூலம் மின்காந்தம் செலுத்தப்படுகிறது. அது, நீரை விலகச் செய்கிறது. அதன் மூலம் கப்பல் முன்னால் நகர்கிறது.









நீர்மூழ்கிக் கப்பலில் ஆங்காங்கே 'பாலஸ்ட் டாங்க்' எனப்படும் நீர்த்தொட்டிகள் உள்ளன. இவற்றுள் செலுத்தப்படும் நீரை நிரப்பியோ, வடிகட்டியோ கப்பல் செல்லும் ஆழத்தைக் கட்டுப்படுத்த முடியும். நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்க முடியாது; நகர்ந்து கொண்டே யிருக்க வேண்டும்.






உலகின் முதல் நீர்மூழ்கிக் கப்பலின் பெயர் 'டர்ட்டில்' [கடல் ஆமை]. அது 'டேவிட் புஷ்னெல்' என்னும் அமெரிக்கரால் உருவாக்கப்பட்டது.




உலகின் முதல் அணு நீர்மூழ்கிக்கப்பல் 'நாட்டிலஸ்'. அது 1954 - இல், அமெரிக்காவில் கடலுக்குள் செலுத்தப்பட்டது.
1979 வரை அது இயங்கிக்கொண்டிருந்தது.



இந்தியாவின் முதல் அணு நீர்மூழ்கிக் கப்பல் INS சக்ரா, விசாகப்பட்டினத்திலிருந்து செலுத்தப் பட்டது.


ஒரு சிறு அணுக்கரு உலை, ஒரு நீர்மூழ்கிக் கப்பலை இயக்கப் போதுமான ஆற்றலைப் பல ஆண்டுகளுக்கு அளிக்கிறது. மிகச் சிறு அளவிலான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் மூலம் அதனைப் பல லட்சம் கி.மீ. தூரத்திற்குச் செலுத்திவிட முடியும். இதில் புகை வருவதில்லை என்பதால், புகைக் குழாயை நீர்மட்டத்திற்கு மேல் செலுத்த வேண்டியதில்லை.

ஒருவர் மட்டுமே அமர்ந்து நீருக்குள் செலுத்தக்கூடிய நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்காவில் . உருவாக்கியிருக்கிறார்கள். 3·5 மீ. நீளமும், 400 பவுண்டு எடையும் உள்ள இது மணிக்கு 24 கி.மீ. வரையிலான வேகத்தில் நீருக்குள் பாய்ந்து செல்லும். நீரின் மேல்மட்டத்தில் மணிக்கு 72 கி.மீ. வேகத்தில் செல்லும்.



சூரிய குடும்பம்

சூரிய குடும்பம் என்பது சூரியனை மையமாகக் கொண்டு சுழலும் ஒன்பது கோள்களைக் கொண்டது. மெர்குரி (புதன்), வீனஸ் (வெள்ளி), பூமி, மார்ஸ் (செவ்வாய்), ஜூபிடர் (வியாழன்), சட்டர்ன் (சனி), யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகியவை இவை. இவைகளின் பெயர் எல்லாமே ரோமானியக் கடவுளர்களின் பெயர்கள்தான். ப்ளானட் (PLANET) என்கிற பெயரும் கிரேக்கம்தான். 'அலைந்து திரிபவை'



என்று பொருள். கோள்கள் யாவும் ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் சூரியனைச் சுற்றி வருகின்றவை. அதுவும் நீள் வட்ட பாதைகளில்.


நாம் இதுபோலச் சுற்றிவந்தால் என்னவாகும்? தலைசுற்றிக் கீழே விழுவோம். ஆனால், அப்படி ஆட்டம் காணாமல் பலகோடி வருடங்களாக இவை பாதை மாறாமல் சுற்றிச் சுற்றி வருகின்றன. எப்படியெனில், ஒரு கயிற்றில் கல்லைக் கட்டிச் சுற்றுங்கள். மையவிசை கொண்ட ஓர் அழகான வட்ட பாதையில் உருவாகும். இதைப் போன்ற இரண்டு விதமான விசைகள் கிரகங்களின் மீது செயல்படுகின்றன. ஒன்று சூரியனை நோக்கி இழுக்கும் மையநோக்கு விசை. மற்றொன்று சூரியனை விட்டு விலகச் செய்யும். மைய விலக்கு விசை. இப்படிப்பட்ட பின்னல் விசையமைப்பினால் கோள்கள் சூரியனிடம் ஒட்டாமலும்,



விலகாமலும் சாமர்த்தியமாகச் சுற்றி வருகின்றன.

சூரிய குடும்பத்தின்

கே.பி.சாந்தி




கடைசி உறுப்பினர் யார் தெரியுமா? புளூட்டோ என்பீர்கள். ஆனால், இது முற்றிலும் சரியல்ல. நெப்டியூனின் நீள் வட்டப் பாதையும், புளூட்டோவின் நீள்வட்ட பாதையும் குறுக்கிடுவதால் (CROSS OVER) சில சமயங்களில் நெப்டியூன் சுற்றுப் பாதைக்கு வெளியே தள்ளப்படுகிறது. 1979லிருந்து 1999 வரை நெப்டியூன் கடைசி கோளாக உள்ளது.

கோள்களின் தன்மையைப் பொருத்து இவைகளை இரண்டு தொகுதியாகப் பிரிக்கலாம். புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் மற்றும் புளூட்டோ ஆகியன புவியொத்த கோள்கள். வியாழன், சனி, நெப்டியூன், யுரேனஸ் முதலியன ஜோவியன் கோள்கள். அதாவது வியாழனை ஒத்த கோள்கள். முதல் தொகுதிக் கோள்கள் எல்லாம் பாறைகள் மலைகளை உடைய கடினமான மண்பரப்பினை உடையவை. மற்றவை வளி (வாயு) மண்டலம் சூழப்பட்ட மென்மையான மேற்பரப்பினைக் கொண்டவை. புகை மூட்டம் போன்ற மேற்பரப்பால் அவற்றின் புவி இயல் பற்றி அறிய முடியவில்லை. சமீபத்தில் ஏற்பட்ட வால் நட்சத்திர மோதல் புவியொத்த கோள்களில் ஏற்பட்டிருந்தால் விளைவு மிகக் கொடியதாக இருந்திருக்கும். பஞ்சு போன்ற மேற்பரப்பினை உடைய வியாழனில் மோதியதால் இவை புதையுண்டு போயின எனலாம்.

அடுத்து, கிரகங்களின் சுழற்சி பற்றிய விவரம். ஒவ்வொரு கிரகமும் தன்னைதானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது அல்லவா? எல்லாக் கோள்களும் நின்று கொண்டே சுழல்கின்றன என்றால் யுரேனஸ் மட்டும் தனிவிதம். சூரியனுக்கு நேர்த்திக்கடன் செய்து கொண்டதுபோல அங்கப்பிரதட்சணம் செய்கிறது. அதாவது அதனுடைய, சுழல் அச்சு சூரியனை நோக்கிக் கிடையாக உள்ளது.

அடுத்து, துணைக் கோள்கள் எனப்படும் சந்திரன்கள் பற்றிய விவரம். நெபுலாவிலிருந்து வெடித்துச் சிதறியதில் கோள்கள் உருவாயின. சிறிய பகுதிகள் துணைக்கோள்களாயின என்பது ஒப்புக் கொள்ளப் பட்ட வாதம். அப்படியெனில்



பூமியும், நிலாவும் சகோதரர்கள் தானே? நிலாவில் ஆராயப்பட்ட பாறைகளின் வயது 400 கோடி வருடங்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பூமியின் பாறைகளின் வயதும்கூட இதேதான் என்பதால், இரண்டின் பிறப்பும் ஒரே காலம்தான் என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது.

சந்திரன்கள் இல்லாத கோள்கள் புதனும், வெள்ளியும் மட்டுமே. பூமிக்கும் புளூட்டோவிற்கும் ஒரே ஒரு சந்திரன் மட்டும்தான் உண்டு. செவ்வாய்க்கு இரண்டு. மற்றவைகளுக்கு 8 முதல் 20 சந்திரன்கள்!

இவற்றில் சனியுடைய 'டிரிட்டான்' எனப்படும் நிலவில், உயிரின் உருவாக்கத்திற்குத் தேவையான நைட்ரஜன், ஹைட்ரோ கார்பன்கள் ஆகியவை உள்ளன. நெப்டியூனின் நிலவில் பனிமலைகளும் பனி ஆறுகளும் இருப்பதைக் காட்டும் புகைப்படங்களை வாயேஜர்-1 ஏவூர்தி அனுப்பியுள்ளது. புளூட்டோவின் நிலவில் மேகக் கூட்டம் இருப்பதும் அவற்றின் நிழல் தரையில் விழுவதும் படம் பிடிக்கப்பட்டுள்ளது. கோள்களிலேயே மேகக் கூட்டம் இருந்தது, பூமியைத் தவிர புளூட்டோவின் நிலவில் மட்டுமே.

பனிமலை, பனியாறு மேகக் கூட்டம் ஆகியவை ஆக்ஸிஜன் உள்ளதைக் காட்டுவதால் இந்தக் கண்டுபிடிப்புகள் மிக முக்கியத்தும் பெற்றதாகின்றன. ஆனால், இதுவரை வேற்றுகிரகவாசிகளைக் கண்டதற்கான அறிகுறிகள் எதுவும் கிட்டவில்லை. பறக்கும் தட்டு, ஈ.டி. போன்றவை எல்லாம் கற்பனையே!

இத்தனை அழகான, இனிய விவரங்களை நமக்கு அளித்துள்ள 'வாயேஜர்-1' ஏவூர்தி பற்றிச் சில விவரங்கள். இது 1979ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது. இதிலுள்ள கம்ப்யூட்டர் பாகங்கள் எல்லாமே பழையன. இன்றைய அறிவியல் முன்னேற்றத்தைக் கணக்கிடும் போது இது மிகப் பழைமையானது. ஆனால், இன்றுவரை தனக்களிக்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றது. இன்னும் இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாக இப்படியே தொடர்ந்து செயலாற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூரிய குடும்பத்தைத் தாண்டிச் செல்லப் போகும் முதல் ஏவூர்தியும் இதுதான்.





பள்ளியில், உணவு இடைவேளையின்போது, மாணவிகள் அனைவரும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஜானகியோ தன் தோழி வாசுகியைக் காணாமல் தேடிக் கொண்டிருந்

உனக்கு வந்திருந்தால்..!

தாள்.

தென்னை மரத்தடியில் வாசுகி சோகமாக அமர்ந்திருந்தாள். வாசுகி அமர்ந்திருந்த இடத்தை கண்டுபிடித்த ஜானகி அவள் அருகில் அமர்ந்தாள்.

"உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா? நீ என்னடான்னா இங்கே வந்து சோகமா உட்கார்ந்திருக்கே. டீச்சர் திட்டினாங்களா?"

"இல்லை" என்று ஒரே வார்த்தையில் பதிலளித்தாள் வாசுகி.

"உங்க வீட்ல யாராவது திட்டினாங்களா? எதுக்கு இப்படி சோகமாயிருக்கே?"

"கட்டுரைப் போட்டியிலே எனக்கு பரிசே கிடைக்கவில்லை. நான் நன்றாகத்தான் எழுதியிருந்தேன். நான் எழுதிய கட்டுரைக்கு முதல் பரிசு கிடைக்கும்னு ரொம்பவும் ஆசையா இருந்தேன்" என்றாள் வாசுகி கம்மிய குரலில்.



"முதல் பரிசு யாருக்குக் கிடைச்சிருக்கு?"

"அந்தத் திக்குவாய் சாந்திக்குக் கிடைச்சிருக்கு. அவளைப் பார்த்து பரிதாபப்பட்டு அந்த முதல் பரிசை கொடுத்திருப்பாங்க" என்றான் வாசுகி மிகுந்த கோபத்துடன்.

"அப்படிச் சொல்லாதே வாசுகி. எப்பவும் ஆளைப் பார்த்து எடை போடக் கூடாது. உண்மையிலேயே சாந்தி கட்டு

ரையை நல்லா எழுதியிருக்கலாம். அதனால் சாந்திக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு. அடுத்த தடவை நீ இன்னும் நல்லா எழுது. முதல் பரிசு வாங்க முயற்சி செய்."

"இனிமே எந்தப் போட்டியிலயும் கலந்துக்க மாட்டேன்."

"நீ சொல்வது தவறு வாசுகி. போட்டியில் கலந்துக்கற ஒவ்வொருவரும் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்கிற நம்பிக்கையிலதான் இருப்பாங்க. போட்டியிலே தோல்வியடைஞ்சிட்டால், வெற்றி பெற்றவங்களைப் பார்த்து பொறாமையிலே திட்டக் கூடாது. இனி மேல் எந்தப் போட்டியிலயும் கலந்துக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கவும் கூடாது. வெற்றி கிடைக்காததற்கு என்ன காரணம்னு சிந்திக்கணும்" என்று ஜானகி அறிவுரை சொல்லவும் வாசுகி எரிச்சலடைந்தாள்.

"என்னுடைய நிலை உனக்கு வந்திருந்தால் நீ இப்படிப் பேச மாட்டே."



"நானும்தான் சிறுவர் இதழுக்கு கதைகளையும், துணுக்குகளையும் ஏராளமா எழுதியனுப்பறேன். ஆனால் அவை திரும்பி வருகின்றன. அதற்காகச் சோர்ந்து போய் எழுதுவதை விட்டு விடவில்லை. என் . கதை என்றைக்காவது ஒருநாள் நிச்சயம் வெளிவரும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஆயிரமாயிரம் பிறக்காத தினங்கள் நமக்காகக் காத்திருக்கின்றன. தொடர்ந்து முயற்சி செய். உனக்கு வெற்றி கிடைக்கும்" என்று ஜானகி சொல்லச் சொல்ல வாசுகியின் உள்ளம் தெளிவானது.

"என்னை மன்னித்து விடு ஜானகி. என் உள்ளத்தில் பொறாமைப் பேய் குடியிருந்தது. இப்போது உன் தெளிவான வார்த்தைகளைக் கேட்டதும் அந்தப் பொறாமைப் பேய் ஓடி விட்டது. என்னுள் நம்பிக்கை தோன்றி விட்டது. நிச்சயம் அடுத்த போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெற முயற்சி செய்வேன்" என்று வாசுகி உறுதியான குரலில் சொல்லவும் ஜானகி முகம் மலர்ந்தாள்.

"உன்னுடைய மனமாற்றம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சரி வா சாப்பிடலாம்."

"சாப்பிடுவதற்கு முன் சாந்தியைப் பார்க்கணும்."

"எதுக்கு?" என்றாள் ஜானகி புரியாமல்.

"கட்டுரைப் போட்டியில் சாந்தி முதல் பரிசு வாங்கியதற்குப் பாராட்டணும்."

"இருவரும் சேர்ந்து சாந்தியைப் பாராட்டுவோம்" என்ற ஜானகி தன் அன்புத் தோழி வாசுகியின் கரத்தை இறுகப் பற்றியவாறு சாந்தியைக் காண உற்சாகத்துடன் நடந்தாள்.

— நா. ம.

என்ன செய்கிறீர்கள்?



ஒரு முறை, வெளிநாட்டு அன்பர்கள் சிலர் மகாத்மா காந்தியிடம் வெளிநாட்டு விளையாட்டுச் சாமான்களைக் கொண்டு வந்து கொடுத்து, குழந்தைகளிடம் கொடுக்கச் சொன்னார்கள். அவைகளை அப்படியே விட்டுவிட்டுத் தனது தினசரி அலுவல்களை காந்தி கவனிக்கலானார். குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களை அவர் தங்களிடம் கொடுக்கவில்லையே என்ற ஏக்கம். காந்தியிடம் 'அந்த பொம்மைகளை எங்களுக்குக் கொடுக்க மாட்டீர்களா பாபு?'' எனக் கேட்டனர்.

அதற்கு பாபுஜி, "குழந்தைகளே, நாம் வெளிநாட்டுப் பொருள்களை உபயோகிக்கத் தடைவிதித்திருக்கிறோம் என்பதை மறந்துவிட்டீர்களா?" என்று கேட்டார்.


"ஆனால், அவை எங்களுக்கு விளையாடுவதற்காகக் கொடுக்கப்பட்டவைதானே? அவைகளை வைத்துக் கொண்டு விளையாடுவதற்குத் தடை சொல்ல உங்களுக்கு உரிமை இல்லையே?'' என்றனர் குழந்தைகள்.

காந்திஜி புன்னகையுடன், "நான் என் தப்பை உணர்ந்து கொண்டேன். உங்களுக்கு அவை பரிசாகத்தானே வந்தன? கொடுத்து விடுகிறேன். ஆனால், நானும் உங்களோடு விளையாட வரலாமா?'' என்று கேட்டார்.

குழந்தைகளுக்கு ஒரே மகிழ்ச்சி. காந்திஜி அவர்களுடன் கிளம்பும் சமயத்தில், "நான் ஒரு சபதம் செய்திருக்கிறேன். வெளிநாட்டுப் பொருட்கள் எதையும் உபயோகிக்க மாட்டேன் என்பதே அது. இந்தப் பொம்மைகள் எல்லாம் வெளிநாட்டுப் பொருட்கள்தானே? அதனால் இவைகளை நான் தொட மாட்டேன். நீங்கள் என்னோடு விளையாட வேண்டுமென்றால் இவைகளைத் தவிர்க்க வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?" என்று குழந்தைகளிடம் கேட்டார்.

காந்திஜி கூறியதைக் கேட்டுக் குழந்தைகள் எல்லோரும் திகைத்தனர். ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொண்டனர். 'இந்த வெளிநாட்டுப் பொம்மைகளை விட காந்திஜியுடன் விளையாடுவதுதான் நமக்கு முக்கியம்' என்று முடிவு செய்து அந்தப் பொம்மைகளை அங்கேயே வைத்தார்கள். பிறகு காந்திஜியுடன் விளையாடினர். அதற்குப் பிறகு ஒரு பொழுதும் அவர்கள் காந்திஜியிடம் அந்த வெளிநாட்டுப் பொம்மைகளைப் பற்றிப் பேசவில்லை!

- ஜி. இந்திரா, திருச்சி - 14.



குருவி நடக்குமா?

ரேவதி

"ச்விங் ச்விங் ச்விங்
ட்ரி ட்ரி ட்ரி ட்ரி ட்ரி
ச்விங் ச்விங் ட்ரி ட்ரி
ச்விங் ட்ரி ச்விங் ட்ரி"


ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து தாளம் மாறாது குரல் எழுப்பி மாறி மாறிக் கத்திய இரண்டு குருவிகளும் 'ர்ர்...' சத்தம் எழுப்பிப் பறந்து சென்றன.

போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்தான் நம்பி. அவன் எதிர்பார்த்தபடியே போர்வையில் வைக்கோல் துண்டுகள், சின்னச் சின்ன துணித் துண்டுகள், விளக்குமார் குச்சிகள், பஞ்சுத் துண்டு எல்லாம் நிறைந்து இருந்தன. எல்லாம் குருவியார் செய்திருக்கும் வேலைதான்!

அவர்கள் அந்தப் புது வீட்டுக்குக் குடிவந்து மூன்று மாதங்கள்தான் ஆகிறது. அவர்களுக்கு முன்னாலேயே வாசல் அறையில், இடது மூலையில் குருவியாரின் குடும்பம் குடியேறியிருந்தது! வெள்ளையடிக்க வந்தவர்கள், கூட்டைக் கலைத்து விடட்டுமா என்று கேட்ட போது சுபாவும் நம்பியும்தான் அதற்கு பலமாக மறுப்புத் தெரிவித்தார்கள்.

காலையில் சுபாவுக்கும் நம்பிக்கும் விழிப்பு வருவதற்கு முன்னாலேயே குருவிகளுக்கு விழிப்பு வந்து விடும்! கூடு கட்ட ஜன்னல் வழியாக எடுத்து வரும் கண்ட கண்ட குப்பைகளை எல்லாம் அவர்கள் மேல் போடும். பெருக்கினால் வேளைக்கு ஒரு கூடை சேரும்! எப்படித்தான் எங்கிருந்துதான் சளைக்காமல் தூக்கிக் கொண்டு வருகின்றனவோ என்று எல்லோரும் வியந்தனர். ரப்பர், ரப்பர் பேண்ட், குட்டிப் பென்சில் என்று இலேசான பொருள்கள் எது கிடைத்தாலும் இரண்டு குருவிகளும் கூட்டுக்குத் தூக்கிச் செல்ல முயன்றன. சுபாவின் தலையணியில் சின்னக் கிழிசல் இருந்தது. தலையணி உறையைத் தோய்க்கப் போட்டிருந்தாள் சுபா. அந்தச் சின்னக் கிழிசலை எப்படித்தான் கண்டுபிடித்

தனவோ! அது வழியாகக் கொத்திக் கொத்திப் பஞ்சை வெளியே இழுத்துப் போட்டிருந்தன! வீடெங்கும் பஞ்சுத் துகள்! கொஞ்சம் பஞ்சை எடுத்து ஒரு பெரிய துணிப்பையில் போட்டு, உத்தரத்தில் மாட்டி விட்டு, கிழிசலைத் தைத்தான் சுபா.



குருவிகள் இரண்டும் "பர்.... பர்..." என்று ஜட் வேகத்தில் குறுக்கும் நெடுக்குமாப் பறந்து போய்க் கொண்டிருந்ததால் மின்விசிறியைப் போட முடியவில்லை.

'வீடே குப்பை மேடாகிக் கொண்டிருக்கிறது' என்று அம்மாவும் அப்பாவும் குருவிக் கூட்டைப் பிரிக்க எண்ணிய போது இருவரும் பலமாக எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். குருவிகளுக்குத் துணிவு அதிகரித்து விட்டது.

அம்மா, தேங்காய் துருவி விட்டு அசந்தால் இரண்டும் பறந்து வந்து கொத்தும். அரிசி பொறுக்கும் போது விசி எறியும் நெல், அரிசிப் புழு, மிளகாய்க் காம்பு போன்றவற்றை அருகே வந்து கொத்தும். சாப்பிட உட்கார்ந்தால் டைனிங்டேபிளின் நடுவில் வந்து உட்காரும். சுபா, தன் கையில் ஏதாவது நூலையோ, கயிறையோ பிடித்து உயர்த்தினால் வந்து கொத்திக் கொண்டு பறக்கும். பொட்டுக் கடலையைச் சின்னத் தட்டில் வைத்து, உள்ளங்கையில் தட்டை வைத்துக் கையை உயர்த்திக் காட்டினால், இரண்டும் மாறி மாறி வந்து கொத்திக் கொண்டு தட்டைக் காலி பண்ணும்! பள்ளிக்குப் போகின்ற நேரம் போக இருவரும் வீட்டில் இருக்கும் போது குருவிகளைக் கவனிப்பதிலேயே ஆர்வமாக இருந்தனர்.

அன்று பள்ளியில் இருந்து வரும் போதே சுபா மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டு வந்தான்.

"சிட்டுக் குருவி வா வா!
சின்னக் குருவி வாவா!
நடந்து அருகே வாவா!
நெல்லைத் தாரேன் வாவா!"



"சுபா, காப்பி குடித்து விட்டுப் போ" என்று அம்மா அழைத்தது அவள் காதில் விழ வில்லை.

"சுபா, நான் மாமா சேலத்தில் இருந்து வந் ருக்கேம்மா. என்னை ான்னு கூடக் கூப்பி ாம இப்படிக் குரு வியே கதின்னு கிடந் தால் நான் உனக்குக் ளம்ப வேண்டியது தான்'' என்று புதுக் குரல் அலுத்துக் கொண் டது.

''மாமா மாமா! எப்போ வந்தீங்க? நான் கவனிக்கவே இல் லையே?" என்று ஓடி மாமாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் சுபா.

"நீ பாடிக் கொண்டு வரும்போதே நான் இங் கேதம்மா இருந்தேன். நீ குருவியை நினைச்சுக் கிட்டே வந்ததால நான் உன் கண்ணிலே படலே."

"மன்னிச்சுக்கோங்க மாமா. என் குருவியைப் பார்த்தீங்களா மாமா?"

"பார்த்தேனே. உனக் குப்பையை எல்லாம் வீட்டுக்குள் கொண்டு வந்து சேர்க்குதுன்னு உங்கம்மா புகார் பண்றதையும் கேட் டேன்."

''என்னடி வரும்போதே குருவி நினைப்புத்தானா?'' என்று அம்மா வியந்து கொண்டதை சுபா காதில் வாங் கிக் கொள்ளவில்லை. நேராக வாசல் அறைக்குப் போனாள்.

அவளைக் கண்டதும் இரண்டு குருவி களும் அவள் தலையைச் சுற்றிப் பறந் தன. மின்விசிறியின் கைகளில் உட் கார்ந்து 'கிச் கிச்' சென்று கத்தித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன. சுபா மகிழ்ச் சியாகப் பாடினாள்.

"மாமா, நானும் அண்ணனும் இல்லா தப்போ, இந்த அம்மா கதவுகளையெல் லாம் மூடி, குருவிகளை விரட்டப் பார்க் கிறாள். நீங்க சொல்லுங்க மாமா."

"உங்க அம்மா எத்தனை விரட்டினா லும் இதுங்க போகவே போகாது. எப் படியும் மறுபடியும் மறுபடியும் இங்க தான் வரும். நீ ஏன் கவலைப்படறே?" என்று தைரியம் கொடுத்த மாமா,

"ஏம்மா நீ ஏதோ பாட்டுப் பாடிக்கிட்டே வந்தியே... அது என்ன பாட்டு?" என்று கேட்டார்.

"அது நான் எழுதின பாட்டுதான் மாமா. நல்லா இருக்கா?" என்று கேட்ட படி வந்து மாமாவின் கழுத்தைக் கட்டி னான் நம்பி.

"எங்கே பாடு?"

"சிட்டுக் குருவி வாவா
சின்னக் குருவி வாவா
நடந்து அருகே வாவா
நெல்லு தாரேன் வாவா"

"பாட்டு ரொம்ப நல்லா இருக்கு. குழந்தைக் கவிஞரோட பாடல்களைப் படிச்சவங்களுக்கு இந்த மாதிரி பாடல்களை சொந்தமாக எழுதக்கூடிய திறமை தானாகவே வந்து விடும்" என்று பாராட்டிய மாமா, "உங்க ரெண்டு பேருக்கும் இப்போ ஒரு போட்டி. இந்தப் பாடல்ல ஒரு பிழை இருக்கு. அது என் னன்னு சொல்லுங்க பார்ப்போம். சரி யாச் சொன்னா பரிசும் தரேன்" என் றார்.

"பிழைன்னா, எதுல மாமா பிழை? எதுகையிலா, இல்லே மோனையிலா?" என்றான் நம்பி. பாடலை எழுதினவன் அவன்தானே?


"பிழை எதுகையிலும் இல்லே, மோனையிலும் இல்லை. சந்தம் அமைப்பு எல்லாமே ரொம்ப அழகா அமைஞ்சிருக்கு. ஆனால் இதில் ஒரு கருத்துப் பிழை இருக்கு."

நம்பியும் சுபாவும் மாமாவின் முகத் தைக் கவனமாகப் பார்த்தார்கள்.

"அந்த நரி உன்னை ஏமாற்றி வடையைத் தூக்கிட்டுப் போகுது. நீ கவலையே படலையே?"

"அது ஊசிப் போன வடை தானே!"

- வாண்டுதாசன்



"இதற்கு மேல் நான துப்புத் தர மாட் டேன். இந்த வீட்டுக்கு நீங்க குடிவந்து மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. தின மும் குருவிங்களைப் பார்க்கறீங்க. தின மும் மணிக்கணக்கில் அதன் பழக்க வழக்கங்களைக் கவனிக்கிறீங்க. இந்தப் பாடலில் உள்ள ஒரே ஒரு கருத்துப் பிழை என்னன்னு உங்களால் கண்டு பிடிக்க முடியலேன்னா, நீங்க குருவிங் களைக் கவனிப்பதில் பொருளே இல்லை."

ஆவலும் கவலையும் நிறைந்தவர் களாக அண்ணனும் தங்கையும் மாமா வைப் பார்த்தனர்.

"சரி, நான் ஆபீஸ் வேலையா வந் தேன். நாளை மாலை பஸ்ஸில் ஊருக் குக் கிளம்பறேன். நாளைக்கு சனிக் கிழமை. உங்க ரெண்டு பேருக்கும்தான் பள்ளிக்கூடம் இல்லையே. கவனிச்சு கூர்ந்து குருவிகளைப் பாருங்க. சாயங் காலம் நான் வந்ததும் ஊருக்குக் கிளம் பறதுக்கு முன்னால கண்டுபிடிச்சு சொல்லுங்க. பரிசு தரேன். முடிய லேன்னா, போகும் போது விடையை நானே சொல்லிட்டுப் போறேன்."

"சங்கர். நான் கண்டுபிடிச்சு சொல்ல லாமா?" என்றாள் அம்மா.

"நான் கண்டுபிடித்தால் எனக்கும் பரிசு தருவியா?" என்று கேட்டார் அப்பா.

மாமா சிரித்துக் கொண்டே இரண்டு வாட்டர் கலர் பாக்ஸ்களை எடுத்து அல மாரியில் வைத்தார்.

"பரிசாகத் தர இருப்பவை இந்த இரு வர்ணப் பெட்டிகளே. யார் சரியாகக் கூறுகிறார்களோ அவர்களுக்கு. ஒரு வருமே சரியாகக் கூறாவிட்டால் நான் திரும்ப ஊருக்கு எடுத்துக் கொண்டு போய் விடுவேன்." என்றார்.

மறுநாள் வீட்டில் யாருக்கும் வேலை ஓடவே இல்லை. அம்மா அந்த நாலு அடிப் பாடலைப் பாடிக் கொண்டே சமைத்தாள். அடிக்கடி ஜன் னலுக்கு அருகே வந்து குருவிகளைக் கவனித்தாள்.

அப்பா, சுபாவிடம் வந்து காகிதத்தில் அந்தப் பாடலை எழுதிக் கொண்டு



போனார். ஜன்னல் வழியாகத் தோட்டத்தில் குருவிகளைப் பார்த்துக் கொண்டே இருந்தார். பேப்பர் கூடப் படிக்க வில்லை!

சுபாவும், நம்பியும் வழக்கப்படி குருவிகளைக் கூர்ந்து கவனித்தனர். குருவிகள் வழக்கப்படி குப்பை கூளங்களைக் கொத்திக் கொண்டு வந்தன. பொட்டுக்கடலை தின்றன. பறந்தன.

யாருக்கும் எதுவும் ஓடவில்லை! வாசலில் அரிசிப் பொறி வந்தது. சுபா தான் கிண்ணத்தில் வாங்கினாள். எடுத்துக் கொண்டு வரும் போது, கிண்ணம் சரிந்து, பொரி இறைந்தது. காகங்களும் குருவிகளும் இறைந்து ஓடிய பொரிகளைக் கொத்தித் தின்றன.

வாசற்படியில் நின்றபடி நான்கு பேரும் கவனித்தனர். அதிக அளவு காகங்கள்தான் கொத்தித் தின்றன. குருவிகள், விலகிச் சென்ற பொரிகளையே தேடித் தேடித் தாவித் தாவித் தின்றன.

காகங்கள் தாவின. நடந்தன. குருவிகள் வேகமாகத் தத்தின; பறந்தன. ஆனால் நடக்கவே இல்லை!

"அண்ணா அண்ணா! எந்தக் குருவி யாவது காகத்தைப் போல, கோழியைப் போல, புறாவைப் போல நடக்குதா பார்?" என்றாள் சுபா.

நம்பி மட்டுமென்ன! அப்பா அம்மா இருவரும் கூட ஆவலுடன் சேர்ந்து கொண்டு கவனித்தனர்.

"குருவி எதுவுமே நடக்கவே இல்லையே! தத்தித்தானே வருது! தவறினால் பர்னு பறந்து போகுது!"

"ஆமாம்! எந்தக் குருவியும் நடக்கக் காணோமே!"

"சுபா கவனிச்சது சரிதான். குருவி நடக்கவே இல்லையே! தத்தத்தானே தத்துது!"

நால்வரும் ஒரு அதிசயத்தைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியில் தங்களை மறந்து கூறிக் கொண்டனர்.

"பாடலில் என்ன பிழைன்னு கண்டு பிடிச்சாச்சு" என்று சுபாவும் நம்பியும் கூவினர் மகிழ்ச்சி தாங்காது.

"என்ன பிழைன்னு கண்டுபிடிச்சீங்களா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் மாமா.

"என்ன பிழைன்னு கண்டுபிடிச்சு, பாடலைத் திருத்தியிருக்கேன் மாமா. சுபாவே பாடுவாள். கேளுங்க" என்றான் நம்பி.

"சிட்டுக் குருவி வாவா
சின்னக் குருவி வாவா
பட்டுக் குருவி வாவா
பறந்து தத்தி வாவா"

மாமா மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அலமாரியில் இருந்த வர்ணப் பெட்டிகளை எடுத்து வந்து இருவருக்கும் கொடுத்தார்.

அறிவியல் உண்மைகள்

* சிட்டுக் குருவிகள் எனப்படும் sparrow, La ploceidae, குடும்பத்தில், passer பிரிவைச் சார்ந்தவை.

* உடல் கருஞ்சாம்பல் வண்ணம். அலகு கறுப்பு. கால்கள் பழுப்பு. விழிப்படலம் வெளிர் பழுப்பு. வயிறும் வால் அடியும் அழுக்கு வெள்ளை.

* மனிதர்கள் வாழும் இடங்கள் மட்டும் இன்றி காடு, வயல் வெளிகளிலும் மண்டிக் கிடக்கும், பூச்சி, புழு, சிறிய கரப்பு, பாச்சை, கட்டெறும்பு, சிறிய பல்லிகள், தானியம்என்று எது கிடைத்தாலும் தின்னும்.

* வீட்டு மூலைகள், கம்ப உச்சிகள், டெலிபோன் கம்பங்கள் என்று எதில் வேண்டுமானாலும் கூடு கட்டும். மூன்று முதல் நான்கு முட்டை இடும்.

* இது பறக்கும், தாவும், தத்தும். காகம், கோழி, புறாக்களைப் போல் இது நடக்காது. தத்தும். நடக்க ஏற்றபடி இதன் உடலமைப்பு இல்லை.



எங்கள் ஊரில் நடந்தது


ஒரு வயசுக்கு ஒரு இட்லி!

நண்பனின் தம்பிக்கு ஐந்து வயது. அவன் சாப்பிட அடம்பிடித்துக் கொண்டிருந்தான். நண்பன், "உனக்கு ஐந்து வயசாகுது. ஒரு வயசுக்கு ஒரு இட்லின்னா கூட ஐந்து வயசுக்கு நீ ஐந்து இட்லி சாப்பிடணும்" என்றான். உடனே தம்பி "அப்படீன்னா உனக்கு ஒன்பது வயசாகுது. நீ ஒன்பது இட்லி சாப்பிடணும். அம்மாவுக்கு முப்பது வயசாகுது. அம்மா முப்பது இட்லி திங்கணும். அப்பாவுக்கு முப்பத்தைந்து வயசாகுது அவர் முப்பத்தைந்து இட்லி திங்கணும். சரியா?" என்றானே பார்க்கலாம்! அவனுடைய பேச்சு சாமர்த்தியத்தை எண்ணி அனைவரும் வியந்தோம்.

எஸ். தட்சிணா மூர்த்தி, நாகலூர்.



காது குடையலாம்!




எங்கள் அறிவியல் ஆசிரியர் மிகவும் அன்பாகப் பழகுவார். வேடிக்கையாகவும் பேசுவார். அதேபோல் அவர் ஏதாவது கேள்வி கேட்டால் கூட நாங்களும் கிண்டலாகப் பதில் சொல்லுவோம். அந்த அளவு நல்லவர். ஒருநாள் வகுப்பில் மாணவர்களிடம் "கோழியின் பயன் என்ன?" என்று கேட்டுவிட்டு, "ஆளுக்கு ஒரு பயன் கூறினால் போதும்" என்றும் கூறினார். ஒவ்வொருவரும் ஒவ்வொன்று கூறினர். ரமேஷ் என்ற குறும்புக்கார மாணவன் எழுந்து, "கோழியின் இறகால் காது குடையலாம் சார்!" என்றானே பார்க்கலாம். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரிப்புக் கடலில் மூழ்கினோம்!

ஆ. சுந்தர்ராஜன், சோழன்மாளிகை.


பாதிப்பகம்!

எங்கள் ஆங்கில ஆசிரியர் "Letter to a book Company" என்னும் கட்டுரையை எழுதிப் போட்டார். அதில் "Thillai pathippakam"(தில்லை பதிப்பகம்) என்னும் பதிப்பகத்தின் பெயர் வந்தது. எல்லோரும் எழுதிக் கொண்ட பின்பு ஆசிரியர் "ஒவ்வொருவராக எழுந்து நின்று வாசியுங்கள்" என்று சொன்னார். முதலில் ஒரு மாணவன் முந்திக் கொண்டு எழுந்துநின்று படிக்க ஆரம்பித்தான். "தில்லை பதிப்பகம்" என்ற பெயர் வந்தவுடன் "தில்லை பாதிப்பகம்" என்றானே பார்க்கலாம்! ஒரே சிரிப்....

இராம.ஜெயகாந்தன், துத்திப்பட்டு



என்ன பிடிக்கும்?




தீபாவளிக்கு அண்ணன் வீட்டிற்குப் போயிருந்தேன். என் அண்ணியார் முறுக்கு அதிரசம் பூந்தி போன்ற பலகாரங்களை எனக்குக் கொடுத்தார். "எதுவும் வேண்டாம்" என்று சொன்னேன். "ஏன் வேண்டாம்?" என்று அண்ணி கேட்டார். "எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை" என்று சொன்னேன். அண்ணிக்குக் கோபம் வந்து விட்டது. "உனக்கு எதுதான் பிடிக்கும்?" என்று கேட்டார். உடனே நான் "ஜலதோஷம் தான் பிடிக்கும்" என்று சொன்னேன். அண்ணியார் கோபம் மறந்து சிரித்து விட்டார். எல்லோரும் சேர்ந்து கொண்டோம்!

நா.சாந்தி, சோழன்மாளிகை

லட்சுமி ஆண்ட்டி வரலியா?

என் சித்தி பெண் அஞ்சலியுடன், சமீபத்தில் ஒரு நண்பன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு தொழுவத்தில் மாடு இருந்தது. பசுமாட்டைப் பார்த்து, "இது என்ன மாடு?" என்றாள் அஞ்சலி. 'பசு மாடு' என்றேன். அதன் அருகிலேயே காளை மாடு நின்றிருந்தது. 'இது?' என்றாள். "இது காளைமாடு, இந்த பசுமாட்டோட ஹஸ்பண்டு", என்றேன். நண்பரும் 'இந்தப் பசுமாடு பேரு லட்சுமி, இது பேரு பசுபதி" என்று அவர்கள் பெயரிட்டிருந்ததைக் குறிப்பிட்டார். பிறகு வந்து விட்டோம். ஒரு வாரம் கழித்து என்னைத் தேடிக் கொண்டு என் நண்பன் ஒருவன் வந்தான். அவன் பெயர் பசுபதி! அஞ்சலி அவனிடம் "ஏங்க அங்கிள், லட்சுமி ஆண்ட்டி வரலியா?" என்று கேட்டாள். எங்களுக்கு




அவள் என்ன கேட்கிறாள் என்பது புரிந்து விட்டது. ஆனால் பாவம். நண்பனுக்குப் புரியவில்லை. வீடே சிரிப்பலையில் மிதந்தது.

ஸ்ரீநிவாஸ் பிரபு. சென்னை.

மாம்பழம்தான் தெரியும்...

கோடை விடுமுறையில் என் மாமா வீடு சென்றிருந்தேன். காலை செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது, இரண்டாம் வகுப்புப் [illegible] என் மாமா மகன் [illegible],



என்னிடம் கணக்குப் புத்தகத்துடன் வந்து, "நாலு திராட்சையும், இரண்டு திராட்சையும் சேர்ந்தால் எவ்வளவு வரும்?" என்று கேட்டான்.

"இத்தனை சுலபமான கணக்குக் கூடவா உனக்குத் தெரியவில்லை? இது போன்ற கணக்கை நீ இதுவரை போட்டதில்லையா?" என்று பதிலுக்குக் கேட்டேன். அவன், "இல்லை, மாம்பழங்களை வைத்துத் தான் இது போன்ற கணக்கைப் போட்டிருக்கோம்... ஆனா திராட்சை போடலையே?" என்றான் பால்வடியும் முகத்துடன். அதைக் கேட்டு நான் சிரித்தேன்.

கி.சிவா, சென்னை-116

எலி எங்கே?


எங்கள் பள்ளி ஓவிய ஆசிரியர் ஆளுக்கொரு ஓவியத்தை வரைந்து கொண்டு வரச்சொன்னார். ராஜா என்ற மாணவன்தான் அருமையாக வரைவான். மறு நாள் அனைவரும் ஒவ்வொரு படம் வரைந்து கொண்டு வந்திருந்தனர். ராஜாவும் பிள்ளையார் படத்தை மிக அருமையாக வரைந்து கொண்டு வந்திருந்தான். ஆனாலும் அதில் தவறு கண்டு பிடித்த ஆசிரியர் "ஏண்டா, விநாயகருக்கு வாகனம் போடலையே? எங்கே!" என்று கேட்டார். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "பிள்ளையார் பிளேக்குக்குப் பயந்து எலியைத் துரத்தி விட்டார் சார்!" என்றவுடன் வகுப்பறையே சிரிப்பொலியில் மூழ்கியது.

கே.ஜெகன்நாதன், அனந்தபுரம்.



பயம்

இரவு நேரம். தந்தை கூறிய பாம்பு பற்றிய கதைகள் தூங்கும் போதும் நினைவில் வந்து கொண்டே இருந்தன. பயமாக இருந்தது. நடு இரவில் தாகம் எடுக்க அடுக்களைக்குச் சென்று தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பினேன். இருட்டில் பாம்பு போன்று ஏதோ காலில் பட்டது. நடுங்கிப் போனேன். பயத்தால் வியர்த்தது. விளக்கை ஏற்றிய பிறகுதான் அது கயிறு என்று தெரிந்



தது. எனது அசட்டுப் பயத்தை நானே திட்டிக் கொண்டேன்.

பா.சரவணகுமரன், திருக்கண்ணங்குடி.

நிறுத்துவதற்காக!

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் சிறுவனுக்கு "விரல் சப்பும்" பழக்கம் உண்டு. பல முறை கண்டித்தும் அவன் நிறுத்த வில்லை. ஒருநாள், சப்பும் விரலில் விளக்கெண்ணெயைத் விட்டார்கள். அதன் கசப்பினால் சப்புவதை நிறுத்தி விடுவான் என்று எண்ணினார்கள். தொடர்ந்து விளக்கெண் ணெயைத் தடவிக் கொண்டே இருந்தார்கள். ஒரு வழியாக அந்தப் பழக்கம் நின்றது. அவன் வீட்டில் ஆறுமாதக் குழந்தை ஒன்று இருக்கிறது. ஒரு நாள் அந்தக் குழந்தையின் அழுகுரல் கேட்டு எல்லோரும் ஓடி வந்து பார்த்தனர். குழந்தையின் உடம்பெல்லாம் பிசுபிசு வென்று ஒரே எண்ணெய். பக்கத்தில் நின்றிருந்த சிறுவன், "பாப்பா விரல் சப்பிக் கொண்டிருந்தது. அதை நிறுத்துவதற்காக நான் கையில் எண்ணெய் ஊற்றினேன்" என்றானே பார்க்கலாம்!

நாகராஜன், மேலப்பாதி.



அம்மா தண்ணி கொண்டுவா!

அப்ப திருச்சில ஆறாவது படிச்சிக்கிட்டு இருந்தேன். வீட்டுலேருந்து பள்ளிக்குப் போக பஸ்ல முக்கால் மணி நேரம் பயணம் செய்யணும். திரும்பி வரும்போது அந்த முக்கால் மணிநேரத்துல நாற்பது நிமிஷம் நல்லா தூங்கிடுவேன். தினமும் தூங்குவதால் கண்டக்டர் எங்க ஊர் வந்த உடனே சத்தம் போட்டு எழுப்பி விட்டு விடுவார். அப்படி ஒருநாள் நல்லா தூங்கறப்ப ஒரு கனவு. ஏதோ எழுதிக்கிட்டு இருக்கேன். எழுதிக்கிட்டு இருக்கறப்ப எங்கம்மாவைத் தண்ணீர் கொண்டு வரச் சொல்றேன். இரண்டு [illegible] கூப்பிட்டுப்



பார்க்கறேன். அப்பவும் வரலே. மூணாவது தடவை "எவ்வளவு நேரமா தண்ணி கேட்கறேன்? அம்மா தண்ணி கொண்டுவா. காதுல விழுதா இல்லியா?" என்று இயல்பா கத்திட்டேன். கத்தினப்புறம் தான் தெரிஞ்சது, அது வீடு இல்லே பஸ்ஸுன்னு! நாம கண்டது கனவுன்னு தெரிஞ்சது. எல்லாரும் என்னைப் பார்த்து சிரிச்சுக்கிட்டே இருந்தாங்க. அன்னிலேர்ந்து பஸ்ல தூங்கறதை விட்டுட்டேன்.

ஆர்.கோவிந்தராஜன், திருச்சி.

நேர்மையின் பரிசு!

முருகன் மிகவும் அடக்கமானவன். மிகவும் நேர்மையானவன். அவனுக்கு சிறிது நிலம் இருந்தது. அந்த நிலத்தில் உழுது பிழைத்து வந்தான். அவ்வூரிலேயே கண்ணன் என்பவனும் வாழ்ந்து வந்தான். அவனுக்கு முருகனுடைய நிலத்திற்கு அருகாமையில் நிலம் சிறிது இருந்தது.

முருகன் தன் வயலை உழுது கொண்டிருக்கும் போது பொற்காசுகள் கொண்ட குடத்தைக் கண்டான். எனினும் அந்தப் பொற்காசுகளைத் தானே வைத்துக் கொள்ளாமல் அரசனிடம் கொண்டு சென்று கொடுத்தான். அரசனும் முருகனுடைய நேர்மையைக் கண்டு பொற்குவியல் களை அவனிடமே திருப்பித் தர முடிவெடுத்தார்.

இதனை அறிந்த கண்ணன் அரசனிடம் சென்று "பொற்குடம் தன்னுடைய நிலத்தில் இருந்தது என்றும் அதனை முருகன் எடுத்துக் கொண்டான் என்றும் முறையிட்டான்.

அரசர் மிகவும் புத்தி கூர்மையானவர். மறுநாள் முருகனையும், கண்ணனையும் அழைத்து "யாருடையது பொற்காசுகள் கொண்ட பொற்குடம்



என்று கூறி ஒப்புக் கொண்டு விடுங்கள். நானே உண்மை யைக் கண்டு பிடித்து விட்டால் சிறைத் தண்டனை உண்டு" என்றார்.

சற்றும் காலம் தாழ்த்தாமல் கண்ணன் "பொற்குடம் என்னுடையது" என்று எதற்கும் அஞ்சாமல் கூறினான்.

உடனே அரசர் "அப்படியானால் பொற்குடத்தில் உள்ள காசுகளும் உன்னுடையதா?" என்றார். "ஆம் அரசே" என்றான் கண்ணன்.

"அப்படியானால் நீதான் திருடன். முன்பு நம் அரண்மனையில் காணாமல் போன பொற்காசுகளை நீதான் திருடி உன் நிலத்தில் புதைத்து வைத்திருக்கிறாய். இவைதான் அந்தக் காசுகள்" என்றார் அரசர்.

உடனே கண்ணன் பரபரப்புடன், "இல்லை அரசே. அந்தப் பொற்குடம் முருகனுடைய நிலத்தில் தான் இருந்தது. அவனே குற்றவாளி" என்றான்.

"அப்படியானால் பொற்குடம் உன்னுடையது இல்லை என்கிறாயா?" என்றார் அரசர்.

"ஆம் அரசே" என்றான் கண்ணன்.

இவனை சிறையில் அடையுங்கள். அரண்மனையில் எதுவும் திருடுபோக வில்லை உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்கவே நான் பொய் கூறினேன்" என்றார் அரசர்.

நேர்மையான முருகனைப் பாராட்டி அவனுக்கு அப்பொற் காசுகளை தந்தார். மேலும் அவனை அரண்மனைப் பணியில் அமர்த்திக் கொண்டார்.

— ரா. முத்துச் செல்வன்.

கதையை முடியுங்கள் போட்டி

சிவகுமாருக்கு இன்னொரு பெயர் செருப்புத் திருடன். திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் போனால், முன்னதாகவே கிளம்பி நல்ல செருப்பைத் திருடிக் கொண்டு வந்து விடுவார். அவருக்கு நினைவு தெரிந்து, காசு கொடுத்து அவர் செருப்பு வாங்கியதே இல்லை! ஆனால் அவரிடம் ஒரு நல்ல குணம். வேண்டும் என்றே திருடமாட்டார். போட்டிருக்கும் செருப்பு தேய்ந்து தூர வீசி எறியும் அளவுக்குப் பழசாகிப் போன பிறகுதான் வேறு ஒன்றைத் திருட முற்றுகை இடுவார்.

ஒரு மாதமாகவே சிவகுமார் போட்டுக் கொண்டிருந்த செருப்பு மிகவும் தேயத் தொடங்கி விட்டது. சரி, இனிமேல் தாங்காது. ஏதாவது கல்யாணத்துக்குப் போய், புதிய செருப்பைத் திருடிக் கொண்டு வர வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார். வாய்ப்புக்காகக் காத்திருந்தார். உறவினர் ஒருவர் வீட்டுத் திருமணம் பக்கத்து ஊரில். மறுநாள் மனைவியைக் கூட்டிப் போவதாகக் கூறிவிட்டுத்தான் மட்டும் முந்தின நாளே மாப்பிள்ளை அழைப்புக்குப் போனார். நல்ல கூட்டம். நல்ல காலம். செருப்புக்கு டோக்கன் தரும் ஏற்பாடு இல்லை. வாசல் நடையில் ஒரு சிமெண்ட் பெஞ்சிக்குக் கீழே திருமணத்திற்கு வந்தவர்களின் செருப்புகள் குவிந்திருந்தன. வலது சுவர்ப்பக்கம் ஓரமாக ஒரு ஜோடி கறுப்புப் பட்டை போட்ட செருப்பு கிடந்தது. தனக்குப் பொருத்தமாக இருக்குமா என்பதை உறுதி செய்து கொள்ள, பெஞ்சியில் உட்கார்ந்து, காலை ஆட்டிப் பார்த்து, கண் அளவில் உறுதி செய்து கொண்டு உள்ளே போனார்!

முதல் பந்தியில் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு விட்டு தாம்பூலம்



எடுத்துக் கொள்ளப் போனார். 'பட்'டென்று விளக்குகள் அணைந்தன. சத்திரத்தில் ஒரே இருள்! ஒரே களேபரம். சிவகுமார் தட்டுத் தடுமாறி வாசலுக்கு வந்தார். கால்களை பெஞ்சிக்கடியில் நுழைத்து, சுவர் ஓரமாக இருந்த ஜோடி செருப்பில் மாட்டிக் கொண்டு கிளம்பினார்.

இதற்கு மேல் கதையை நீங்கள் தான் முடிக்க வேண்டும். எங்கே உங்கள் கற்பனையை ஓடவிடுங்கள். ஒரு இன்லேண்ட் கவரில் மீதிக் கதையை எழுதி, உங்கள் பெயர், வயது, முகவரி, பின்கோடு உட்பட விவரங்களைக் குறிப்பிடுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் கண்டிப்பாகத் தங்கள் தொடர்பு முகவரியைத் தரவேண்டும். முடிவு தேதி 31.5.95. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. இங்கே உள்ள முகவரிக் கூப்பனைக் கத்தரித்து, இன்லேண்ட் உறையில் முகவரிக்கான இடத்தில் ஒட்டி அனுப்பிவிடுங்கள். முகவரிக் கூப்பன் இல்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா.

M A Y '95	பெறுநர், ஆசிரியர் : கோகுலம் 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

நல்லா வெழும் போடாஜான்!

அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் கதை - I



அன்று மழையின் காரணமாக அறிவு வேலைக்குச் செல்லவில்லை. அதனால் அவனுக்கு அன்றைய பொழுதைக் கழிப்பது மிகவும் சிரமமாகவே இருந்தது. பக்கத்து போர்ஷனில் ரேடியோ ஏதோ ஒரு பாட்டை அலறிக் கொண்டிருந்தது. பொழுதைக் கழிக்காமல் திண்டாடிய அவன் அந்தப் பாட்டைக் காது கொடுத்து ரசிக்க ஆரம்பித்தான். பாட்டு திடீரென்று நின்றது. "இனி முக்கிய



அறிவிப்பைக் கேட்கலாம்" என்ற அறிவிப்பு வந்தது.

"அறிவிப்பு" என்றதும் அறிவு அதைக் கேட்கத் தயாரானான். அறிவிப்புத் தொடர்ந்தது. "பொது மக்களே, வங்கக் கடலின் நடுவில் மையம் கொண்டிருந்த புயல், நாளைக் காலை ஒன்பது மணியளவில் கரையைக் கடக்கக்கூடும். இதன் காரணமாக பலமான மழையும் பெய்யக்கூடும். ஆதலால், தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படி எச்சரிக்கப்படுகிறார்கள்" என்று அறிவிப்பு முடிந்து, பாடல் தொடர்ந்தது.

அந்த அறிவிப்பைக் கேட்ட பிறகு அறிவுக்கு மறுபடியும் பாடலைத் தொடர்ந்து கேட்கப் பிடிக்கவில்லை.

நாளை காலை ஒன்பது மணிக்குப் புயலடிக்கப் போகிறது. இந்

பா. சரவணகுமரன்

தப் பட்டிக்காட்டு ஊரிலுள்ள பாதி மக்களின் வீடு, சாதாரணமான காற்றுக்குக் கூடத் தாக்குப்பிடிக்காத குடிசை வீடுகள்தான். புயல் அடித்தால் எல்லா வீடுகளும் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போய் விடும் என்று எண்ணிய அறிவு, தனது வீடும் கூடக் கூரை வீடுதான் என்பதை மறந்து, மற்றவர்களைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தான்.


அறிவு என்றழைக்கப்படும் அறிவழகனுக்குப் பதிமூன்று வயதாகிறது. தனது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக அவனால் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிப்பைத் தொடர முடியவில்லை.

சிறு வயதிலேயே தந்தையை இழந்த அவனை, அவனது தாய்தான் இரண்டு, மூன்று வீடுகளில் வீட்டு வேலை செய்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தாள். அவனது வறுமை நிலை தொடர்ந்ததால் அறிவை அதற்கு மேல் அம்மாவால் படிக்க வைக்க முடியவில்லை.

அதனால், அறிவு தனது பதினோறாவது வயது முதல் பக்கத்து வீட்டு மணியனோடு சேர்ந்து கூலி வேலை செய்து சம்பாதிக்கிறான்.

யாராவ்து ஒரு பிச்சைக்காரனைக் கண்டால் கூட உடனே அறிவின் மனம் ஊற்றாகி விடும். அவனுக்குப் பத்து காசு போடாமல் அவ்விடத்தை விட்டு நகர அவனது மனம் முன்வந்ததில்லை. சிறு வயதில் இருந்தே அறிவு இப்படித்தான். மற்றவர் துன்பம் கண்டால் அவன் உருகிப்





போவான். மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அளவுக்கு தனக்கு வசதி இருக்கிறதா என்பதையெல்லாம் அவன் யோசிக்கவே மாட்டான். தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து மகிழ்வான்.

அப்படிப்பட்ட அறிவு, நாளை புயலும் மழையும் அடிக்கப் போகிறது என்பதை அறிந்த பிறகு சும்மா இருப்பானா? நாளை அடிக்கப் போகும் புயலின் போது, அதன் பாதிப்பு ஏதும் இல்லாது பொது மக்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற கேள்வி அவனுள் எழுந்தது. நெடுநேரம் யோசித்தவனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது.

அந்த ஊரிலேயே மிகவும் பெரிய வீடு என்பது பெரும் பணக்காரரான முத்தையனின் வீடுதான். பொது மக்கள் பாதுகாப்பா சுத்தங்க அதுதான் போதுமானது. அதனால் முத்தையனிடம் சென்று உதவி கேட்டுப் பார்க்கலாம் என்று எண்ணினான். ஆனாலும், சற்றுத் தயங்கினான். அதற்குக் காரணமும் இருந்தது.

அறிவு வீட்டிற்கு அருகே உள்ள குளத்தை கிராமத்துப் பஞ்சாயத்தார் குத்தகைக்கு விட அறிவிப்புச் செய்திருந்தனர். முத்தையன் அதைத் தானே மிகவும் குறைந்த குத்தகைக்கு எடுக்கலாம் என்று நினைத்திருந்தார். அந்தச் சமயத்தில் அவர் சற்றும் எதிர்பாராதபடி மற்றொருவர் இவரை விட அதிகமான தொகைக்குக் கேட்டு குளத்தைக் குத்தகைக்கு எடுத்து விட்டார்.

சாதாரணமாக முத்தையன்தான் மிகக் குறைந்த

தொகைக்குக் குளத்தைக் குத்தகைக்கு எடுப்பார். அவரை எதிர்த்துக் கேட்க சுற்று வட்டாரத்தில் ஆள் வர மாட்டார்கள். ஆனால் அந்த முறை எதிர்பாராதது நடந்து, முத்தையனின் குத்தகை பறி போய் விட்டது. இது முத்தையனின் செல்வாக்கை மிகவும் பாதித்தது.

குத்தகை எடுத்தவனுக்கு எப்படியாவது தொந்தரவு கொடுக்க எண்ணிய முத்தையன் இரவோடு இரவாக குளத்தில் மருந்தைக் கரைத்து அதில் உள்ள மீன்களை மடியச் செய்யத் திட்டம் போட்டார். நடு இரவில் மருந்தைக் கரைக்கும் சமயத்தில் வெளியில் தற்செயலாக வந்த அறிவு அதைப் பார்த்து விட்டான். உடனே இரவென்றும் பாராமல் பஞ்சாயத்துத் தலைவரிடம் ஓடி இந்த அநியாயத்தைக் கூறி விட்டான்.

உடனே ஆட்களுடன் அங்கு விரைந்த பஞ்சாயத்துத் தலைவர் முத்தையனைக் கையும் களவுமாகப் பிடித்தார். காலையில் பஞ்சாயத்தைக் கூட்டி மீன்கள் இறப்பதற்குக் காரணமாகி விட்ட முத்தையனுக்கு பெரிய தொகையை அபராதமாக விதித்து, குத்தகை எடுத்தவனுக்கு உரிய நஷ்டஈடும் வழங்க உத்தரவு பிறப்பித்தார்.

பஞ்சாயத்துத் தலைவரிடம் கூறியது அறிவுதான் என்பதை அறிந்த முத்தையன் அறிவின் மேல் பகை கொண்டார். அன்று முதல் அவனைக் கவிழ்க்க பல் வேறு சூழ்ச்சிகளைக் கையாண்டார். ஆனால், அறிவு அவற்றிலிருந்து திறமையாகத் தப்பி வந்தான்.

பகையாகி விட்ட இப்படிப்பட்ட முத்தையனிடம், தான் சென்று உதவி கேட்டால் நிச்சயமாக மறுப்பார் என் பதை அறிவு எதிர்பார்த்தாலும், பொதுக் காரியம் என்பதால் எதற்கும் கேட்டுப் பார்க்கலாம் என்று முத்தையன் வீட்டை நோக்கி விரைந்தான்.

அறிவைக் கண்டதுமே முத்தையன் வெறுப்பை உமிழ்ந்தார்.

"டேய் அறிவுக் கொழுந்து, அங்கேயே வாசற்படியிலேயே நில்லு. அதற்கு மேலே ஒரு அடி உள்ளே எடுத்து வச்சாக் கூட நான் பொல்லாதவனாயிடுவேன். என்னடா வேணும் உனக்கு?" என்று இரைந்தார். பேச்சில் கனல் பறந்தது.

"பொது மக்கள், ஒருநாள் புயலின் கொடுமையில் இருந்து பாதுகாப்பாகத் தங்க உதவ வேண்டும்" என்று வேண்டினான் அறிவு.

அவர் மறுத்து விடக் கூடாது என்ற துடிப்பில் முத்தையனின் கட்டளையை மீறி அவரது வீட்டிற்குள் சென்று அவரது கால்களைப் பிடித்தும் கூடக் கெஞ்சினான் அறிவு.





"பெரிய விவேகானந்தர்னு மனசுல நினைப்பு. எந்தப் பரதேசிகளுக்கோ பாது காப்பு வேணும்னா என் வீடுதானா கிடைச்சது? ஏண்டா, உன்னோட அரண்மனையிலேயே கூட்டிக் கொண்டு போய் வைச்சுக்கறதுதானே? போடா நாயே!" என்று முத்தையன் அறிவை எட்டி உதைத்தார். கழுத்தில் கைவைத்து நெட்டித் தள்ளினார். அறிவுக்கு அதற்கு மேல் அங்கு தாக்குப்பிடிக்க முடிய வில்லை. தலைகுனிந்து மௌனமாக வெளியேறினான்.

முத்தையன் கழுத்தைப் பிடித்துத் தள்ளி விரட்டியடித்ததிலிருந்து அறிவின் மனம் நெருப்பாகியது. தன்னை விரட்டி யடித்த இந்த முத்தையனின் முகத்தில் கரி பூச வேண்டும் என்பதற்காகவாவது இந்த நிராதரவான மக்களை எப்பாடு பட்டாவது நிச்சயமாகக் காப்பாற்ற வேண்டும் என்று உறுதியெடுத்தான்.

அந்த ஊரில் ஐந்தாம் வகுப்பு வரை யில் ஒரு ஆரம்பப் பள்ளி இருந்தது. அது இந்த குடிசைவாழ் மக்கள் தங்கப் போது மானது. ஆனால், அது விடுமுறை நாள் ஆயிற்றே? பள்ளி பூட்டிக் கிடந்தது. அதன் சாவி, தலைமை ஆசிரியரிடம் தான் இருக்கும். அவர் வீடு எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிராமத்தில் இருந்தது. அங்கே போய் இத்தனை குறு கிய காலத்திற்குள் எப்படிச் சாவியை வாங்கி வருவது?

அறிவு தயங்கவில்லை. ஒரு வாடகை சைக்கிளை எடுத்துக் கொண்டு எதிர்க் காற்றில் விரைந்தான். சைக்கிளை மிதிக்க சிரமமாக இருந்தாலும், நிராதர வான மக்களுக்கு உதவப் போகிறோம் என்ற நினைப்பு ஒரு வெறியைத் தந்தது.

யார் யாரிடமோ விசாரித்துக் கொண்டு ஆசிரியரின் வீட்டை ஒருவழி யாகக் கண்டுபிடித்தான். அவரைப் பார்த்து, தன் ஊர் மக்களின் நிலையை எடுத்துக் கூறி உதவி செய்யும்படி கேட் டான்.

ஆசிரியர், அவனுடைய உதவி செய் யும் மனப்பான்மையைப் பாராட்டி மகிழ்ந்து சாவியைக் கொடுத்தார். அறிவு சைக்கிளில் வேகமாக ஊர் திரும்பி னான்.

காலையிலேயே காற்று சற்றுப் பல மாக வீசத் தொடங்கி விட்டது. அறிவு மின்னல் வேகத்தில் இயங்கினான். பள் ளியைத் திறந்து விட்டு மக்களை அழைத்து வந்து பத்திரமாக இருக்க வைத்தான். அவர்களுள் தங்கம்மா என்று ஓர் ஆயா. கண்பார்வை இல்லா தவள். மகளும் மருமகளும் மட்டும். அவர்களும் வேலைக்குப் போயிருந்த னர். அதனால், அந்த தங்கம்மா ஆயாவை அவனே தூக்கிக் கொண்டு வந்து பள்ளியில் தங்க வைத்தான்.

காற்று "ஊஊ" என்று ஊளையிட்டு பலத்த வேகத்துடன் அடிக்க ஆரம்பித்து விட்டது. இதில் நாம் சிக்கியிருந்தால் எந்த நிலைமைக்கு ஆளாகியிருப்போம். அந்த நிலை வராமல் உதவி செய்தது அறிவுதானே என்றெண்ணிய மக்கள் அவனைப் பாராட்டினர். அறிவுக்குக் கோடி விண்மீன்களைக் கோத்துக் கழுத்தில் போட்ட மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்பட்டது.

புயல் நான்கு மணி நேரம் அடித்து இறுதியில் ஓய்ந்தது. மக்கள் தங்கள் குடிசைகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை அறிய விரைந்தனர்.

மனமகிழ்ச்சியுடன் தன் குடிசைக்குத் திரும்பிய சிறிது நேரத்திற்கெல்லாம், "டேய்! வாடா வெளியே" என்ற ஆர்ப்பாட்டமான குரல் கேட்டு வெளியே வந்தான் அறிவு.

தங்கம்மா ஆயாவின் மகன் பொன்னுசாமி கோபாவேசத்தில் நின்றிருந்தார்.

"என்னடா மோசடி பண்றே! நீதானே கண்ணுத் தெரியாத எங்கம்மாவைத் தூக்கிக் கூட்டி வந்தே? அவளுடைய இரண்டு பவுன் சங்கிலியை அபேஸ் பண்ணிக்கிட்டு நல்லவன் மாதிரி நாடகமா போடறே?"

அறிவு பதைபதைத்தான். "அண்ணே, குடிசையைப் பூட்டி ஆயாவைத் தூக்கிக் கொண்டு கூட்டி வந்தது நான்தான். ஆனால் சங்கிலியை நான் பார்க்கவே இல்லேண்ணா" என்று கெஞ்சினான்.

"சின்ன பாட்டிலுக்குள்ள போட்டு, கோல மாவு டப்பாவுக்குள்ள ஒளிச்சு வைச்சிருந்தேண்டா. ஒருத்தருக்கும் தெரியாது. திருட்டுப் பய, நீ மட்டும் எப்படியோ அதைத் தெரிஞ்சுக்கிட்டு, நாடகமாடி, திருடிக்கிட்டே! அந்த பாட்டிலையே கோலப் பொடி டப்பாவுல காணமே!" பொன்னுசாமி கனலைக் கொட்டினார்.

"எனக்குத் தெரியாது அண்ணே. நான் நல்ல தூய எண்ணத்துடன்தான், எந்தவிதமான எதிர்பார்ப்பையும் இல்லாது பண்ணின காரியம் அண்ணே இது" என்று அழுதான் அறிவு.




பொன்னுசாமி விடவில்லை. கழுத்தை நெட்டி இழுத்துக் கொண்டு போனார். பஞ்சாயத்துக் கூடியது. அறிவை விசாரித்தது. சூழ்நிலை அறிவுக்கு எதிராக இருந்தது.

இன்னும் ஒரு வாரத்திற்குள் சங்கிலியை அறிவு திருப்ப வேண்டும். அல்லது ஏழாயிரம் ரூபாய் அவன் பொன்னுசாமிக்குத் தர வேண்டும். தவறினால் போலீசில் புகார் கொடுத்து, அவனை ஒப்படைத்து விடுவதாக பஞ்சாயத்துத் தலைவர் தீர்ப்பளித்தார்.

அறிவு ஏழாயிரம் ரூபாய்க்கு எங்கே போவான்? அழுவதைத் தவிர எதுவும் தோன்றவில்லை.

"இந்த அன்னக்காவடி கூலிப்பய, தானா ஏழைங்களுக்கு உதவறேன்னு முன்வந்தப்பவே, இதில் ஏதோ மோசடி பண்ணப் போறான்னு நினைச்சேன்.



அது சரியாப் போச்சு. நல்லவன் மாதிரி நடிச்சு, நல்லா வேஷம் போடறான்'' என்று கூறிப் பெரிதும் மகிழ்ந்தார் முத்தையன்.

இரண்டு நாட்கள் ஓடின. ஊருக்குப் போயிருந்த பொன்னுசாமியின் மனைவி திரும்பி வந்தாள். நடந்ததை அறிந்ததும் அவள் பதறிப் போனாள்.

“சங்கிலி போட்ட பாட்டிலை கோல மாவு டப்பாவுல ஒளிச்சு வைக்கிறது பாதுகாப்பு இல்லேன்னு நான்தான் ஊருக்குப் போகும் போது அதை முருகன் படத்துக்குப் பின்னால், சுவத்துல வைச்சுப் பூசி வைச்சேன். இதோ பாருங்க'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

“ஐயோ, பெரிய தப்புப் பண்ணிட்டேனே'' என்று பதைபதைத்த பொன்னுசாமி ஓடினார்.

மறுபடி பஞ்சாயத்துக் கூடி அறிவைக் குற்றமற்றவன் என்று அறிவித்து, அவனுடைய தன்னலமில்லாத தொண்டைப் பாராட்டி மகிழ்ந்தது.

அறிவு முருகனைப் புகழ்ந்து பாட்டெல்லாம் பாடினான். நல்ல செயலை நாமும் செய்தால் எத்தனை துன்பம் வந்தாலும் இறைவன் நம்மை நிச்சயம் காப்பாற்றுவார் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தான் அறிவு.

ஒவ்வொரு ஊராகப் புயலால் மக்கள் பாதிக்கப்பட்டதைப் பார்வையிட்டு வந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த ஊரில் மட்டும் பாதிப்பு இல்லாததைக் கண்டு வியந்து அதற்குக் காரணம் அறிவு தான் என்பதை அறிந்து மகிழ்ந்து அவனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார். அதோடு அறிவு மேலே படிக்கவும் வழி செய்து, பெருமைப்படுத்தினார்.

கேட்கட்டுமா டாக்டர்?

● ஓ. சிவா, சென்னை - 116.


? ஒரு சிறுநீரகத்தைக் கொண்டு மனிதனால், உயிர்வாழ முடியும்போது ஏன் ஒரு நுரையீரலுடன் உயிர் வாழ முடிவதில்லை?

! மனிதன் ஒரு நுரையீரலுடன் உயிர் வாழ முடியாது என்பது தவறான தகவல். ஒரு சிறுநீரகத்துடன் உயிர் வாழ்வதைப் போல ஒரு நுரையீரலுடனும் மனிதர்கள் தாராளமாக உயிர் வாழ முடியும்.

● ஜெ. ஜம்மு, செம்பனார் கோவில்.

? எருமைப் பால் குடித்தால் மூளையின் சிந்தனை சக்தி குறைந்து விடும். உடம்பின் சுறுசுறுப்பும் குறைந்து சோம்பேறித்தனம் வளரும் என்கிறார்களே? இக்கூற்று உண்மையா டாக்டர்?

! உண்மைதான், ஜம்மு. பால் குடிக்கும் பருவத்தில் குழந்தைகள் தாய்ப்பால் குடிக்காமல் எருமைப்பால் மட்டுமே குடித்து வளர்ந்தால் அந்தக் குழந்தைக்கு மூளை வளர்ச்சியும் சிந்தனை சக்தியும் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. இதற்குக் காரணம் குழந்தைகளுக்கு மூளை நன்கு வளர்ச்சி பெறுவதற்கு அது குடிக்கும் பாலில் 6.5 சதவீதம் 'லாக்டோஸ்' (Lactose) எனும் சத்து இருக்க வேண்டும். இது தாய்ப்பாலில் 6.5% உள்ளது. ஆனால் எருமைப்பாலில் லாக்டோஸ் அளவு 4.8 சதவீதம்தான்! காரணம் புரிந்ததா?




● மு. ரொக்கியபீ, தக்கோலம்.

? திடீர் என்று என்னுடைய கை, கால்கள் மறத்து உணர்வில்லாமல் போய் விடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இது ஒரு நோயா? பின்விளைவு ஏற்படுமா?

! உடம்பில் ஏதாவது ஒரு பகுதிக்கு கைகளுக்கு அல்லது கால்களுக்கு - இரத்த ஓட்டம் சிறிது நேரம் தடைப்பட்டால் அவ்வுறுப்புகளில் உணர்வு குறைந்து விடும். இதற்கு 'மறத்துப் போதல்' என்று பெயர். இது தற்காலிக விளைவுதான். அந்த உறுப்புகளுக்கு மீண்டும் இரத்த ஓட்டம் செல்லத் தொடங்கியதும் மறத்துப் போவது மறைந்து விடும். பொதுவாக ஒரே இடத்தில் நெடுநேரம் உட்கார்ந்து கால்களை அசைக்காமல் அமர்ந்திருந்தால் கால்கள் மறத்து விடும். சிறிது நேரம் கால்களை நீட்டி நீவி விட்டு உதறினால் இரத்த ஓட்டம் சீரடைந்து கால்கள் பழைய நிலைக்குத் திரும்பி விடும். இது தவிர, சர்க்கரை நோய், தொழுநோய், வைட்டமின் B^{12} பற்றாக்குறை நோய் ஆகியவற்றாலும் நரம்புகள் பலவீனமடைந்து கை கால்கள் மறத்துப் போவ

ஒரு நுரையீரலுடன் வாழ முடியுமா?

துண்டு. விபத்துக்கு உள்ளானவர்கள் தலையில் அடிபட்டு மூளை, தண்டுவடம் பாதிக்கப்பட்டாலும் இம்மாதிரி நிகழ்வதுண்டு. குடிப்பழக்கம், புகை பிடிப்பது, போதை மருந்துகளை உபயோகிப்பது போன்ற தீய பழக்க வழக்கங்கள் உள்ளவர்களுக்கும் நரம்புகள் பழுதடைந்து உடம்பு மறத்துப் போவது வாடிக்கை. உங்களுக்கு அடிக்கடி உடம்பு மறத்துப் போனால் மருத்துவரிடம் சென்று காரணம் தெரிந்து, சிகிச்சை பெறுங்கள். இது எளிதில் குணமாகி விடும்.



● **ஜி. சத்தியநந்தன், சென்னை - 83.**

? காண்டாக்ட் லென்ஸ் அணிவதால் கண்ணுக்குக் கெடுதலா?

! காண்டாக்ட் லென்ஸை முறைப் படி பயன்படுத்தாவிட்டால் கண்ணுக்குக் கெடுதல் ஏற்படும். குறிப்பாக அது கண்களில் உறுத்தலை உண்டாக்கும். அடிக்கடி கருவிழியை விட்டு காண்டாக்ட்லென்ஸ் விலகிவிடும். இதனால் கரு விழியில் புண் ஏற்பட வாய்ப் புண்டு. என்றாலும் இதை சற்றுக் கவனத்துடன் கையாண்டால் இப்படித் தீய விளைவுகள் தோன்றுவதைத் தவிர்த்து விட முடியும்.



● **வி. கௌரி, சீர்காழி.**

? கொதிக்கும் நீர் உடம்பில் விழுந்தால் உடம்பு எரிகிறது. ஆனால், கொதிக்கும் எண்ணெய் விழுந்தால் அந்த இடம் கொப்பளிக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

! தண்ணீரை விட எண்ணெய்க்கு (density) அடர்த்தி அதிகம். அதனால் அதில் தங்கும் வெப்பச் சக்தியின் அளவும் அதிகம். எனவேதான் கொதித்த எண்ணெய் சிறிதளவு உடம்பில் பட்டாலும் அந்த இடம் உடனே கொப்பளித்து விடுகிறது.

டாக்டர் கு. கணேசன்

சிரிப்...



"உன்னோட ஸ்கூல் பையை விட 'விஷப் பை'தான் முக்கியம்... ஞாபகம் வெச்சுக்க!"

— கே. சோமசேகர்



"ஏண்டா சட்டையைக் கழட்டிட்டே?"
"புழுக்கம் தாங்கலைம்மா!"

— சீர்காழி. வி. ரேவதி




"இந்தப் பசு அம்மான்னு கத்தாம மம்மின்னு கத்துதே!"
"இது இங்கிலீஷ் பசு!"

— சீர்காழி. சாமா


"பையனுக்கு என்ன ஆச்சு?"
"தெரியாம விஷத்தை எடுத்துக் குடிச்சுட்டான்."

— கே. சந்தானராமன்




ரத்தினபுரி ரகசியம்-4


கதை: வாண்டுமாமா சித்திரம்: செல்வம்




மாரீசன் கண்டிப்பாக இருந்தான்.
ரதத்தில் சிறிது தூரம் போய் வருகிறேனே?
கூடாது. சுகேது ரதத்தில் போனார் - குடும்பக் கல்லறையை நோக்கி - மறந்துவிட்டாயா?
இருவரும் அரண்மனையில் அருகருகே உள்ள அறையில் தங்கினர். ஒருநாள் இரவு சகரன் தூங்கச் செல்லும்போது -
யார், மாரீசனா?
திடீரென்று அது நிகழ்ந்தது!
ஆஹ்ஹ் ...ஹா!
இளவரசே! என்னது? என்னை ஏன் அழைத்தீர்கள்?
எங்கே போனான் அவன் - என் மீது கோடரியை வீசிய கொடியவன்?


எங்கும் தேடினார்கள். யாரையும் காணவில்லை.
யாரோ இங்கிருக்கிறார்கள் - ரத்தமும் சதையுமாக என்னைக் கொல்ல வேண்டும் என்ற அளவுக்கு என்னை வெறுப்பவர்கள் யார்?
ஆ! இளவரசே... ஆண்டவா! இதோ கீழே பாருங்கள்.
சகரன் எட்டிப் பார்த்தான் நிலா முற்றத்தை. ஒரு விந்தை உருவம் அவன் பார்வையில் பட்டு மறைந்தது.
சற்றும் யோசியாமல் இளவரசன் சகரன் சாளரத்திலிருந்து கீழே குதித்தான்.
இளவரசே, வேண்டாம்.
அது உயிருள்ளதானாலும் செத்த சவமானாலும் அதைப் பின் தொடருவேன்
மாரீசனின் குரல் காதில் ரீங்கரிக்க சகரன் முற்றத்தில் குதித்தான்.
யுட்டா மன்னனின் பாடம் செய்யப்பட்ட உடலா!


வேகமாகச் சில தப்படிகள் ஓடிப் பிறகு ஒரே தாவலில் அந்த உருவத்தின் மீது தாவ- அவன் கைகள் சதையையும் எலும்பையும் ஸ்பர்சிப் பதை உணர்த்தின.
மாரீசா சீக்கிரம் ஓடிவா... பிடித்து விட்டேன்!
அடுத்த விநாடி சகரனின் உடலை ஏதோ தாக்க தாங்க முடியாத வலியுடன் நினை விழந்தான்...
ஆஹ்ஹ்ஹா!
மீண்டும் அவன் கண்விழித்தபோது அவன் தனியாக இல்லை.
என்ன நடந்தது? இள வரசனின் கூச் சலைக் கேட் டோமே.
இளவரசே... ஏதுமில் லையே...?
யாரோ - எதுவோ பின்னாலிருந்து என் தலையில் தாக்கினார்கள்.
நீங்கள் செய்தது முட்டாள்தனம் இளவரசே. உங்களைப் பற்றிய அக்கறை உங்களுக்கில்லாவிட்டாலும் என் நிலையை எண்ணிப் பாருங்கள். உங்களைப் பத்திர மாகக் காக்கும் பொறுப்பை அரசர் என்னிடம் ஒப்படைத்தி ருக்கிறார். தவறினால் என் தலைக்கு ஆபத்து.
என்னை மன்னி மாரீசா. என் பிடியில் அந்த உருவம் உன்னையும் என்னையும் போல ரத்தமும் சதையுமாக இருந்தது. சத்தியமாகச் சொல்கிறேன்.
அதுமட்டுமா? அதன் குரலை யும் கேட்டேன். அந்தக் குரலை முன்பு கேட்டிருக்கி றேன் - என் உயிர் மீது ஆணை.



மறுநாள் காலை இளவரசன் சகரனையும் மெய்க்காவலாளி மாரீசனையும் வரவழைத்தார் மன்னர் திலீபன்.
சகரா, நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். சாபத்தின்படி உனக்கு ஏதும் நேரக் கூடாது என்பதற்காக உன்னை ஒரு தீவுக்கு அனுப்பப் போகிறேன்.
திலீபனும் கௌதமரும் வகுத்த திட்டத்தின்படி சகரனும் மாரீசனும் அந்தத் தீவை நோக்கிச் செல்கின்றனர் படகில்...
அந்தத் தீவு வெகுதொலைவில் உள்ளதா?
மனித சஞ்சாரமில்லாத தீவு என்றார் அண்ணா.
வழக்கமான கப்பல் பாதையிலிருந்து தள்ளி வெகுதொலைவிலிருந்தது அத்தீவு.
பரவாயில்லை. சில காலம் தங்க வசதியோடு வந்திருக்கிறோம்.
கூடாரமிட்டு முகாம் அமைத்தபின் ஒருநாள்..
தீவைச் சுற்றிப் பார்க்கப் போகிறேன்.
சமையலை முடித்துவிட்டு நானும் உங்களோடு சேர்ந்து கொள்ளுகிறேன்.
சிறிது நேரத்துக்குப் பின் தீவின் மறுபக்கத்தில் ஒரு நிழல் நகருவதைக் கண்டு திரும்பினான்... சகரன்.
யார் அது?



மரணத்தை நேருக்கு நேர் சந்தித்த பயம் ஏற்படவில்லை சகரனுக்கு. வியப்பும் அதிர்ச்சியுமே ஏற்பட்டது.
நீயா...?
குத்துவாளின் மீது சூரிய ஒளிபட்டுக் கண்ணைக் கூச வைத்தது.
இத்தனைக்கும் பின்னால் இருப்பது நீதானா? என் மெய்க்காப்பாளனாக நியமிக்கப்பட்ட நீ - என்னைக் கொல்வதற்காக என்னுடன் இருக்கிறாயா?
சகரனின் பேச்சைக் கேட்ட மாரீசன் ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.
யுட்டாவின் சவப்பெட்டி மர்மம் என்ன?
சவம்?... ஹ...ஹ்ஹா !
இளவரசே இதில் நான் மட்டும் இல்லை... உன்னைக் கொல்ல வேண்டும் என்று எனக்கு ஆணையிடப்பட்டுள்ளது..ஆகவே... விடைபெற்றுக் கொள்ளுங்கள் இளவரசே!
குத்துவாளை மாரீசன் வீசக் கையை ஓங்கும் அதே வேளையில் சகரன் தரையில் உருண்டு ஒரு கல்லை எடுத்து.....



....வீசினான்.
ஆவ்வ்...வாவ்!
அடுத்து மின்னல் வேகத்தில் எழுந்து தன் முஷ்டியினால் அவன் முகவாயில் இடியை இறக்கினான்.
ம்ம்...ம்...மா!
நினைவற்றுக் கிடந்த மாரீசனையே உற்றுப் பார்த்த சகரனுக்கு ஒரு நினைப்பு பொறி தட்டியது.
அந்தக் குரல்! அந்தச் சவ உடலிலிருந்து வந்த அந்தக் குரல்... இப்போது தெரிகிறது அக்குரலை நான் முன்பு கேட்டிருப்பது...
மாரீசனைக் கயிற்றினால் பிணைத்துப் படகில் போட்டுக் கொண்டு திரிசூலை நோக்கிக் கிளம்பினான் சகரன்.
சீக்கிரம் போய் அண்ணாவை எச்சரிக்க வேண்டும். கடவுளே...! காற்று வேகமாக வீசாதா? தாமதம் விபரீதமாகிவிடுமே!





வழக்கப்படி அரசர் திலீபன், விசேஷப் பாதுகாப்பு ஏற்பாடு களுடன் படுக்கச் சென்றார்.
ரகசியத் தீவில் சகரன் என்ன செய்கி றானோ. நான் இறந்தாலும் திரிசூலத்தை ஆட்சி செய்ய அவன் மிஞ்சட்டும்.
படுக்கையில் படுத்தவர் சகரன் நினைவாகவே கண்ணயர்ந்தார்.
பலவிதங்களில் சகரன் முரடன். ஆனால் அரசபதவி அவன் குணத் தை மாற்றி, நல்ல அரச னாக்கிவிடும்.
நள்ளிரவின் இருள் கனத்தில் - படுக்கை அறையின் சுவரில் - ஓர் அமைப்பு நகர்ந்தது....
அந்த மௌன உருவம் தூங்கும் மன்னரை நோக்கி நகர்ந்தது....
ஒரு பேழையிலிருந்து எதையோ திலீபரின் தலையணையில் விட்டது.


அதேசமயம் மன்னரின் படுக்கை அறைச் சாளரத்தின் வழியே பாய்ந்து வந்து உள்ளே குதித்தான் இளவரசன் சகரன். திலீபரின் அருகே குனிந்து நின்ற உருவம் திடுக்கிட்டுப்பின்வாங்கியது...
ஹோ...! ஹா!
தூங்கும் மன்னரின் தலையருகே விஷச்சிலந்தியைக் கண்ட சகரன்- அதை ஒரே வீச்சில் அறையின் மூலைக்குத் தள்ளினான். மன்னரும் கண்விழித்தார்.
அந்தக் கொடிய பூச்சி உங்கள் உயிரைக் குடிக்க இருந்தது அண்ணா!
சகரா... நீ எப்படி இங்கே?
அந்த விந்தை உருவத்தின்பக்கம் திரும்பினான் சகரன். துணி சுற்றிய அதன் கையில் குத்துவாள் மின்னியது.
ஹா! என்றோ இறந்து பாடம் செய்யப்பட்ட யுட்டா தன் கையில் குத்துவாளுடன் உலாவுவார் என்று எதிர்பார்க்கலாமா!
பித்துக்குளியே பிதற்றாதே!


மறுவிநாடி அந்த உருவத்தின் மீது பாய்ந்து அதன் கைக்கத்தியைத் தட்டி விட்டு - அச்சமூட்டும் துணிச் சுற்றலை முகத்திலிருந்து நீக்கினான்.
விராதா! நீயா? நீ இறந்து விட்டதாக வல்லவா....?
அண்ணா, இத்தனை தொல்லைகளுக்கும் காரணம் இந்தக் கயவனே...
ஆம். யுட்டாவின் சாபத்துக்கு மற்றொரு பலியாகத் தான் இறந்துவிட்டதாக நம்மை நம்பும்படி செய்தான். யுட்டாவின் சாபத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திச் சூழ்ச்சி வகுத்தான்.
விராதா பேசு! உன்னிடமிருந்து முழுக் கதையையும் அறிய விரும்புகிறேன்.
விராதன் வாய் திறக்காது போகவே - கொடிய குற்றவாளிகளுக்காக ஏற்படுத்தியுள்ள சித்திரவதைக் கூடத்துக்கு அவனை இழுத்துப் போகச் செய்தார் மன்னர். அதைக் கண்டதுமே -
நான் உண்மையை ஒப்புக் கொள்கிறேன். என் கூட்டாளிகளையும் கூறிவிடுகிறேன். அவர்கள் ஆறுபேர் - என் மகன் மாரீசனையும் சேர்த்து.


அரசவையின் முன் சதித்திட்டம் முழுவதையும் கூறினான் விராதன்.
உன் நோக்கம் திலீப ரின் குடும்பத்தை அழித்து நீ சர்வாதிகாரியாக விளங்கு வது, இல்லையா? ஆகவே சந் தேகிக்க முடியாதபடி யுட்டா வின் சாபக் கதையை பயன் படுத்திக் கொண்டாய்.
ஆம். சுகேது சுனந்தன் இருவரையும் கார ணமின்றிக் கொன்றது, மக்க ளின் கவனம் சாபத்தின் பக்கம் திரும்புவதற்கே. அடுத்து எங்கள் இலக்கு வீரசேனர்-திலீபன்-சகரன்.
கௌதமர் விந்தையான குரலில் அமைதியாகக் கூறினார்.
ஆனால் கல்லறைப் பெட்டியில் யுட்டாவின் பாடம் செய்யப்பட்ட உடல் இல்லை - சாபம் என்று ஏதும் கிடையாது.
நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கிறீர்கள் கௌதமரே?
மன்னவா - சபையோர் களே! கல்லறைச் சுவரில் சித்திர எழுத்துக் கல்வெட் டுக்கள் உள்ளன. அதைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை என்று கூறி னேனல்லவா? இத்தனை நாட்களாக அதைத் தெரி ந்து கொள்ளுவதில் ஈடு பட்டேன். அங்கு எழுதப் பட்டுள்ளது இதுதான் ...பொய்யான
கல்லறையை மூடி முத்திரையிடப்பட்டதும் வானுலகுக்கும் வேந்தரான யுட்டாவின் உடலை ஒரு பெரிய கப்பலில் கடலுக்கு எடுத்துச் சென்று - ஆழ்கடலின் அடிவயிற் றில் ஜலசமாதியில் வைக் கப்பட்டது.


கௌதமர் விவரித்த அந்தக் காட்சி - பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்த அந்தக் காட்சியை அனைவரின் மனத்திரையிலும் சித்திரமாக ஓடவிட்டது.
திரிசூல் மண்ணில் புதையுண்டு கிடந்த கல்லறை அக்கால மக்களை ஏமாற்றும் தந்திரம்தானா?
ஆம் அரசே. புதையல், சவப்பெட்டி - சாபம் அனைத்துமே மன்னரின் உடைமைகள் எங்கே போயின என்பதை யாரும் அறிய முடியாதபடி மறைப்பதற்காக உருவாக்கப் பட்டவை.
சூழ்ச்சிக்காரர்கள் தண்டிக்கப்பட்டனர்.
— நிறைவு பெற்றது —



எலிகிலி!

மனித இனத்தின் எதிரிகளில் 4 கால் பிராணிகளில் முதலிடத்தைப் பெறுவதும்- தந்திரமானதும் எது? சமீபத்தில் பிளேக் நோய் வந்த போது இதன் பெயர் பலமாக அடிபட்டது. இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லையா? இதன் பெருமைகளில் ஒன்றைக் கூறட்டுமா?

ஒரு தானியக் கிடங்கில் இதை சுதந்திரமாக விட்டு விட்டால் போதும்... ஒரு ஆண்டில் 27 பவுண்டு (1 பவுண்டு= 0.453 கி.கி.) தானியத்தை ஏப்பம் போட்டு விட்டு 25 ஆயிரம் கழிவுகளையும் போட்டு ஏராள தானியங்களை இந்தப் பெருமைக்கு உரிய பிராணி நாசப்படுத்தி விடும்! சந்தேகமே வேண்டாம். எலியாரைப் பற்றித்தான் இத்தனையையும் கூறுகிறேன்.

எலியால் நம்மூர்ல மட்டும் தான் பிரச்னையா? இல்லவே இல்லை. உலகப் பிரச்னை இது! அமெரிக்காவில் எலி வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் முடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள்.

25 ஆண்டுக்கு முன் உலகத்தில் ஒரு மனிதனுக்கு ஒரு எலி என்ற நிலை தான் இருந்தது. அமெரிக் கர்களை விட எலி அங்கே குறைவாகத்தான் இருந்தது. ஆனால், இது 25 ஆண்டு களுக்குள் பல்கிப் பெருகி 10 கோடியிலிருந்து 24.9 கோடியாக விசுவரூபம் எடுத்து- அமெரிக்க மக்கள் தொகைக்கு சமமாகி விட்டது. அதிகரித்துள்ள கணக்கு 150% ஆகும்.

இதன் வேகமான பெருக்கத்திற்குக் காரணம் முன்பை விட எலிகளுக்கு எளிதாக உணவு கிடைப்பதே- மீந்து போன தின்பண்டங்களை மக்கள் குப்பையில் போடுவதால் தான்.

அமெரிக்காவில் 2 வகை எலிகள் உள்ளன. "ரேட்டஸ் ரேட்டஸ்" என்ற கறுப்பு நிற எலி, வியாதியைப் பரப்புவதில் படு கில்லாடி.

மற்றது "ரேட்டஸ் நார் வீஜிகஸ்" என்ற பழுப்பு நிற எலி. பொருளாதார நாசங்களைச் செய்வதில் இது தான் முன்னணி வகிக்கிறது. இதற்கு மின்சாரக் கம்பிகள், தொலை பேசிக் கம்பிகள் என்றால் அலாதிப் பிரியம். எது கிடைத்தாலும் கொரித்துத் தள்ளுகிறது. ஏனெனில் ஆண்டுக்கு 13 மி.மீ. நீளம் பல் வளர்வதால்- பற்களை தேய்த்துக் கொள்ளா விட்டால் இவை வளர்ந்து செத்து விடும்.

அணு ஆயுதப் போரை எதிர்த்து மனித இனம் அலறுகிறது. எலிப்பிரச்சனையும் இதற்கு இணையான "தலையாய" பிரச்சனையே.

வேண்டாத உணவுப் பொருட்களைக் குப்பையில் போடுவதைத் தவிர்ப்போம். எலியின் பெருக்கத்தைத் தடுப்போம்.

சு.காந்திராசு

ஆதாரம்: ("DANGEROUS LIVING")நூலிலிருந்து.

எது உறுதி?



கந்தன் ஒரு மண்பாண்ட வியாபாரி. பலவித மண் பானைகளை செய்து ஊரில் நடக்கும் சந்தையில் அவன் விற்பது வழக்கம். கந்தன் புத்திசாலி. அதனால், தனது பேச்சு சாதுர்யத்தால் தரம் குறைந்த பானைகளையும் விற்று விடுவான்.

கோவிந்தன் என்பவன் ஒரு விசிறி வியாபாரி. அவனும் வந்து சந்தையிலேயே விசிறிகளை விற்று வந்தான்.

ஒரு சமயம் கந்தனுக்கும், கோவிந்தனுக்கும் இடையே தங்கள் பொருட்களின் தரத்தைப் பற்றிய போட்டி வந்தது.

"உன் பானை உறுதியற்றது என நான் நிரூபித்தால், நீ எனக்குப் பத்து ரூபாய் தர வேண்டும். அப்படி நிரூபிக்கத் தவறி விட்டால் நான் உனக்குப் பத்து ரூபாய் தந்து விடுகிறேன்" என்று கோவிந்தன் சொன்னான்.

"அதேபோல, உன் விசிறி தரமற்றது என நான் நிரூபித்தால் நீ எனக்குப் பத்து ரூபாய் தர வேண்டும். அப்படி நான் நிரூபிக்கவில்லை எனில் உனக்குப் பத்து ரூபாய் தருகிறேன்" என்று கந்தன் கூறினான்.

முதலில் கந்தன், கோவிந்தனின் விசிறியை வாங்கிக் கையால் ஒடித்தான். அது "மளக்"கென்று ஒடிந்து விட்டது. கோவிந்தனும், கந்தனின் பானை மீது தன் கோலால் தட்டினான். அதுவும் உடைந்து விட்டது.

உடனே கோவிந்தன், "நம் இருவரின் பொருளும் தரமற்றது. எனவே, யாரும் மற்றவர்க்குப் பணம் தர வேண்டியதில்லை" என்றான்.


"ஆனால், நீ எனக்குத் தர வேண்டும்" என்று கந்தன் கூறினான். கோவிந்தன் காரணம் கேட்டான்.

"நான் உன்னுடைய விசிறியைக் கையால்தான் உடைத்தேன். வேறு எதையும் பயன்படுத்தவில்லை. ஆனால், நீயோ என் பானையைக் கோலால் தான் உடைத்தாய். எனவே, என் பானை உறுதியானது. நீ எனக்குப் பத்து ரூபாய் தரவேண்டும்" என்று கந்தன் பதிலளித்தான்.

கோவிந்தனும் அதை மறுக்க இயலாமல் பத்து ரூபாயைக் கொடுத்து விட்டு நடையை கட்டினான்.

— பி. ஞானமூர்த்தி

10 செய்தித் தாளில் வந்தது



வெளிப் பக்கம் பூட்டப்பட்ட அந்த இருண்ட குடிசையில் கைகால்கள் கட்டப் பட்ட நிலையில் சந்தீப் இருந்தாலும் அவன் மனதைத் தளர விட வில்லை. தப்பிக்க வழி இருக்கிறதா என்று சுற் றும் முற்றும் பார்த் தான். ஆனால் இருளில் ஒன்றும் புலப் பட வில்லை. தான் பரிசு வாங்கிய புத்தகக் கட்டு மட்டும் தன் அருகில் இருப்பதை உணர்ந்தான்.

தான் கடத்தப்பட்டு அதிக நேரம் ஆகியிருக்கவில்லை என்பதை அவனால் உணர முடிந்தது. சாலையில் செல்லும் வாகனங்களின் ஒலி காதில் விழுந்து கொண்டிருந்தது.

என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டி ருந்த போதே, திடீ ரென்று அறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. யாரோ உள்ளே நுழைவதும் மங்கலா த் தெரிந்தது.

கரகரத்த மெது வான குரலில், வந்த உருவம் பேசியது.

“உடனே இங் கிருந்து தப்பி ஓடிப் போய்விடு” என்று வந்த உருவம் கூறியபடி அவன் கட்டுகளை அவிழ்த்து விட்டு உட னேயே வெளியேறி விட்டது.

வந்தது யார்? சந்தீப்பால் இருளில்

கண்டு பிடிக்க முடியவில்லை. அனுமானிக்கவும் இயலவில்லை. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எப்படியோ தப்பித்துக் கொண்டு விட வேண்டும் என்ற எண்ணம் உந்த, பரிசு பெற்ற புத்தகக்கட்டுடன் ரோட்டிற்கு வந்தான். நல்ல காலம் பாக்கெட்டில் பணம் இருந்தது. சிறிது தூரம் வேகமாகச் சென்றவன் ஒரு டவுன் பஸ் வருவதைப் பார்த்துக் கையை நீட்டினான். நல்ல காலம். பஸ் நின்றது.

சில நிமிடங்களிலேயே சந்தீப் விராலிமலை பஸ் ஸ்டாண்டில் இறங்கினான். ரோடில் கும்பல் கொஞ்சம் குறைந்திருந்தது. வேக வேகமாக நடந்து காவல் நிலையத்திற்குள் நுழைந்தான்.

குமரேசன்தான் முதலில் இவனைப் பார்த்தார். மேஜர் இன்னும் நாற்காலியில்தான் கவலையோடு உட்கார்ந்திருந்தார். காவல் நிலையத்தில் இருந்த அனைவருக்கும் சந்தீப்பைப் பார்த்து வியப்புக் கலந்த மகிழ்ச்சி.

தாத்தா சந்தோஷப்பட்டாலும் அவர் முகத்தில் வேதனை அப்பியிருந்ததை புத்திசாலியான சந்தீப் கவனிக்கத் தவறவில்லை.

“சந்தீப், விவரமாகப் பேச நேரம் இல்லை. இப்ப நாம இரண்டு பேரும் உடனே சென்னைக்குப் போறோம்... குமரேசன்... மீனாட்சி கிட்டே விஷயத்தைச் சொல்லி நாங்கள் திரும்பி வரும் வரை வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஜாக்கிரதை,” என்று கூறியபடி நாற்காலியை விட்டு எழுந்தார் மேஜர். பேரனை அழைத்துக் கொண்டு வேகமாக வெளியே வந்தார், சென்னை செல்லும் பேருந்து வண்டியைப் பிடிக்க.

இரவு பனிரெண்டு மணி சுமாருக்கு குடிசையைத் திறந்த மணி, சந்தீப்பைக் காணாமல் திடுக்கிட்டான். எப்படித் தப்பித்துச் சென்றிருப்பான்? காவலுக்கு ஆள் போடாததால் தப்பிச் சென்று விட்டானா? அல்லது யாராவது அவன் தப்பிக்க உதவி செய்திருப்பார்களா?

என்ன யோசித்தும் பதில் கிடைக்கவில்லை.

சந்தீப் தப்பிச் சென்றது குறித்து உள்ளூர மணிக்கு சந்தோஷமாகவே இருந்தது.

“என்னோட கடிதத்தைப் பார்த்து மேஜர் எடுக்கும் நடவடிக்கையை அறிந்த பிறகுதான் சந்தீப்பை ஒரு நல்ல பாதுகாப்பான இடத்தில் வைக்க நினைத்தேன். ஆனால் இப்ப நான் எதிர்பாராமல் மகிழ்ச்சியான செய்தியைக் கேள்விப்பட்டேன். இந்த சந்தர்ப்பத்தில் சந்தீப் என்னிடம் இல்லாததே நல்லது. எப்படியோ, மாயாண்டி நிச்சயம் என்னைப் பார்க்க வருவான். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்” என்று எண்ணியபடியே அவ்விடத்தை விட்டு அகன்றான் மணி.

மறுநாள் காலை படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே ராஜாவுக்கு ஒரே அசதி. டீ குடித்தால் உடம்புக்கு சுறுசுறுப்பாக இருக்கும் என்று கடைக்குள் நுழைந்து பெஞ்சியில் அமர்ந்தபோது சண்முகம் கேட்டான்.

“ராஜா! உனக்கு விஷயம் தெரியுமா?”

“சொன்னாத்தானே தெரியும்?”

“நம்ப ராஜசேகரன் அதான் மேஜரோட மகன் இருக்காரில்லே?” நிமிர்ந்து உட்கார்ந்து கொண்ட ராஜா கேட்டான்.

“யாரு! சந்தீப் தம்பியோட அப்பாவா?”


“ஆமாம். மெட்ராஸ்லே போலீஸ்லே வேலையாயிருக்காரே?”

“சந்தீப் தம்பி சொல்லியிருக்கு.”


''பயப்படாதேடா கண்ணா... டெஸ்ட் டோஸ்தான் போடப் போறேன்!

'' 'டெஸ்ட்'டுன்னாலே அவனுக்கு பயம்தான் டாக்டர்!''

–சீர்காழி வி. ரேவதி







''கணக்கு பேப்பரை இங்கிலீஷ் வாத்தியார் திருத்திருக்கார் போலிருக்கு; எனக்கு O (ஓ) போட்டிருக்கார.''

''இங்கிலீஷ் 'ஓ' இல்லேடா அது; கோழி முட்டை... அதாவது பூஜ்யம்!''

– சீர்காழி வி. ரேவதி

"வேலையிலே கெட்டிக்காரரு. கை நீட்டி காசு வாங்க மாட்டாரு. நேத்து சாயந்திரம், ஏன் விளக்கு வைக்கிற நேரம்னு வைச்சுக்க... மாயாண்டிங்கற கைதியை பிடிக்கறப்போ...அடிபட்டு நல்ல காயமாம்... ஆஸ்பத்திரியிலே இருக்காராம்."

ராஜா கையில் இருக்கற டம்ளரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"நெசமாவா சண்முகம் அண்ணே?"

"நெசந்தான் ராஜா... இதோ இன்னிக்குப் பேப்பர்லே போட்டிருக்காங்க."

"எங்கே கொண்டா பார்க்கலாம்."

''நீதான் கைநாட்டுன்னு சொன்னியே?''

''ஆ...ஆ...மாம் ஆனா, இதப்பத்தி போட்டோ... ஏதாச்சும் வந்திருக்கான்னு பார்க்கக் கேட்டேன்.''

''செய்தியை அவசர அவசரமா போட்டிருக்காங்க. நாளைக்கு போட்டோ போட்டு இன்னும் போடு வாங்க.''

"எப்படி அந்த ஆளு தப்பிச்சுக்கிட்டானாம்?"

''நேத்திக்கு சாயந்திரம் நெஞ்சு வலின்னு துடிச்சானாம். திருட்டுப் பய இல்லே... பிரமாதமா நடிச்சிருக்கான். டாக்டரைக் கூட்டிக்கிட்டு வந்து காண்பிச்சாங்களாம். அப்ப திடீர்னு பாய்ஞ்சு எல்லோரையும் தாக்கிட்டு... கையிலே கிடைச்ச நாற்காலியத் தூக்கி தன்னைப் பிடிக்க வந்த சர்க்கிள் ஐயா ராஜசேகரன் மேல வீசிபுட்டு... அப்புறம் டாக்டரோட மருந்து பெட்டியையே தூக்கி சர்க்கிள் மேலே கடாசிபுட்டு... எப்படியோ தப்பிச்சுக்கிட்டானாம். பாவிப் பயல். நேத்திக்கு விளக்கு வெச்ச நேரத்திலே நம்ப மேஜர் அய்யா போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போயிருக்காரு... என்னவோ பேசணும்னு மகனுக்கு போன் போட்டாராம். ஆனா... மருமவதான் போன்லே பேசி... மாமனாரை உடனே வரும்படி சொல்லிச்சாம். ஊட்டுக்கு கூட வராம மேஜரும் சந்திப்பும் அப்படியே கிளம்பிப் போயிட்டாங்களாம். நேத்தி ராத்திரி பூரா விராலிமலை போலீஸ் ஸ்டேஷன் பக்கத்திலே இதே பேச்சுத்தானாம்."

ராஜாவால் ஒரு நிமிடம் பேசக் கூட முடியவில்லை.

"என்ன அப்படியே தெகைச்சு உட்கார்ந்து கிட்டே ராஜா?"

"ஆ....அதெல்லாம் ஒண்ணுமில்லே.. மேஜரு வூட்டுலே எல்லாரும் நல்லவங்க... அவங்களுக்குப் போயி இப்படி ஒரு சோதனை... வந்திருக்கேன்னு கேட்கறப்போ மனசு ரொம்ப சங்கடப் படுது சண்முகம் அண்ணே!"


"நேத்து வந்த பய நீ... உனக்கே இம்புட்டு வருத்தமா இருந்துச்சுன்னா... இந்த ஊரிலே பொறந்து... அவங்க ஊட்டு உப்பைத் தின்னு வளர்ந்த எனக்கெல்லாம் எம்புட்டு வருத்தமா இருக்கும் தெரியுமா? அந்த மாயாண்டியா... பேயாண்டியா அவன் மட்டும் என் கண்ணுலே படட்டும்... ஆத்திரத்தோடு டபராவை 'ணங்' என்று வைத்தான் சண்முகம்

அதற்கு மேல் ராஜாவால் அங்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை.

''தூக்கத்துல பயங்கரமான கனவெல்லாம் வருது டாடி.''

''அதையெல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்துடுடா!''

– சீர்காழி வி. ரேவதி





வேகமாக மேஜரின் வீட்டை அடைந்தான். டைகர் கட்டப்பட்டிருந்த இடம் 'வெறிச்' என்று இருந்தது. என்னைக் காப்பாற்ற நீ உயிர் விட்டாய்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்ட போது பெருமூச்சு ஒன்று அவனையும் அறியாமல் வெளிப்பட்டது.

மெதுவாக உள்ளே நுழைந்தான். ஹாலில் உள்ள சோபாவில் மீனாட்சி அம்மாள் வருத்தத்தோடு அமர்ந்திருந்தாள். ஊஞ்சலில் அவளின் தம்பி... குமரேசன் உட்கார்ந்திருந்தான். மயிலு... முருகன்... டேவிட். இன்னும் நாலைந்து பெண்கள்... யாரும் பேசவில்லை... இறுக்கமான சூழ்நிலை.

மீனாட்சி அம்மாளைப் பார்த்ததும் தொண்டை பேச மறுத்தது. தன்னை சமாளித்தபடி, "அம்மா! எனக்கு இப்பத்தான் விஷயமே தெரியும். சண்முகம் சொல்லிச்சு..." என்று கூறியபடி தரையில் அமர்ந்து கொண்டான்.

சண்முகம் சொன்னதையே குமரேசன் சொன்னார்.

"கவலைப் படாதீங்க அம்மா... உங்க மவன் ஆசுபத்திரியிலேந்து... சீக்கிரம்... குணமாயி... வந்துடுவாரு" என்று ஆறுதல் சொன்னான்."

'நானா... இப்படிப் பேசறேன்! என் மனசு...மழையிலே நனைகின்ற வெல்லக் கட்டி மாதிரி ஏன் இப்படிக் கரைய ஆரம்பிக்கிறது! இந்த மாற்றம், இரும்பை விட கெட்டியான மனமுடைய எனக்கு எப்படி வந்தது?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அன்று இரவு... புரண்டு புரண்டு படுத்தும் ராஜாவிற்குத் தூக்கமே வரவில்லை.

'இந்தக் கிராமத்திலே உனக்கு இனிமேல் என்ன வேலை? வந்த வேலை முடிந்து விட்டது. இனிமே யாருக்காக இங்கே இருக்கணும்? கிராமத்தை விட்டு உடனேயே ஓடிப்போய்விடு... நீ விரும்பிய வளமான எதிர்காலம் உனக்கு கிடைக்கலாம்!' என்றது ஒரு மனசு.

மனசாட்சி தடுத்தது.

'சந்தீப் வந்ததும் சொல்லிக் கொண்டுபோ... திருடன் மாதிரிப் போகாதே.'

முதல் முறையாக மனசாட்சி சொல்படி நடக்க ராஜா தீர்மானித்தான்.

(தொடரும்)

யானையை அடக்கியவன்!

ஒருநாள் காலை நேரம். யானைப் பாகன் ஒருவன் வழக்கம் போல் கோயில் யானையை ஆற்றில் குளிப்பாட்டி விட்டுக் கோயிலுக்கு நடத்திக் கூட்டிச் சென்றான்.

திடீரென என்ன நினைத்ததோ தெரியவில்லை, அந்த யானை கடைத்தெரு வழியே வெறித்தனமாய் ஓடத் துவங்கியது. மக்கள் அஞ்சி நாலாபுறமும் தலைதெறிக்க ஓடி ஒளிந்தனர். கடைவீதியே வெறிச்சோடிப் போனது.

'அந்த'ச் சிறுவன், கடைவீதியின் ஓரமாக நின்று அந்த யானையைக் கவனித்தான். 'அவனுக்கு மூளையில் பளிச்சென்று பொறி தட்டியது.

அடுத்த நொடியே அவன் கோயிலில் வழக்கமாக யானையைக் கட்டிப் போடும் இடம் நோக்கி ஓடினான். அங்கிருந்த இரும்புச் சங்கிலி ஒன்றை எடுத்துக் கொண்டு யானை வரும் திசையை நோக்கி விரைந்தான்.

மக்கள் அனைவரும், 'என்ன நடக்குமோ?...' என்று படபடக்கும்



நெஞ்சோடு பார்த்துக் கொண்டிருந்தனர். கையிலிருந்த சங்கிலியின் ஒரு முனையை யானையை நோக்கி வீசினான் சிறுவன். யானையும் தன் துதிக்கையால் இலாவகமாக அதைப் பற்றிப் பிடித்துக் கொண்டது! உடனே அதன் போக்கு மாறியது. ஆர்ப்பாட்டம் செய்த யானை அடங்கி, அமைதியானது. சங்கிலியின் மறுமுனையைப் பிடித்திருந்த அந்தச் சிறுவன் முன்னே செல்ல, யானை அமைதியாய் பூனை போல் அவனைப் பின் தொடர்ந்தது! சிறுவன் கோயில் வரை யானையை நடத்திச் சென்றான். பாகன் ஓடோடிச் சென்று யானையைச் சங்கிலியால் பிணைத்தான்.

அந்த சிறுவன் யானையைத் தடவிக் கொடுத்தான். யானையும் தன் துதிக்கையால் அவனைத் தடவியது. எல்லோரும் பாராட்டினர். சிறுவனோ ''இதில் பாராட்ட என்ன இருக்கிறது? தினமும் யானை குளிக்கச் செல்லும் போது சங்கிலி ஒன்றையும் பற்றி வருவதை கவனித்திருக்கிறேன். இன்று, அதனிடம் சங்கிலி இல்லை. அதனால்தான் எதையோ இழந்தது போல் ஓடி வருகிறது என்பதை உணர்ந்தேன். சங்கிலி கிடைத்தவுடன், இழந்த பொருளை மீண்டும் பெற்ற உணர்வுடன், மகிழ்ந்து அமைதியாகி விட்டது'' என்றான்.

அவனைப் பாராட்டிய மக்கள் அவனுடைய விவேகத்தையும் துணிவையும் வியந்தனர். அன்பு, பொறுமை, துணிச்சல், வீரம், விவேகம் கொண்ட அந்தச் சிறுவன் யார்? அவர்தான் பிற்காலத்தில் கர்மவீரர் என்று பெயரெடுத்த பாரதப் பெருந் தலைவர் காமராஜர்.

— ஆர்.எஸ். பானுப்ரியா.





காட்சி : 1

(செல்வத்தின் வீட்டுச் சமையலறை. அம்மா ஏதோ வேலை செய்து கொண்டிருக்க செல்வம் வருகிறான்)

அம்மா : செல்வம், கணபதி போயாச்சா?

செல்வம் : இல்லேம்மா. இப்பத்தான் எட்டாவது பாடத்தை முடிச்சிருக்கிறான். இன்னும் நான்கு பாடம் இருக்கு. முக்கால் மணியாவது ஆகும்.

அம்மா : ரெண்டு பேருக்கும் காப்பி கலந்து வைச்சிருக்கேன். டப்பாவில் முறுக்கு இருக்கு. லட்டும் இருக்கு. ஒரு தட்டுல வைச்சு கணபதிக்கும் கொடுத்து நீயும் எடுத்துக்க. நான் குக்கரை கவனிக்கணும்.

செல்வம் : (இரங்கின குரலில்) முறுக்கு லட்டெல்லாம் வேண்டாம்மா. அவனுக்குக் கொடுக்காம இருந்தா நான் இன்னும் ரெண்டு நாள் தின்பேன். காப்பிதான் தீராது. அதை மட்டும் கொடு.

அம்மா : கணபதி உன் நண்பன்தானே செல்வம்? ரொம்ப நல்ல பையன். வகுப்புல முதல் ரேங்கில் வருபவன். என்னவோ டைபாய்டு காய்ச்சல் வந்து நான்கு மாதம் பள்ளிக்கு வர முடியாம போனதால, நடந்த பாடங்களில் கேள்வி பதில் எழுதிக்க உன்னைத் தேடி வந்திருக்கான். அவனை உபசரிக்க வேண்டியது உன் கடமையில்லையா செல்வம்?

செல்வம் : (மெதுவான குரலில்) அம்மா, அவன் வந்திருப்பது அவன் வேலைக்காக.

அம்மா : இருக்கட்டுமே? ஆனா வந்திருப்பது நம் வீட்டுக்கு. அதனால் இப்ப அவன் நம்ம விருந்தாளி. அவன் நம் வீட்டில் இருக்கும் வரை, நீ என்னவெல்லாம் செய்து கொள்கிறாயோ அதையெல்லாம் அவனுக்கும் செய்வதுதான் நியாயம்.

செல்வம் : (கோபத்துடன்) முறுக்கும் லட்டும் அத்தை எனக்காகச் செய்து அனுப்பினது.

அம்மா : இருக்கட்டுமே? நீ சாப்பிடப் போறே இல்லே? அப்ப வந்த விருந்தாளிக்கும் அதைக் கொடுப்பதுதான் அழகு செல்வம்.

செல்வம் : நான் இப்போ சாப்பிட மாட்டேன். காப்பியைக் கொண்டு போய்க் கொடுத்துட்டு உள்ளே வந்து நான் மட்டும் முறுக்கையும் லட்டையும் தின்னுட்டுப் போறேன்.

அம்மா : பாவம் கணபதி. அவனுக்கு மட்டும் இது தெரிந்தால் எத்தனை வருத்தப்படுவான்?

செல்வம் : தெரிந்தால்தானே? நான் தான் அவனுக்குத் தெரியாம உள்ளே வந்து தின்றுவிட்டுப் போகப் போறேனே? காப்பியை மட்டும் கொடும்மா. முறுக்கும் லட்டும் எனக்கு உயிர் மாதிரி.

காட்சி - 2

(இரவு நேரம். செல்வத்தின் வீட்டுக் கூடம். அம்மா, அப்பா, செல்வம் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். சமையலறையில் 'ஏதோ பாத்திரம் உருளும் சத்தம் கேட்டு எல்லோரும் விழித்துக் கொள்கின்றனர்)



அப்பா : சமையலறையில்தான் ஏதோ பாத்திரம் விழுந்தது. (உள்ளே ஓடிப் பார்த்து. அங்கிருந்தபடியே) எவர் சில்வர் டப்பா கீழே உருண்டு கிடக்கு...

அம்மா : (ஓடிப் போய்ப் பார்த்து) ஆமாம். லட்டும், முறுக்கும் போட்டு வைச்சிருந்த டப்பாதான். அடடே! முறுக்கு சாக்கடைல கிடக்கு. கீழே லட்டுத் தூள்! செல்வம், முறுக்கையும் லட்டையும் தின்னுட்டு டப்பாவை மூடவே இல்லையா?

செல்வம் : அடடா! ஆமாம். கணபதிக்குத் தெரியக்கூடாதுங்கறதுக்காக அவசரம் அவசரமாத் தின்னேனா? டப்பாவை மூட மறந்துட்டேன்.

அம்மா : சமையலறை சாக்கடை வழியாக வாசனையைப் புடிச்சு பெருச்சாளி வந்திருக்கு. முறுக்கெல்லாம் உடைஞ்சு சாக்கடையில் கிடக்கு! லட்டெல்லாம் அள்ளக் கூட முடியாம தரையிலே சிதறியிருக்கு. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வெளியில உட்கார வைச்சிட்டு, கணபதிக்குத் தெரியாம நீ மட்டும் உள்ளே வந்து தின்னியோன்னோ? ஆண்டவனுக்கே பொறுக்கலே. அதான் இப்படி ஆச்சு.

அப்பா : உன் நண்பனை உட்கார வைச்சுட்டு உள்ளே வந்து நீ மட்டும் லட்டைத் தின்னியா? எத்தனை கேவலம்! எனக்கு அவமானமா இருக்கு.


அம்மா : உங்க அருமைப் பிள்ளை செய்யும் சில காரியங்கள் உங்களுக்குத்

தெரியாது. போன மாதம், உருளைக் கிழங்கு போண்டா பண்ணியிருந்தேன். இவன் நண்பர்களுக்கும் பிடிக்குமே என்று எட்டு போண்டாவை டிபன் பாக்ஸில் போட்டு பள்ளிக்குக் கொடுத் தனுப்பி னேன். நண்பர்களுக்குக் கொடுக்க மனம் வராது, தான் மட்டும் அவர்களுக் குத் தெரியாம எடுத்துக் கொண்டு, மீதியை வீட்டுக்குக் கொண்டு வந்து ராத்திரி சாப் பிட்டிருக்கான். இன்னிக்கு கணபதியை கூடத்தில் உட்கார வைச்சுட்டு இவன் மட்டும் உள்ளே வந்து நின்றிருக்கிறான்!

அம்மா : கணபதி, இன்னிக்கு என்ன சமைக்கட்டும்? ஞாயிற்றுக்கிழமை தானே? வழக்கப்படி வாழைப் பூ உசிலி பண்ணட்டுமா?

கணபதி : இன்னிக்கு உசிலி வேண் டாம்மா. பெற்றோர்கள் அவசரமா ஊருக் குப் போகும்படியானதால, இரண்டு நாள் இருக்க என் நண்பன் செல்வம் வந்திருக்கிறான். அவனுக்குப் பிடித்த தைக் கேட்டுப் பண்ணலாம், என்னைக் கேட்கிறீர்களே?

அம்மா *(சிரித்து)* **:** அப்படியா? சரி,



அப்பா : இதெல்லாம் உன் நண்பர் களுக்குத் தெரிந்தால் எத்தனை வருத்தப் படுவார்கள்?

செல்வம் : தெரிஞ்சாத்தானே அப்பா வருத்தப்பட?

அம்மா : நீ எப்பத்தான் மாறப் போறியோ?

காட்சி - 3


(கணபதியின் வீட்டுக்கூடம். இருவ ரும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கணபதியின் அம்மா வருகிறாள்)

செல்வம், உனக்கு ரொம்பப் பிடித்த சமையல் எதுப்பா?

செல்வம் *(கூச்சத்துடன்)* **:** எனக்கு எல்லாமே பிடிக்கும்தான். எனக்காக ஸ்பெஷலா பண்ணாதீங்க.

கணபதி *(சிரித்து)* **:** அம்மா, இவன் கூச்சப்படறான். முருங்கைக்காய் இவ னுக்கு மிகவும் பிடிக்கும். கோகம் பிடிக் கும். பள்ளியில் இடைவேளையில் சாப் பிடும் போது கவனித்திருக்கிறேன். அதையே பண்ணுங்க.

அம்மா : இரண்டுமே வீட்டுலே



"உன் பையனை எந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்த்திருக்கே?"
"'எலி'மெண்ட்ரி ஸ்கூல்ல!"
- பாளை. பசும்பொன், மகராஜநகர்.

இருக்கு. பண்ணிடறேன்.

அப்பா *(வந்து கொண்டே)* : கணபதி, எங்க ஆபீஸர் பாஸ்கரன் உன் பையன் கிட்டே கொடுன்னு ஒரு முழு திருப்பதி லட்டைக் கொடுத்திருக்கிறார். நீ அவரிடம் திருப்பதி லட்டு கேட்டிருந்தியா?

கணபதி : அப்பா, அவருடைய பையன் பாபு கணக்கிலே வீக். அதனால போன வருஷம் நான் அவனுக்குக் கணக்கு சொல்லித் தந்தேன். அவன் நூற்றுக்கு நூறு வாங்கிட்டான். அதனால என்ன வேணும்னு அவர் கேட்டார். நான் எதுவும் வேண்டாம்னு சொல்லிட்டேன். அவர் விடலை. அதனால, சரி ஒரு முழு திருப்பதி லட்டைக் கொடுங்கன்னு கேட்டேன்.

அப்பா *(பையைத் திறந்து)* : இந்தா, நீ கேட்ட லட்டு, முழு லட்டு. (தருகிறார்). பாஸ்கரன் சார் கொடுக்கச் சொன்னது.

அம்மா : இப்படியா முழு லட்டைக் கேட்பாங்க?

கணபதி : காரணமாத்தான் கேட்டேம்மா. என் நண்பர்கள் எல்லோருக்குமே லட்டுன்னா ரொம்பப் பிடிக்கும். இந்த செல்வத்துக்குக் கூட லட்டுன்னா உயிர். எல்லோருக்கும் கொடுத்து நானும் தின்ன வசதியா இருக்கும்னுதான் முழு லட்டைக் கேட்டேன். இதைப் பத்திரமா மூடி வைங்க. இன்னும் அரை மணியில் கேரம் ஆட சுந்தரும், பூபதியும் வருவாங்க. அப்போ எல்லோருமா சாப்பிடுவோம்.

(அம்மாவிடம் தருகிறான். அம்மாவும் அப்பாவும் உள்ளே போகிறார்கள்.)

செல்வம் : எனக்கு லட்டுன்னா உயிர்னு உனக்குத் தெரியுமா கணபதி! எப்படித் தெரியும்?

கணபதி *(மெதுவாக)* : உன் வாயாலேயே நீ கூறியதை உன் வீட்டில் கேட்டேனே? அன்றைக்கு நான் எழுதிக் கொண்டிருந்த போது ரப்பர் கீழே விழுந்து சமையலறைப் பக்கம் குதித்து ஓடி விட்டது. அதை எடுக்க வந்தப்போ தற்செயலா நீ உங்க அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். லட்டுன்னா உனக்கு உயிரல்லவா? உனக்குத் திருப்பதி லட்டே தரப் போகிறேன். மகிழ்ச்சி தானே?

செல்வம் : *(கண்கலங்க)* நான் கேவலமாக நடந்து கொண்டதை அறிந்த பிறகும், அன்பு மாறாமல், என்னை உங்க வீட்டில் தங்கவைத்து, எனக்குப் பிடித்ததைத் தரும் உன் விருந்தோம்பல் குணம் எங்கே? வீட்டுக்கூடத்திலேயே உன்னை உட்கார வைத்துவிட்டு, உள்ளே போய் இரகசியமாகத் தின்று விட்டு வந்த என் கேவலமான குணம் எங்கே? உனக்காகக் கேட்டுப் பெற்ற முழு லட்டை எங்களோடு பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியடையத் துடிக்கும் உன்னோடு, நண்பனாக இருக்கும் தகுதி எனக்கு இல்லவே இல்லை கணபதி. நான் மாறி விட்டேன். அப்பா அம்மாவால் மாற்ற முடியாத என்னை நீ மாற்றி விட்டாய்.

கணபதி : என்ன தருகிறாய், எத்தனை தருகிறாய் என்பது முக்கியம் அல்ல. எப்படித் தருகிறாய் என்பதுதான் முக்கியம். வீட்டுக்கு வந்தவங்களை வாசலில் இருக்க வைத்துவிட்டு உள்ளே வந்து சாப்பிடுகிறவர்களைப் பற்றி திருவள்ளுவர் என்ன கூறுகிறார் தெரியுமா செல்வம்?

செல்வம் : நானும் மறக்கவில்லை கணபதி. அது இறப்பே இல்லாத அமிர்தமாக இருந்தாலும் வேண்டாதது என்கிறார் இல்லையா? படிப்பதற்கு மட்டுமே திருக்குறள் என்று எண்ணியதால் இதன் அருமை தெரியவில்லை. இப்பொழுது மனப்பூர்வமாக உணர்ந்து விட்டேன். மாறி விட்டேன் கணபதி.

விருந்து புறத்ததாத் தான் உண்டல், சாவா
மருந்து எனினும், வேண்டாற்பாற்று அன்று
(குறள் : 82)

ஆசிரியர் சௌரிராஜன் தம் வகுப்பு மாணவர்களுக்கு திருத்திய விடைத்தாள்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"பாலன்... நல்லது. இந்த முறையும் நீ நல்ல மதிப்பெண்கள் எடுத்திருக்கிறாய்."

பாலன் மகிழ்ச்சியோடு வந்து வாங்கிக் கொண்டான்.

"தனராஜ்...! என்ன ஆச்சு உனக்கு? கணக்கில் அதே பிழையைத்தான் செய்திருக்கிறாய். பரவாயில்லை. என்ன குறைபாடு என்று உனக்குப் புரிந்து விட்டது அல்லவா."

ஒவ்வொருவராய் வந்து வாங்கிக் கொண்டு போக சேகரன் பெயரை மட்டும் இன்னமும் ஆசிரியர் அழைக்கவேயில்லை.

ஒன்றும் புரியாமல் அவன் தவிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சேகரன்"



நடக்காத பாடம்

தன் பெயர் ஒலிக்கவும் எழுந்து நின்றான்.

"இந்தா..."

ஆசிரியர் வேறெதுவும் கூறாமல் கொடுத்ததும் மெல்ல வந்து வாங்கிக் கொண்டான்.

"நல்லது. நிறைய மதிப்பெண்கள் வாங்கியவர்கள் அடுத்த தேர்விலும் அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். குறைவாக வாங்கியவர்கள் தங்களின் குறை என்ன என்று ஆராய்ந்து சரி செய்து கொள்ள வேண்டும். சரியா..." என்றார் வகுப்பைப் பார்த்து.

சேகரன் தன்னிடத்திற்கு வந்து அமர்ந்தான்.

நடுக்கத்துடன் ஒவ்வொரு தாளாகப் பார்த்தான்.

ஆங்கிலம் பத்து, கணக்கு மூன்று, விஞ்ஞானம் ஏழு! கண்ணீர் பார்வையை மறைத்தது.

ஆசிரியர் ஏன் எதுவுமே சொல்லாமல் கொடுத்தார் என்று புரியவில்லை. தன்னை ஒரு மாணவனாகவே ஏற்கவில்லையா...? உதவாக்கரை என்று ஒதுக்கி விட்டாரா?

ஆசிரியர் மேலே பாடம் நடத்தியது எதுவும் அவன் காதில் விழவில்லை. உள்ளுக்குள் அழுது கொண்டிருந்தான்.

சௌரிராஜன் நிமிர்ந்தார். ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை. எதிரே



"என்ன ஸார்.."

"வாப்பா... பாராட்டு. இந்தத் தடவையும் நீ முதல் ரேங்க். பெருமையா இருக்கு" என்றார் சந்தோஷத்துடன்.

பாலன் பெருமிதமாய் நின்றான்.

"உன்னிடம் ஒரு சின்ன வேண்டுகோள்..."

"என்ன ஸார்?"

"நம்ம சேகரன்... பாவம்... படிக்கணும்னு ஆசை. ஆனா தடுமாற்றம் இருக்கு இன்னும். நீ அவனுக்கு எதுவும் உதவி செய்ய முடியுமா."

"என்ன உதவி ஸார்?"

"அவனோட கூடப் படிச்சு... அவனுக்குப் புரியாத பாடத்தை விளக்கி... இப்ப என்கிட்டே டியூஷன் வந்தாலுங் கூட.... என்னால தனிப்பட அவனை முழுமையாக் கவனிக்க முடியாது. நீ அவனை மட்டும் கவனிச்சு சொல்லிக் கொடுத்தால் அவனும் புரிஞ்சு படிப்பான்."

பாலன் தலைகுனிந்து மௌனமாய் நின்றான.

"என்னப்பா... பதிலே பேசலே?"

"இல்லே ஸார். எங்க வீட்டுல

சேகரன் நின்றிருந்தான்.

"என்னப்பா."

பேசாமல் அழுதான்.

"என்ன சேகர்...! ஏன் அழுகிறாய்?"

"எ... என்னைப் பிடிக்கலியா..."

"ஏனப்பா அப்படிக் கேட்கிறாய்?"

"மற்ற மாணவர்களிடம் நீங்கள் ஏதாவது சொல்லிவிட்டு விடைத்தாளைக் கொடுத்திங்க. ஆனா... என் கிட்டே எதுவுமே பேசலே."

சௌரிராஜன் நிதானமானார்.


"ஓ.. அதுவா? என்னவென்று சொல்வது? இவ்வளவு குறைவாய் மதிப்பெண் வாங்கி னால்!"

"எனக்கு நல்லாப் படிக்கணும்னு ஆசை."

எதிரில் நின்று அழுகை அடங்காமல் பேசுகிற மாணவன் வித்தியாசமானவனாய்த் தெரிந்தான். உண்மையிலேயே படிப்பு மீது ஆசையுள்ள, படிப்பு வராத மாணவன். தகுந்த வழிகாட்டி கிடைத்தால் ஒரு வேளை... இவனும் தேறு வானோ.?

"சரி... நான் பார்க்கிறேன்" என்றார்.

பாலன் எதிரில் வந்து நின்றான்.



திட்டுவாங்க. நான் படிக்காமல் அவனோட வீணாப் பொழுதைப் போக்கறேன்னு."

"நான் வந்து உங்க வீட்டுல சொல்றேன்பா"

"இல்லே ஸார். வந்து"

"என்ன?"

பாலன் ஒரு வினாடி அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"சேகரனுக்கு படிப்பே வரலே ஸார். அவனோட முட்டிக்கிட்டா.. என்னோட முதல் ரேங்க் போயிரும். அந்த நேரத்துல் நான் இன்னும் ரெண்டு தடவை படிக்கலாம் ஸார்" என்றான் அழுத்தமாக.

"ஓ. அப்படியா! சரி... நீ போ.."

பாலன் வெளியேற செளரிராஜன் சிந்தனையில் ஆழ்ந்தார்.



அடுத்த முறை தேர்வுகள் முடிந்ததும் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு ஆசிரியரால் தரப்பட்டுக் கொண்டிருந்தன.

"வினோத் வாழ்த்துக்கள். வா! நீதான் இந்த முறை முதல் ரேங்க," என்றார்.

பாலன் திகைப்பும் வெறுப்புமாய்ப் பார்த்தான்.

"சேகர், உன்னோட முயற்சி வீண் போகலே. இந்த முறை உன்னுடைய மதிப்பெண்கள் முன்பை விடக் கூடுதல். அடுத்த தடவை இன்னும் அதிகம் ஆக வேண்டும். புரியுதா?"

மலர்ச்சியாய் வந்து வாங்கிக் கொண்டான் சேகர்.

"ஸார்... நான் ஒன்னு சொல்லட்டுமா...?" என்றான்.

"என்ன சேகர்?"

"என்னோட இந்தக் கூடுதல் மதிப்பெண்களுக்குக் காரணம் வினோத்தான். நிஜமா இந்தப் பாராட்டு அவனுக்குத்தான் சேரும்."

உடனே வினோத் எழுந்து நின்றான்.

"ஸார் உண்மையிலேயே இந்தப் பாராட்டு நம்ம சேகருக்குத்தான் ஸார்."

ஆசிரியர் ஆச்சரியமாய் இந்தப் போட்டியைக் கவனித்தார்.

"என்ன சொல்றே!"

"எவ்வளவோ முயற்சி செய்தும் என்னால ரெண்டு வருஷமா முதல் ரேங்க் வாங்க முடியலே. நம்ம பாலன்தான் வாங்கினான். ஆனா... இந்தத் தடவை நீங்க சொன்னதாலே... சேகரனுக்கு நான் தனியாக் கவனிச்சு பாடம் சொல்லிக் கொடுத்தேன். அது அவனுக்கும் உபயோகப்பட்டு... எனக்கும் இரட்டிப்பு பயன் தந்தது. மீண்டும் மீண்டும் நான் அவனுக்கு சொல்லித் தந்ததால், எனக்கு அது மிக மிக எளிதாகப் போய் விட்டது. இன்னும் தெளிவாகி விட்டது. அதனால் தான் இந்த முறை சிறுதவறு கூட இல்லாமல் எழுதினேன். என்னோட வெகுநாள் விருப்பமான முதல் ரேங்கும் வாங்க அதுதான் வழி செஞ்சது அதனால சேகரனைத் தான் பாராட்ட வேண்டும்" என்றான்.

"இது, நான் வகுப்பில் நடத்தாத பாடம். இப்படித்தான் ஒருவருக்கு ஒருவர் உதவியா இருக்கணும். இதை வளர்த்துக் கொண்டு இன்னும் உயரவேண்டும்" என்றார் செளரிராஜன்.


பாலன் புதிதாய்க் கற்றுக் கொண்ட இந்தப் பாடத்தில் பெயிலாகி தலை குனிந்து கூச்சத்துடன் நின்றான்.

– ஸ்ரீரங்கம் **ஸ்ரீநிவாசன்**



விடுமுறையைக் கழித்தேன்!

விடுமுறையைப் பயனுள்ள விதத்தில் கழித்ததைப் பற்றி எழுதி அனுப்புங்கள் என்று கேட்டதற்கு சில சிறுவர் சிறுமியர் எழுதியனுப்பியிருக்கிறார்கள். நீங்களும் உங்கள் அனுபவத்தை எழுதி அனுப்பலாமே?



இங்கேயே

நான் கோடை விடுமுறைக்கு என் மாமா வீட்டுக்குப் போவதாக இருந்தேன்.

உதவியது!

நான் பிளஸ்-டு தேர்வு எழுதி முடித்ததிலிருந்து இன்றுவரை ஆங்கிலம் தமிழ் அகராதியில் A முதல் Z வரை உள்ள 26 எழுத்துகளில் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு வார்த்தையை எழுதிக் கொண்டு மொத்தம் 26 வார்த்தைகளைக் காலையில் படித்து விட்டு மாலையில் பார்க்காமல் எழுதிப்பார்ப்பேன். இந்தப் பயிற்சியினால் எனக்குப் புதிய ஆங்கில வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிகிறது. எனது மேற்படிப்புக்கு இந்தப் பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும் எனக் கருதுகிறேன். கோகுலம் தம்பி தங்கையரும் எனது பயிற்சியைப் பின்பற்றலாம்.

க. மங்கையர்க்கரசி — திருமருகல்.



பயனுள்ள பொழுதுபோக்கு!

விடுமுறையில் அத்தை வீட்டுக்குப் போனேன். அங்கு முத்து இன்டர் கார்டன் ஸ்கூல் உள்ளது. அங்கே தமிழ், ஆங்கில அரிச்சுவடி கற்றுத் தருகிறார்கள். "நாட்டில் படிக்க விரும்பாத பிள்ளைகளே கிடையாது. குழந்தைகள்



அச்சத்தைப் போக்கினால் அனைத்தும் படிக்கும்" என்ற விளம்பர வாசகம் என்னை அசத்தி விட்டது. நானும் "அறிவொளி" இயக்கப் பணியாக பத்து பிள்ளைகளுக்கு தமிழ், ஆங்கில அரிச்சுவடி கற்றுத் தந்தேன். அது எனக்கு மிகவும் பெருமையாகவும், பயனுள்ள பொழுது போக்காகவும் இருந்தது.

சாந்தி. — சிறுபுலியூர்.

என் பெற்றோர் அனுமதியும் கிடைத்தது. எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. மறுநாள் புறப்படத் தயாரானேன். என் துரதிஷ்டம் என் மாமா, அத்தை பிள்ளைகள் எல்லோருமே இங்கு வந்து விட்டதால் ஏமாற்றம் அடைந்தேன். அதுவும் நல்லதாகப் போயிற்று. என் அத்தை எனக்கு ஒயர் கூடை பின்னவும் என் மாமா காளான் பயிற்சியும், மரம் வளர்த்தல் பற்றியும் சொல்லிக் கொடுத்தார். மாலை தையல் வகுப்பு செல்கிறேன். கோடை விடுமுறை எனக்கு குதூகலமாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

விஜயலக்ஷ்மி, சிறுபுலியூர்.



முன்மாதிரி!

எங்களூரில் பல மாணவர்கள் இணைந்து மாணவர் மன்றம் ஒன்று அமைத்தோம். பொது மக்களுக்கு, ஐஸ்மோர், குடிநீர் பந்தல் ஆகியவை வழங்கிட ஏற்பாடு செய்தோம். நிதி திரட்டி ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான முக்கியப்பொருள்களை வாங்க உதவினோம். மேலும் படிப்பறிவு இல்லாதவர்களுக்குப் படிக்கக் கற்றுக் கொடுக்க உதவினோம். படிப்பின் அவசியத்தை பாமர மக்களும் உணரும் வகையில் எங்கள் ஆசிரியர்களின் உதவி கொண்டு நோட்டீஸ் அடித்து விநியோகம் செய்தோம். அளவிலாத மகிழ்ச்சி அடைகிறோம். மற்ற மாணவர்களும் விடுமுறையை இதுபோன்ற பயனுள்ள முறையில் கழிக்கலாமே!

ஜெ. குத்புதீன் அலிஅகமத்,
குருணிகுளத்துப் பட்டி.

உயர்ந்தேன்

எங்கள் ஊரில் பழமைவாய்ந்த சிவன் கோயிலின் பின்னால் பாழடைந்த மிகப் பெரிய மண்டபம் ஒன்று உள்ளது. மண்டபத்தின் மேல்செடிகள் வளர்ந்து கிடந்தன. இக்கோடை விடுமுறையில் மண்டபத்தைச் சீர்படுத்த கோயில் நிர்வாகக் குழுவினரிடம் அனுமதி பெற்றோம். வேலையைத் தொடங்கினோம். இரண்டு நாட்கள் சென்ற பிறகு இது முடியுமா என்று எங்களுக்குச் சந்தேகம் தோன்றிற்று. சுதந்திரப் போராட்டத் தியாகிகளை நினைத்துக் கொண்டோம். புதுத் தெம்பு உண்டானது. ஒரு வாரத்தில் மண்டபத்தை சீர்படுத்தி முடித்தோம். நிர்வாகக் குழுத் தலைவர் "இந்த அருமையான யோசனையைச் சொன்னது யார்?" என வினவ, முன்னே சென்று வணக்கம் தெரிவித்து, அடக்கத்துடனும் நின்றேன். அருகில் என்னை அழைத்து முதுகில் தட்டிக்



கொடுத்துப் பாராட்டினார். எல்லோருக்கும் பெருமையாக இருந்தது. "உங்கள் எல்லோருக்கும் நான் வருகின்ற திருவிழாவின் போது நிச்சயம் பரிசு தர விரும்புகிறேன்" என்றார். "ஐயா! நாங்கள் பரிசை எதிர்பார்த்து மண்டபத்தைச் சீர்செய்ய வில்லை. கோடை விடுமுறையில் ஒரு நல்ல பணியை ஊருக்கு உதவும் வேலையாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவாவினால் தான் செய்தோம்" என்றோம் இதைக் கேட்ட நிர்வாகக் குழுவினர் முகம் மலர்ந்தனர்.

''இந்த விடுமுறையில் என்ன செய்தீர்கள்?-'' என்று ஆசிரியர் பள்ளியில் வினவியபோது முதலில் கை உயர்த்தியது நான்தான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

வே.பூங்குன்றன், வடமாதிமங்கலம்

பெருமை பெற்றேன்!

தாயின் உடல்நிலை காரணமாய் விடுமுறையை உள்ளூரிலேயே கழிக்க வேண்டுமே என ஏக்கப் பெருமூச்சு விட்டேன். அப்பொழுது எங்களுக்குத் தெரிந்த ஏழைப் பெண் ஒருத்தி, 'தன் பையனைத் திருவரங்கம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சேர்க்க வேண்டும். அதற்கான நுழைவுத் தேர்வு எழுத டியூஷன் கற்றுத்தரத் தன்னிடம் பணம் இல்லையே' என்று மனம் நொந்து கூறினார்.

9 ஆவதிலிருந்து 10 ஆம் வகுப்பு போகும்நான், அந்த ஏழைச் சிறுவனுக்கு நுழைவுத் தேர்வு எழுத டியூஷன் கற்றுத் தர முடிவெடுத்தேன். சித்திரை வெயிலைப் பொருட்படுத்தாமல் பள்ளி ஆசிரியர்களைச் சந்தித்து எப்ப பரீட்சை, எது சம்மந்தமாக கேள்விகளைத் தயாரித்துக் கற்பிக்க வேண்டும் என்று அறிந்து வந்தேன்.

முதல் நாள் சிறுவன் நாராயணன் படிக்க உட்கார்ந்ததும் சரியாக பாடங்களை எழுதவோ, புரிந்து கொள்ளவோ தெரியாதது கண்டு திகைத்தேன். "முயற்சி திருவினையாக்கும்" என்ற நம்பிக்கையில் பொறுமையாக டிபன், தின்பண்டங்களை நான் உண்ணாமல் பத்திரப்படுத்தி அவனை ஊக்குவிக்கப் பரிசாகத் தந்தேன்.



அவனைத் தாஜா செய்து படிக்க வைத்ததால் நாராயணன் வெகு விரையில் கடகடவென்று எழுதவும், படிக்கவும் நன்கு தேர்ச்சி பெற்றான். நுழைவுத் தேர்வு அன்று நானே அவனைப் பள்ளிக்கு அழைத்துப்போய், எழுதிவிட்டு, வெளியே வரும் வரை தவிப்புடன் காத்திருந்து, எழுதிய விடைகளைக் கேட்டுத் திருப்தி அடைந்தேன். 'பாடுபட்டதற்குப் பலன் கிடைத்தது. ஆம்! நாராணன் சிறந்த முறையில் தேர்வுற்று நன்கொடை இன்றிப் பள்ளியில் சேர்ந்து தன் நன்றியை எனக்கு மட்டு மல்ல எங்கள் குடும்பத்திற்கே தெரிவித்தான்.

விடுமுறையை வீணாகப் பொழுது போக்கக் கழிக்காமல் ஓர் ஏழை மாணவனுக்குக் கல்வி கற்றுத்தந்து அதன் மூலம் என் கல்வியின் தரமும் உயர்ந்ததை அனுபவபூர்வமாக உணர்ந்தேன். நம்மாலும் பிறருக்கு உதவ முடிந்ததே என்ற மன நிறைவும் ஏற் பட்டது.

நாராயணனின் பெற்றோர் இவனால் தான் என்பிள்ளை நன்கு படிக்கிறான் என்று, என்னைச் சுட்டிக் காட்டிப் பேசும் பொழுது பெருமையாகவும் உள்ளது.

நா.கிரிதரன், திருவரங்கம்.



மந்திரப் பரங்கிக் காய்கள்

யூராவும், மிகேலும் சகோதரர்கள். இருவரும் மிக்க ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். யூரா ஒரு பணக்காரப் பெண்ணையும், மிகேல் ஒரு ஏழைப் பெண்ணையும் மணம் புரிந்து கொண்டார்கள். கல்யாணம் ஆனதும் இருவரும் தனித் தனியே பிரிந்து போனார்கள்.

யூரா ஏழ்மை நிலையில் கஷ்டப்பட்ட மிகேலுக்கு உதவ மறுத்ததால் மிகேல் மிகவும் கஷ்டப்பட்டான். மிகேலின் சின்ன குடிசையின் கூரையின் கீழ் பல குருவிகள் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்திருந்தன. பலத்த காற்று ஒருநாள் அடித்ததில் கூடுகள் கீழே விழுந்தன. அதில் இருந்த ஒரு குருவியைத் தவிர்த்து மற்றதெல்லாம் இறந்து விட்டன. கீழே விழுந்த குருவியின் காலில் ஒரு குச்சியைக் கட்டி, நன்கு கட்டுப் போட்டு அதற்குப் பால் விட்டு வளர்த்தான் மிகேல். கால் குணமானதும் அந்தக் குருவியை வெளியே பறக்க விட்டான்.

சிலநாட்கள் கழித்து அந்தக் குருவி மிகேலின் குடிசையின் அருகே ஒரு பரங்கி விதையைத் தன் அலகால் கொண்டு போட்டதைப் பார்த்த மிகேலின் மனைவி, மிகவும் மகிழ்ந்து அதைத் தோட்டத்தில் மிகேலை விட்டு நடச் செய்தான். அந்த விதையும் சில நாட்களில் செழிப்பாக வளர்ந்து மூன்று பெரிய பரங்கிக் காய்களைக் கொடுத்தது. நன்கு பழுத்ததும் ஒரு பரங்கிப் பழத்தைப் பறித்து வந்த மிகேல் அதைக் கோடாலியால் பிளந்தான். உடனே ஆச்சரியப்பட்டான்! மிகேலின் மனைவியும் மகிழ்ந்து போனான். அதனுள் பல வகையான உணவுப் பண்டங்களும், பானங்களும் இருந்ததே அதற்குக் காரணம். பல வருடங்கள் அவற்றை உண்டு மகிழ்ந்த மிகேல் இன்னொரு பரங்கிப் பழத்தையும் பறித்து வந்தான். பிளந்தான்.

இரண்டாவது பழத்தில் பல வகையான துணி வகைகள் இருக்கக் கண்டு மிகேலும், அவன் மனைவியும் ஆச்சர்யப்

பட்டார்கள். அதிலுள்ளவற்றைத் தாங்கள் எடுத்துக் கொண்டது போக, கிராமத்தில் உள்ள அனைவருக்குமே கொடுத்து மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

மூன்றாவது பழத்தை இருவரும் பறித்து வந்தார்கள். மிகவும் ஆர்வத்துடன் அதை மிகேல் பிளக்க அதனுள்ளே எண்ணிலடங்கா பொன், மற்றும் வெள்ளிக் காசுகள் இருக்கக் கண்டார்கள். அவற்றைத் தங்களுக்கு வேண்டிய அளவு எடுத்துக் கொண்டதுடன் மற்றவர்களுக்கும் கொடுத்து உதவி புரிந்தார்கள். இப்போது அந்த ஊரில் மிகேல் பெரும் பணக்காரனாகி விட்டான்.

தன்னுடைய சகோதரன் பெரும் பணக்காரன் ஆனதைப் பார்த்து யூரா மிகவும் பொறாமை கொண்டான். அது எப்படி என்று அறிவதற்காகத் தன் மனைவியை அனுப்பினான்.

யூராவின் மனைவி மிகேலின் மனைவியிடம் விவரம் கேட்க அவளும் எதையும் மறைக்காது குருவி செய்த உபகாரத்தைப் பற்றிக் கூறினாள். அதை அப்படியே யூராவிடம் விவரமாகச் சொன்னாள் அவன் மனைவி.

தம்பி பணக்காரன் ஆகி விட்டதன் மர்மத்தை அறிந்து கொண்ட யூராவும் அவன் மனைவியும் மன அமைதி இழந்தனர். எத்தனை ஏழையாக இருந்தவர்கள் இப்படிப் பணக்காரர்களாகி விட்டார்களே என்று இருவரும் பொறாமைப் பட்டனர். அவர்களுக்குப் பசிக்கவில்லை! தூக்கம் வரவில்லை!

கோடைக் காலத்தில் யூராவின் குடிசையில் கூரையின் கீழ் பல குருவிகள் கூடு கட்டின. அதைப் பார்த்த யூரா மகிழ்ந்து போனான். காற்று பலமாக அடித்து அவை கீழே விழாதா என்று ஏங்கினான். அவன் எதிர்பார்த்தபடி காற்று எதுவும் அடித்து குருவிக் குஞ்சுகள் எதுவும் கீழே விழவில்லை! அவனுக்கும் அவன் மனைவிக்கும் ஏமாற்றமான ஏமாற்றம். பொறாமைத் தீயில் அவர்கள் மனம் புழுங்கினர். கடைசியில், யூரா பொறுமையை இழந்து ஒரு குச்சியை எடுத்துக் கூட்டிலுள்ள குருவிகளை அடித்தான். ஒரு குருவியைத் தவிர மற்றதெல்லாம் இறந்து விட்டன. கீழே விழுந்த குருவியின் காலுக்குக் கட்டு கட்டி மிகவும் கவனமாகப் பாதுகாத்தான். பிறகு அது நன்கு சரியானதும் அதை யூரா பறக்க விட்டான்.

"இந்தக் குருவி பறங்கி விதைகளைக் கொண்டு வருமா?" என்று சந்தேகத்துடன் கேட்டாள் யூராவின் மனைவி.

"கண்டிப்பாக வரும்," என்று நம்பிக்கையுடன் கூறினான் யூரா.

பறந்து சென்ற குருவி சில நாட்கள் கழித்து யூராவின் குடிசையின் அருகில் ஒரு சிறிய பரங்கி விதையைப் போட்



டது. அதைப் பார்த்த யூராவும் அவன் மனைவியும் மிகேலின் வீட்டிற்கு அதிர்ஷ்டம் அடித்தது போன்று நமக்கும் அடிக்கப் போகிறது' என்று மகிழ்ந்து அந்த விதையை மண்ணில் ஊன்றினார்கள்.

சில நாட்கள் கழித்து பறங்கி விதை முளைத்தது. செழிப்பாக வளர்ந்தது. ஆனால் பல பூக்கள் பூத்த போதிலும் ஒரே ஒரு காய்தான் காய்த்திருந்தது.


"தம்பி வீட்டில் மூன்று பழம் காய்த்ததே! நம்ம வீட்டில் ஒன்றுதானே காய் விட்டிருக்கிறது!" என்று புலம்பினாள் யூரா.

"நீங்கள் குருவிக் கூட்டைப் பிரித்து அடித்த அடியில், குருவி திரும்பி வரவே வராது என்று எண்ணினேன். இந்தவரை அது நம்மை ஏமாற்றாது திரும்பி வந்து ஒரு விதையையாவது போட்டு, செடியாக்கி, ஒரு பழமாவது கொடுத்திருக்கிறதே என்று நான் நினைக்கிறேன்" என்றாள் அவன் மனைவி.

அந்தக்காய் பழுக்கும் வரையில் யூராவும், அவன் மனைவியும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார்கள். பகலிலும் இரவிலும் அவர்கள் தூங்குவது கூட இல்லை. யாராவது திருடிக் கொண்டு போய் விடுவார்களோ என்ற பயம் வேறு.

பரங்கி ஒரு வழியாக நன்கு பழுத்தவுடன் இருவரும் ஜாக்கிரதையாக அதைப் பறித்து உள்ளே எடுத்து வந்தார்கள். அதை யூரா பிளந்த போது நெருப்பு ஜுவாலை வீசி வாட்டியெடுத்தது. அவனுடைய குடிசை, வயல், நெல் மூட்டைகள் எல்லாவற்றையும் நெருப்பு ஜுவாலை நாசப்படுத்தி விட்டது. யூராவும் அவன் மனைவியும் ஏழையாகிப் போனார்கள். அவனுக்குத் தன் சகோதரன் மிகேலிடம் போய் உதவி கேட்பதற்கு அவமானமாக இருந்தது. தம்பியிடம் உதவி கேட்க அவனுக்கு எங்கே முகம்? அவன் துன்பப்பட்ட காலத்தில் மகிழ்ந்திருந்தவன் ஆயிற்றே? யூராவும் அவனுடைய மனைவியும் அந்த ஊரை விட்டே ஓடி விட்டனர்.


— இந்திரா கோபாலன்



கேள்விகள் சொல்லப்படும்

* வெள்ளி கிரகத்தைப் பற்றி விண்வெளி ஆராய்ச்சியில் ஏதும் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளதா?— மூ.சந்திரமணி, சாத்தூர்—2.

வெள்ளி என்ற வீனஸ் கோளில் ரஷ்யாவின் வெனீரா என்ற விண்கலங்கள் 1984ஆம் ஆண்டிலேயே ஆராய்ச்சிகளைத் தொடங்கி விட்டன. இவைகளைத் தொடர்ந்து அமெரிக்காவின் 'மெகல்லன்' என்ற விண்கலமும் 1990லிருந்து ஆராய்ச்சிப் பணிகளைத் தொடங்கியுள்ளது.



* விண்வெளி ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்படும் எல்லாவற்றிற்கும் ரோமன் அல்லது கிரேக்க நாட்டுப் பெயர்களே வைக்கப்படுகின்றனவே? இது ஏன்? — கி.ஆல்பர்ட், ராணிப்பேட்டை.

அறிவியலார் தொடர்புடைய பெயர்கள்தான் பொதுவாக வைக்கப்படுகின்றன. இப்படித்தான் பெயர் வைக்க வேண்டும் என்று யாரும் சட்டம் போடவில்லை. யுரேனஸ் கோளில் தோன்றும் 15 சந்திரன்களுக்கும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்கள்தான் சூட்டப்பட்டுள்ளது.

* விலங்குகளின் பால் எல்லாமே வெண்மை அல்லது மஞ்சள் கலந்த வெண்மையாகத்தான் இருக்குமா?— மா.வெளியங்கிரி, காங்கேயம்.

பொதுவாக பாலின் நிறம் வெண்மை அல்லது மஞ்சள் கலந்த வெண்மைதான். ஆனால் நேபாளம், பூடான் பகுதிகளில் வாழும் யாக் என்ற எருமை இனத்தின் பால் வெளிர் பிங்க் வண்ணத்தில் சில குறிப்பிட்ட மாதங்களில் இருக்கிறது.

* கோஹினூர் வைரம் என்கிறார்களே, இந்தக் கோஹினூர் எங்கே இருக்கிறது?— து. தெய்வானை, புல்லாணி.



கோஹினூர் என்பது ஓர் ஊரல்ல. இது பாரச்கச் சொல். இதற்குப் பொருள் "குன்றின் மேலிருந்து வீசும் ஒளி" என்பது. மொகலாய மன்னரான ஷாஜகானின் மயிலாசனத்தில் பதிக்கப்பட்டிருந்தது இந்த ஒப்பற்ற ஒளிவீசும் வைரம். இதன் பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்ட பாரசீக வீரரான நாதிர் ஷா இந்தியாவின் மீது படையெடுத்துக் கைப்பற்றிக் கொண்டார். இந்த ஒப்பற்ற உலக அதிசயமான வைரத்தைப் பார்த்ததும் அதிசயத்தால் தன்னையே மறந்த நாதிர்ஷா "கோஹினூர்!" என்று

வியந்து கூச்சலிட்டார். இதுவே வைரத்திற்குப் பெயராக நிலைத்து விட்டது. மகாபாரத காலத்தில் இருந்து மாளவ மன்னர்களின் குடும்பச் சொத்தாக இருந்த இந்த ஒப்பற்ற வைரம், பல மன்னர்களின் கைக்கு மாறி, ஷாஜஹானின் மயிலாசனத்தில் பதிக்கப்பட்டு, நாதிர் ஷாவால் கைப்பற்றப்பட்டு, பல நாடுகளில் சுற்றி, ஆங்கில கவர்னராக இருந்த சர் ஜான் லாரன்ஸ் என்பவரால் பஞ்சாபின் பொக்கிஷத்தில் இருந்து கைப்பற்றப்பட்டு, பரிசுப் பொருளாக இங்கிலாந்து மகாராணி விக்டோரியாவுக்குத் தரப்பட்டது. இந்த ஒப்பற்ற வைரம் இங்கிலாந்து மன்னர்களின் அரசிகளின் மணிமுடியை இன்றும் அலங்கரித்து வருகிறது. இதற்கு இணையான வைரம் உலகத்தில் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

*** "ரோஜாவைப் போல் உயர்ந்து மணம் வீசி வாழ்" என்று எனக்கு வந்த வாழ்த்து ஒன்றில் எழுதப்பட்டு, கொடியில் ரோஜா மலர்கள் பூத்திருப்பதுபோல் ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. ரோஜா, செடி பூக்கும் இனம் தானே?– மா.பூபதி தாசன், நாமக்கல்.**

நமக்கு நன்கு அறிமுகமாகியுள்ள ரோஜா, ஒரு செடி மலரே. ஆனால் ரோஜாவில் கொடியும் உண்டு. காஷ்மீரின் தோட்டங்களில் ரோஜாக் கொடிகள் உள்ளன. உயர்ந்த மதில் சுவர்கள், அலங்காரத் தூண்களில் சுற்றிச் சுற்றிப் படர்ந்து பிரமிப்பூட்டும். இவை கோடையில் பூத்து மணம் வீசும். காஷ்மீர் நாடோடிக் கதைகளில் ரோஜாக் கொடிகள் உண்டு.





• பெண்டுலம் வைத்த கடிகாரத்தைக் கண்டு பிடித்தது யார்?– எ.மாரிமுத்து, ஏற்காடு.

பெண்டுலம் வைத்த முதல் கடிகாரத்தைச் செய்த பெருமைக்கு உரியவர் பெயர் கிறிஸ்டியன் ஹைஜன் என்ற டச்சு நாட்டு விஞ்ஞானி. இது செய்யப்பட்ட ஆண்டு 1657.



*** ஆங்கில சுருக்கெழுத்தாளர்களுக்கு "பிட்மேன்'ஸ் இன்ஸ்ட்டிரக்டர்" இருப்பதுபோல், தமிழில் சுருக்கெழுத்துக் கற்க விரும்புவோருக்கு புத்தக வழிகாட்ட ஏதும் இருக்கிறதா? எங்கு கிடைக்கும்?– மா.சங்கீதா, மேட்டுப்பாளையம்.**

இருக்கிறது. 1935ஆம் ஆண்டே என். சுப்ரமணியம் என்பவர் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டுள்ளார். இதன் திருத்தப்பட்ட மறுபதிப்பை புகழ்பெற்ற லிப்கோ நிறுவனம் 1959ல் வெளியிட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு அரசின் வெளியீடாகவும் ஒரு புத்தகம் வெளிவந்துள்ளது. தமிழ்நாடு அரசு புத்தக வெளியீட்டுப் பிரிவு, தமிழ்நாடு அரசு அச்சகம், அண்ணா சாலை, சென்னை-2

என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்.

*** காசிப கோத்திரம், கௌசிப கோத்திரம் என்றெல்லாம் இப்பொழுது குறிப்பிடுகிறார்களே, இந்த வழக்கம் எப்பொழுது ஏற்பட்டது?— சு.கண்ணபிரான், கொத்தமங்கலம்.**

கோத்திரங்களைக் குறிப்பிடும் வழக்கம் சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது. கள்ளில் ஆத்திரையன், (ஆத்ரேய), காசிபன் கீரன்(காசிப), இளங்கௌசிகனார் பெருங் கௌசிகனார் (கௌசிப) என்று தங்கள் பெயரிலேயே கோத்திரத்தைக் குறிப்பிட்ட புலவர்கள் சங்க காலத்தில் இருந்திருக் கிறார்கள்.


*** ஃபிடிலும், வயலினும் ஒன்று தானா?— மா.கிருஷ்ணகுமாரி, குறிஞ்சிப்பாடி.**

இல்லை. ஃபிடிலுக்குத் தோலில் மூடப்பட்ட கொட்டாங்கச்சி அல்லது மண் குடம் உண்டு வயலினுக்குக் குடம் கிடையாது. ஆனால் இரண்டுமே தந்தி வாத்தியங்களே. இரண்டையும் வாசிக்க வில் வேண்டும்.

*** பெங்குவின் பறவை எத்தனை தொலைவு ஆழம் கடலில் நீந்தும்?— கி.சன்னாசி, காசிப்பாடி.**

ராஜா பெங்குவின் (EMPEROR PENQUIN) கடலுக்குள் 265 மீட்டர் வரை மூழ்கிச் செல்லும். 9 நிமிடங்கள் வரை நீருக்குள் மூழ்கி இருக்கும்.





*** தரையைத் தொடாமல் வாழ்கின்ற பறவைகள் உண்மையாகவே இருக் கின்றனவா?— தா.தாமோதரன், திருப்பூர்—1.**

Europeon Swift என்ற பறவை இனம் தரையைத் தொடுவதே இல்லையாம்! இரை பிடித்து விழுங்குவது, தண்ணீர் குடிப்பது, தூங்குவது, குஞ்சு பொரிப்பது எல்லாமே பறந்து கொண்டேதானாம்! இது முற்றிலும் உண்மையல்ல என்கிறார்கள் சில ஆரா யச்சியாளர்கள். இன்னும் முடிவாக வில்லை

*** லேத்தை முதலில் யார் அமைத் தார்கள்?— சைமன் பாக்கியமுத்து, விலியனூர்.**

லேத் (LATHE) தை முதலில் அமைத்த பெருமைக்கு உரியவர், பிரிட்டனைச் சேர்ந்த ஹென்றி மட்ஸ்லே (HENRY MAUDSLEY). ஆண்டு 1800.

*** காஸ்மோ நாட், ஆஸ்ட்ரோ நாட் இரண்டுக்கும் என்ன வேறுபாடு?— வெ.மைதிலி, நெய்வேலி.**

இரண்டுமே விண்வெளி வீரர்களைக் (பயணிகளை) குறிப்பவைதான். CASMONAUT என்பவர் ரஷ்ய விண்வெளி வீரர். ASTRONAUT என்பவர் அமெரிக்க விண்வெளி வீரர்.

பிருந்தாவனக் கவியரங்கம்



பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பழமை விரும்பும் பாட்டி
பொக்கை வாயைத் திறந்தே
பாட்டும் கதையும் சொல்வாள்.

கோணல் முதுகுப் பாட்டி
கோபம் அறியாப் பாட்டி
கோலைப் பிடித்து நடந்தே
கோவில் சுற்றும் பாட்டி.


எழுதப் படிக்கத் தெரியா
எல்லாம் அறிந்த பாட்டி
இருந்த இடத்தில் இருந்தே
எல்லாம் செய்யும் பாட்டி!

— தி. பேபி சுகுணா, சென்னை - 61.

ஆசை

அறிவு வளர ஆசை
ஆசான் ஆக ஆசை
இசை இசைத்திட ஆசை
ஈகை வளர்த்திட ஆசை
உதவி புரிந்திட ஆசை
ஊரார் புகழ ஆசை
எளிய உடையில் ஆசை
ஏற்றம் பெற்றிட ஆசை
ஐயம் அகற்றிட ஆசை
ஒழுக்கம் பேணிட ஆசை
ஓய்வை வெறுத்திட ஆசை
ஔவை நெறியில் ஆசை

— ர. பஞ்சமி மீனாக்ஷி,
சென்னை - 4.





முடியுமோ?


சின்னப் பாப்பா தன்னையே
சேர்த்து அணைத்துத் தூக்கலாம்
நன்கு வளர்ந்த மனிதனை
நம்மால் தூக்க முடியுமோ?

கன்றுக் குட்டி தன்னையே
கட்டி இழுத்து நிறுத்தலாம்
நன்கு வளர்ந்த காளையை
நம்மால் நிறுத்த முடியுமோ?

கெட்ட செயல்கள் யாவையும்
கிள்ள வேண்டும் முளையிலே
விட்டால் அதனை முற்றிலும்
வேரறுக்க முடியுமோ?

— பா. மின்சா மன்சீர்,
கொழும்பு - 10.
(இந்திய முகவரி இல்லை.)

பிருந்தாவனக் கவியரங்கம்



கழுதை

கழுதை நல்ல கழுதை
கடிவாள மில்லாக் கழுதை
பொழுது புலரும் வேளையில்
பொதிகள் சுமக்கும் கழுதை.

தீனி தனியாக் கேட்கா
தோழன் நல்ல கழுதை
தானே காகிதம் தேடி
தின்னும் நல்ல கழுதை

குட்டிச் சுவரின் அருகே
குனிந்து நிற்கும் கழுதை
கிட்டப் போனால் நம்மை
கோபம் கொண்டு உதைக்கும்!

— கே. திருக்குமரன், கடையம்.


வாரீர்!


மரத்தை வளர்ப்பது வளமாம்
மனிதர்க்கு இதுவே அறமாம்
மரங்கள் இருந்தால் சோலை
மறந்தால் அதுவே பாலை!

குளிர்ந்த நிழலைத் தருகுது
காயும் கனியும் உதவுது
துளியும் தன்னலம் இன்றியே
தன்னையே நமக்குத் தருகுது!

மரங்கள் தந்திடும் நன்மை
மறந்தால் அழிவது உண்மை
கரங்கள் கூப்பித் தொழுதேன்
காத்திட வாரீர் மரத்தை!

— எஸ். விஜயராம், சென்னை - 19.





கடிகாரம்

நல்ல அழகுக் கடிகாரம்
நேரம் காட்டும் கடிகாரம்
ஆண்டு மாதம் கிழமைகளை
அழகாய் காட்டும் கடிகாரம்.

பள்ளி செல்லும் நேரத்தை
பாங்காய் காட்டும் கடிகாரம்
ஒவ்வொரு மணிக்கும் இடையிடையே
ஓசை எழுப்பும் கடிகாரம்.

மதிய உணவு நேரத்தை
மறக்கா துணர்த்தும் கடிகாரம்
காதுக் கினிய இசையினையை
கருத்தாய் ஒலிக்கும் கடிகாரம்.

இருட்டில் கூட நேரத்தை
இனிதாய் ஒளிர வைத்திடும்
முறையாய் சாவி கொடுத்திட
முயற்சி வேண்டாக் கடிகாரம்.

— க. ராஜவேல், கச்சிராயபாளையம்.


பூனையார்!

மியாவ் சொல்லும் பூனையார்
மீசை வைத்த பூனையார்
பாய்ந்து எலியை விரட்டிடும்
பாயும் புலி பூனையார்.

சன்னல் இடையே தாவுவார்
சத்தம் இன்றி ஓடுவார்
மின்னும் விழியைக் காட்டியே
மிரட்ட முயலும் பூனையார்.

அடுக்களைக்குள் தாவுவார்
அங்கும் இங்கும் பதுங்குவார்.
மூட மறந்த பால் தயிர்
முழுக்கக் குடித்து ஓடுவார்!

— **கே. பழனிச்சாமி, சொக்குமாரி பாளையம்.**




கட்டில்

நான்கு கால் கட்டில்
நல்ல உறுதிக் கட்டில்
நான் உறங்கும் கட்டில்
நல்ல மரக் கட்டில்

தாத்தா விரும்பிச் செய்த
தனித்த சிறப்புக் கட்டில்
மெத்தை போட்டுப் படுத்தால்
மகிழ்ச்சி தரும் கட்டில்.

தூக்க எட்டுப் பேர்கள்
தேவைப் படும் கட்டில்
தேக்கு மரத்தில் செய்த
திண்மை மிக்க கட்டில்.

— **எம். சேக் உசேன், வடகரை.**



பட்டாம்பூச்சி

பட்டாம் பூச்சி பாருங்கள்
பறந்து வானில் சுற்றுது.
வட்டம் போட்டுப் பறக்குது
வண்ண மலரைச் சுற்றுது!

மெல்லப் பூவில் அமருது
மெதுவாய்த் தேனை உறிஞ்சுது!
தொல்லை ஏதும் இன்றியே
தோட்டம் முழுக்கச் சுற்றுது!

பிடிக்க முயலும் சிறுவனை
போக்குக் காட்டி அலைக்குது
விடியும் வரை உறங்கவே
வண்ணச் சிறகை மூடுது!

— **இரா.அ. தென்றல் நிலவன், சூரியம் பாளையம்.**





கலைப் பொருள் செய்வோம் - 10

கே. குப்புராஜ்

யானைக் குட்டி
திருட் டுத்தனமாகக்
கரும்பைத் திருடித் தின்றால்
எப்படி முழிக்கும் தெரியுமா?
படத்தில் காட்டியுள்ளபடி தான்
திருட்டு முழி முழிக்கும்! இதைத்தான்
இப்பொழுது நீங்கள் செய்யப் போகிறீர்கள்.

இதைச் செய்யத் தேவைப்படும் பொருள்கள் :

1. அவுட் லைனில் உள்ள அளவுக்கு பழைய பைண்டு நோட்டின் கனத்த அட்டை.
2. கறுப்பு அல்லது சிமெண்ட் கலர் காகிதம்.
3. உல்லன் நூல் கண்டு (கிரீம் கலர்)
4. பெரிய சைஸ் டூத் பேஸ்ட் காலி அட்டைப் பெட்டி
5. பெவிகால்
6. கத்தரிக்கோல், பிளேடு.


செய்முறை :

இந்த யானைக் குட்டி இரண்டு பகுதிகளாக இணைக்கப் பட்டது. A பகுதி துதிக்கை - தலைப் பகுதி.

B பகுதி பின்பக்கப் பகுதி.

திருட்டு முழி யானை!

இங்கே உள்ள A, B பகுதிகளை அப்படியே ஜெராக்ஸ் செய்து கொண்டு, அட்டையில் ஒட்டிக் கத்தரித்துக் கொள்ளவும். புள்ளியிட்ட பகுதி Bயுடன் சேரும். இந்த வெட்டிய பகுதிகளை கறுப்பு அல்லது சிமெண்ட் கலர் காகிதத்தில் ஒட்டி, பின்பக்கம் மடித்துக் கொள்ளவும். கண்களைத் தனியே செய்து A பகுதியில் ஒட்டிக் கொள்க. உல்லன் நூலைக் கொண்டு, தலைப் பின்னலைப் பின்னுவது போல் ஒரு சாண் அளவு நீளத்திற்குப் பின்னி, முடித்து குஞ்சம் விடவும். அப்படியே இதை மடித்து ஒட்டி விடவும். A பகுதிக்குப் பின்னால் B பகுதியை ஒட்டி விடவும். ஒரு கனத்த நூல் கயிறைப் பின்னால் ஒட்டினால் சுவரில் மாட்டலாம். இல்லை அப்படியே டீ.வி. மேல், ரேடியோ .மேல் வைக்கலாம்.



இப்படி வைக்க, காலி டூத் பேஸ்ட் பெட்டியில் காய்ந்த மணலை நிரப்பி, இறுக்கி, வாய்ப் பகுதிகளை ஒட்டி விடவும். இதை அப்படியே ஒரு வெளிர் வண்ணக் காகிதத்தில் வைத்துச் சுற்றி, மடித்து பெவிகால் ஒட்டிக் கொள்ளவும். இதன் மேல், யானையின் இரு கால்களையும் பின்னால் பெவிகால் போட்டு ஒட்டி விடவும். பிறகு எங்கு வைத்தாலும் யானை நிற்கும். திருட்டு முழி முழிக்கும். செய்தவர்களுக்குப் பெயர் வாங்கித் தரும்.

தைரியம் காத்த

அன்று அந்தக் கல்லூரியின் ஆண்டு விழா! பகல் முழுதும் மாணவர்கள் உல்லாசத்தில் மிதந்தனர். மாலை ஐந்து மணி. விழாவின் முக்கியத் தலைவரும், பரிசளிப்புத் தலைவரும் இன்னும் பிறரும் வந்து கூடி விட்டனர். முறையான வரவேற்பு உபசரிப்புகளுக்குப் பிறகு ஆண்டு விழாக் கூட்ட நடவடிக்கைகள் துவங்கின.

சொற்பொழிவுகளுக்குப் பிறகு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றிற்குப் பிறகு பரிசளிப்பு நிகழ்ச்சி. அதற்குரிய தலைவர் மேடையில் எழுந்து நின்றார். பல்வேறு போட்டிகளில் தமது திறமைகளைக் காட்டிக் கடுமையாக உழைத்து வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்த மாணவர்களின் உள்ளக்களிப்பை மகிழ்ச்சி பொங்கி எழத் தொடங்கி விட்டது. உடனே, மாணவரின் கைத்தட்டல் ஒலிக்கு ஏற்ப, அவரும் கைகளைத் தட்டித் தட்டிப் பரிசு பெறும் மாணவர்களை அருகில் வரவேற்றுப் பரிசை அவர்கள் கையில் ஒப்படைத்தார். பிறகு, அவர்கள் கையைப் பற்றிக் கை குலுக்கினார். அவர்களைப் பற்றிய பல்வேறு தகவல்களை விசாரித்தறிந்து முதுகில் தட்டிக் கொடுத்தார். இவ்விதம் பரிசளிப்பு நிகழ்ச்சிகள் மகிழ்ச்சிப் பெருக்கின் உச்சக் கட்டத்தில் நடந்து கொண்டிருந்தன.

அப்போது, யாரோ ஒருவர், பதற்றத் துடன் ஓடி வந்தார். தலைவரிடம் ஏதோ முக்கியச் செய்தியை ரகசியமாக உரைத்தார். தலைவரின் முகத்தில் ஏதோ ஒரு இனம்புரியாத கவலைக்குறி! ஒரே மற்றவர்கள் உணக்கப்படுத்தும் விதமாக எல்லா மாணவர்களும் தமது உற்சாகத்தைக் கைத்தட்டல் மூலம் காட்டிக் கொண்டிருந்தனர்.

ஒரு ஆசிரியர் பரிசு பெறும் மாணவர்களின் பெயர்களை, ஒவ்வொன்றாக அறிவித்தார். உடனே மாணவர்களின் கரவொலி விண்ணைப் பிளந்தது. அவர்கள் எழுப்பிய மகிழ்ச்சிக் கூச்சல் அவ்வொலியை மிஞ்சியது. அவற்றினூடே புகுந்து நீந்திய பரிசு பெறும் மாணவர்கள், பரிசைப் பெறுவதற்காக மேடையை நோக்கி ஓடோடி வந்தனர். அவர்களின் ஓட்டத்தின் வேகத்துக்கு ஏற்பக் கரவொலியின் வேகமும் தானகதி தவறாமல் அதிகரித்தது.

மாணவர்களின் உற்சாகத்தைக் கண்ட விழாத் தலைவருக்கும் ஒரு கணம்தான். அடுத்த கணம் அவர் சாதாரணமாகி, இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டார். பரிசளிப்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்தார்.

எல்லாம் கொஞ்சம் நேரத்துக்குத் தான். அதன் பிறகு, சட்டென்று முன்பு வந்த அதே நபர் மறுபடி அதிகப் பதற்றத்துடன் மேடை மீது ஏறி, தலைவரின் காதில் ஏதோ சொன்னார்.

தலைவரின் முகத்தில் கவலைக்குறி தான். பதற்றமும் பீதியும் கலந்திருந்தன. எனினும் அவர் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, பழையபடி பரிசளிப்பில் ஈடுபடலானார். தனக்கு ஏற்பட்ட மனக் கவலைகளால், பரிசு பெறும் மாணவர்களின் உல்லாசத்துக்குத் துளியும் களங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு, தான் ஏற்றுக்

கொண்ட பொறுப்பைச் செம்மையாக நிறைவேற்றினார்.

பரிசளிப்பு நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பிறகும் கூட, அவர் பரிசு பெற்ற மாணவர்களின் திறமைகளைப் பாராட்டிப் பேசி, அவர்களை ஊக்கப்படுத்தினார். 'உண்மையான உழைப்பு என்றென்னும் வீண் போகாது; உரிய நேரம் வரும் போது, அது நிச்சயம் பலனளிக்கும்' என்பதையும் அழகாக எடுத் துரைத்துத் தனது பணியை அவர் நிறைவு செய்தார்.

பரிசளிப்பு விழாக் கூட்டம் முடிவடைந்ததும், அவசர அவசரமாக மேடையை விட்டு இறங்கிய அவர், சிறிதும்



தலைவர்

தாமதி யாமல், தன் வீடு நோக்கிப் படு வேகமாக விரைந்தார். எவரிடமும் சொல்லிக் கொள்ளக்கூட இல்லை! மேடையில் காட்டாத அவசரத்தை அவர் ஏன் தாம் வீட்டுக்குச் செல்வதில் காட்ட வேண்டும்?

பரிசளிப்பு நிகழ்ச்சியின் போது இடையிடையே மேடைக்கு வந்து அவருடைய காதோடு சொல்லப் பட்ட செய்திதான் காரணம்.

முதல் தடவை வந்த செய்தி என்ன தெரியுமா? அந்தத் தலைவரின் நோயுற்றிருந்த மகள் - சிறுமியின் உடல் நிலை மிகுந்த கவலைக் கிடமாகி விட்டது என்பதுதான்.

இரண்டாவது முறை கிடைத்த செய்தி, அக்குழந்தை இறந்து விட்டது என்பது. எவரிடமும் சொல்லிக் கொள்ளக்கூட நின்று தாமதிக்காமல், அவர் வீடு நோக்கி விரைந்ததன் காரணம் இதுதான்.

இப்படித் தனக்கு ஏற்பட்ட மனக் கவலையாலும், துக்கத்தாலும் பிறருடைய மகிழ்ச்சியில் எள்ளளவும் குறைவு ஏற்பட்டு விடாமல் மிகுந்த தைரியத் துடன் கவனமாகத் தனக்கு இடப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றிய அந்தப் பரிசளிப்புத் தலைவர் யார் தெரியுமா?

அவர்தான், பிற்காலத்தில் நமது பாரதத்தின் குடியரசுத் தலைவராக இருந்த பெருமதிப்புக்குரிய மேதை டாக்டர் ஜாகிர் ஹுசைன் அவர்கள்.

தன்னுடைய சுகதுக்கத்தினால், மற்றவர்களின் மகிழ்ச்சிக்கு எந்த விதக் குந்தகமும் வந்து விடக் கூடாது என்பதில் மிகுந்த கவனமாக இருந்த அவருடைய உயர்குணங்கள்தான், அவருக்கு அந்த உயர் பதவியைத் தேடித் தந்தன என்றால் அது மிகையல்ல.

ஜானகிமணாளன்



பள்ளி மாணவ, மாணவிகள் சர்க்கஸ் கூடாரத்தினுள் அமர்ந்து சர்க்கஸைக் கண்டு ரசித்தனர். யானைகளின் பந்து விளையாட்டும் சர்க்கஸ் ஆட்கள் செய்யும் பலவித சாகசங்களும் மாணவ, மாணவியரின் உள்ளத்தைக் கவர்ந்தன. இடையிடையே சர்க்கஸ் கோமாளியின் செயலும், பேச்சும் அனைவரையும் சிரிக்க வைத்தது.

இன்னும் சிறிது நேரத்திலேயே சர்க்கஸ் முடியப் போறதே என்று பார்க்க வந்தோர் உள்ளம் ஏங்கத் தொடங்கியது. சர்க்கஸ் முடிந்ததும் அனைவரும் அவரவர் வீட்டிற்குக் கலைந்துச் சென்றனர்.

கண்ணன் மட்டும் வீட்டிற்குச் செல்லப் பிடிக்காமல் கன்னத்தில் கைவைத்தபடி சிந்தனையில் அமர்ந்திருந்தான். கண்ணனுக்குப் படிக்கப் பிடிக்கவில்லை. நிம்மதியாக சர்க்கஸில் கோமாளியைப் போல சேர்ந்துவிடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. 'கோமாளியாகி விட்டால் படிக்க வேண்டாம். அனைவரையும் சிரிக்க வைக்கலாம் நாமும் சந்தோஷமாக, சுதந்திரமாக இருக்கலாம்' என்று ஏங்கத் தொடங்கினான் கண்ணன். சர்க்கஸ் முடிந்த பிறகும், கண்ணன் மட்டும் தனி ஆளாக அமர்ந்திருந்ததைப் பார்த்து சர்க்கஸ் பணியாளர் ஒருவர் நெருங்கி வந்தார்.

"தம்பி, சர்க்கஸ் முடிந்து வெகுநேரம் ஆகிவிட்டதே! இன்னமும் வீட்டிற்குப் போகாமல் இங்கேயே ஏன் அமர்ந்திருக்கிறாய்?" என்றார் அவர்.

"வீட்டிற்குப் போகவே பிடிக்கவில்லை" என்று பதிலளித்த கண்ணன், "உங்களை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே. நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"கோமாளி வேஷம் போட்டது நான் தான் தம்பி. வேஷத்தைக் கலைத்து விட்டதால் என்னை உனக்கு சரியாக அடையாளம் தெரியவில்லை. அதுசரி, உனக்கு ஏன் வீட்டிற்குப் போகப் பிடிக்கலே?" என்று கேட்டார் கோமாளி.

"வீட்டிற்குப் போனால் எப்போதும் படிக்கச் சொல்கிறார்கள். எனக்கு மிகவும் அலுப்பாயிருக்கிறது. உங்களைப் போல் சுதந்திரமாக, சந்தோஷமாக இருக்க வேண்டும் போல ஆசையாக உள்ளது" என்றான் கண்ணன் ஏங்கிய குரலில்.

சர்க்கஸ் கோமாளி கண்ணனைப் பற்றிய எல்லாவற்றையும் அவனது பேச்சிலிருந்தே புரிந்துக் கொண்டார். பரிவோடு கண்ணனின் தோளைப் பற்றினார் சர்க்கஸ் கோமாளி.

"உனக்கு அம்மாவைப் பிடிக்குமா? அப்பாவைப் பிடிக்குமா?"



எனக்குப் பிடிக்கலே!

''எனக்கு இருவரையும் பிடிக்கும். எப்போதும் படி என்று அவர்கள் சொல்வது தான் பிடிக் காது'' என்றான் கண் ணன்.

''என்னைப் போல் நீயும் சர்க்கஸில் சேர்ந்து விட்டால் அடிக்கடி உன் பெற்றோரைப் பார்க்க முடியாது. பல ஊர்களுக்கும் செல்ல வேண்டும். எனக்கு அம்மா மட்டுமே இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துப் பல நாட்கள் ஆகி விட்டன. அம்மாவிற்கு உடல் நிலை மிகவும் சரியில்லை என்று காலையில் கடிதம் வந்திருக்கிறது'' என்றார் கோமாளி வேதனையுடன்.

''மனதில் இத்தனை வேதனையை வைத்துக் கொண்டு வெளியில் எப்படி உங்களால் மற்றவர்களைச் சிரிக்க வைக்க முடிகிறது?'' என்று வியப்புடன் வினவினான் கண்ணன்.

''வேதனையை என்னால் வெளியில் காட்ட முடியாது தம்பி. காட்டவும் கூடாது. மற்றவர்களைச் சிரிக்க வைத்தால்தான் எனக்கு சம்பளம் கிடைக்கும். அம்மாவுக்குப் பணம் அனுப்ப முடியும்.''

''மாணவனாக இருக்கும்போது என் தாயின் அறிவுரைகளைக் கேட்காததினால்தான் எனக்கு இந்த நிலை. படிப்பு வேண்டாம் என்று படிப்பின் மேல் ஏற்பட்ட கசப்பால் வீட்டை விட்டு ஓடி வந்தேன். காலம் கடந்த பிறகுதான் நான் செய்தது எத்தனை பெரிய முட்டாள் தனம் என்பதை உணர்ந்தேன். நானும் நன்கு படித்திருந்தால், நல்ல உயர்ந்த நிலையில் இருந்திருப்பேன். என் தாயாரையும் நல்ல முறையில் வைத்திருப்பேன். கல்வியைப் பாதியிலேயே முட்டாள் தனமாக நிறுத்தி விட்டேனே என்று நான் இப்பொழுது வருத்தப்படுகிறேன். ஆனால் நீயோ, படிப்பை நிறுத்திவிட்டு சர்க்கஸில் சேருவேன் என்று பிடிவாதமாக இருக்கிறாயே!'' என்றார் சர்க்கஸ் கோமாளி.

சர்க்கஸ் கோமாளியின் வார்த்தைகள் கண்ணனைச் சிந்திக்க வைத்தன. தெளிவான முடிவுடன் எழுந்து நின்று அவரை வணங்கினான்.

''என் மனம் தெளிந்து விட்டது ஐயா. இனி நல்ல முறையில் கவனமாகப் படிப்பேன். படித்து வேலைக்குச் சென்று என் பெற்றோரைக் காப்பாற்றுவேன்'' என்று உறுதியான குரலில் கூறி நன்றி சொல்லி விட்டு வீட்டை நோக்கி நடந்தான் கண்ணன்.

''வேஷம் போட்டு மற்றவர்களை வெறுமே சிரிக்க வைக்கும் நான், இன்று வழி தவற இருந்த ஒரு மாணவனை ஒழுங்கான பாதைக்குத் திருப்பி விட்டேன்?'' என்ற மனநிறைவுடன், கண்ணன் செல்வதையே சர்க்கஸ் கோமாளி பார்த்துக் கொண்டிருந்தார்.

—மல்லிகா



எஜமானைத் தேடிய நாய்!

நாய் ஒன்று தனக்கு சரியான எஜமானனைத் தேடி அலைந்தது. ஒரு பெரிய ஓநாயைப் பார்த்தது. அது மிகவும் பலமுள்ளதாக இருக்கக் கண்டு 'நீ எனக்கு எஜமானனாக இருப்பாயா? நான் உனக்கு வேலைக்காரனாக இருக்கிறேன்' என்றது. ஓநாயும் ஒப்புக் கொண்டது. இரண்டும சேர்ந்து போய்க் கொண்டிருந்தன.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரிய முள் புதரில் ஓநாய் ஒளிந்து கொள்வதைப் பார்த்து 'ஏன்? யாருக்குப் பயந்து ஒளிந்து கொள்கிறாய்?' என்று நாய் கேட்டது.

"அதோ! அங்கே கரடி வருகிறது பார். அது நம் இரண்டு பேரையும் கொன்று தின்றுவிடும்' என்றது ஓநாய்.

அப்படியென்றால் ஓநாயைவிடக் கரடி பலமுள்ளது என்று எண்ணிய நாய் கரடியிடம் 'நீ எனக்கு எஜமானனாக இருக்க வேண்டும். நீதான் பலசாலி' என்று கூறி ஓநாயை விட்டுவிட்டு கரடியுடன் சென்றது.

சிறிது தூரம் சென்றதும் மாடுகள் வந்து கொண்டிருந்தன. திடீரென்று மாடுகள் மிரண்டு ஓடுவதைக் கண்ட கரடி "சிங்கம் வருகிறது" என்று ஒரு மரத்தின் மேல் ஏறி ஒளிந்து கொண்டது."

'அப்படியென்றால் உன்னைவிட சிங்கம் பலமுள்ளதா?' என்று கூறிய நாய் சிங்கத்திடம் சென்று 'நான் பலமுள்ளவனுக்குத்தான் எஜமானாக இருக்க விரும்புகிறேன். ஆகவே நான் உங்கள் அடிமை' என்றது.

சிங்கமும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டது. வெகு காலம் வரை சிங்கத்திடம் வேலைக்காரனாக நாய் இருந்து வந்தது. ஒருநாள் காட்டின் வழியே சிங்கமும் நாயும் சென்று கொண்டிருந்த போது சிங்கம் திடீரென பயந்து ஒளிந்து கொண்டது.

'அதோ வருகிறான் ஒரு மனிதன். அவன் என்னைப் பார்த்தால் கொன்று விடுவான். பேசாமல் இருவரும் ஓடி விடுவோம். இல்லாவிட்டால் ஆபத்து' என்றது. அதைக் கேட்ட நாய் 'அட! இவ்வளவுதானா உன் பலம்! உன்னை விட மனிதன்தான் பலசாலியா! இனி எனக்கு எஜமானன் மனிதனே' என்று சிங்கத்தை விட்டுவிட்டு மனிதனிடம் வந்தது. "நான் உனக்கு உண்மையாக உழைப்பேன்" என்று கூறியது. இன்று வரை நாய்தான் மனிதனுக்கு உண்மையான வேலைக்காரனாக இருந்து வருகிறது.

— இந்திரா


வாண்டுமாமா
வின்
மரகதச்சிலை
வண்ணச் சித்திரத் தொடர்
கோகுலம்
ஜூன் இதழில் ஆரம்பம்!
சித்திரம் : ரமணி



பாராட்டுகிறோம்!

குழந்தைக் கவிஞரிடம் பேரன்பு கொண்டவர்களால் கோவையில் நடத்தப்பட்டு வரும் "வள்ளியப்பா இலக்கிய வட்டம்" அண்மையில் இரு நிகழ்ச்சிகளைக் கொண்டாடியது. காலையில், கோவை மாவட்டத் தலைமை நூலகர் திருமதி இரா. கோகுலம் அவர்கள் தலைமையில், தொழிலதிபர் திரு. சபா சிங்காரம் அவர்கள் சிறுவர் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்தார்கள். சிறுவர் இலக்கியம் வளரப் பாடுபட்டவரும், 'முத்து' சிறுவர் இதழை நடத்தியவருமான கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கும் சிறுவர் நூல்களை 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதிப்பித்து வரும் வானதி திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்களுக்கும், 1994-ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதையை எழுதிய திரு. வே. சபாநாயகம் அவர்களுக்கும் வள்ளியப்பா விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தலைமை வகிக்க, டாக்டர் தமிழ்க் குடிமகன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். கோவை வானொலி இயக்குநர் திரு. ஊ. ராசையா அவர்களும், திருமதி வள்ளியப்பா, தேவி நாச்சியப்பன், கோகுலத்தின் கௌரவ ஆசிரியர் ஆகியோரும் திரளான இலக்கிய அன்பர்களும் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கணக்கான குழந்தைகள் கலந்து கொண்ட ஆடல் பாடல் போட்டிகள் பிரமிப்பை ஊட்டுவதாக இருந்தன. மிகச் சிறப்பாக விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த அமைப்பாளர்களை, குறிப்பாக விஜயா பதிப்பகம், திரு. மு. வேலாயுதம், காசு. மணியன், கவிஞர் செல்ல கணபதி, டாக்டர் பூவண்ணன் ஆகியோரை எத்தனை பாராட்டினாலும் தகும்!



இவனெல்லாம் நண்பனா?

ம. வேல்முருகன்

முருகனும், கோபியும் ஒரே பள்ளியில் பத்தாம் வகுப்பில் படித்து வந்தனர். இருவரும் சிறு வயது முதலே நண்பர்கள். அதனால் இணைபிரியாது இருந்தனர். முருகனையும், கோபியையும் கண்டாலே 'இப்படியும் நண்பர்கள் இருப்பார்களா!' என்று மற்ற மாணவர்களுக்குப் பொறாமையும் கூட. படிப்பிலும் கூட இருவரும் கெட்டி. வகுப்பில் இவர்கள்தான் முதல் இரண்டு மதிப்பெண் தகுதிகளைப் பிடிப்பார்கள். இதனால் அந்த வகுப்பில் படிப்பதில் ஒரு போட்டியே உண்டு.

முருகனுக்கு ஓவியத்தில் திறமை அதிகம். ஆனால், கோபிக்கு அந்த அளவுக் குத் திறமை கிடையாது. ஓவியப் போட்டி தவிர மற்ற போட்டிகளில் இருவருமே கலந்து கொள்வார்கள். முதல் இரண்டு பரிசுகளைத் தட்டிக் கொண்டு போவார்கள்.

ஓவியம் என்று ஏதாவது வந்தால் கோபி பின்வாங்குவான். வகுப்பில் ஆசிரியர் பாடம் சம்பந்தமாக ஏதாவது படத்தைப் போடச் சொன்னால் கூட அவனுக்குக் கடுப்பாக இருக்கும். "நமக்கு ஏன் ஓவியத்தில் மட்டும் திறமை இல்லை!" என்று அவனே எரிச்சல் படுவான்.

பள்ளியில் பொதுத் தேர்வுக்கான மாதிரித் தேர்வு நடந்தது. "இந்தத் தேர்வு எழுதுவதை வைத்துத்தான் உங்கள் பொதுத் தேர்வின் தகுதியே இருக்கிறது. எனவே, கவனமாக எழுதுங்கள்" என்று அறிவுரை கூறி மாணவர்களைத் தேர்வெழுதச் சொன்னார் ஆசிரியர்.

மாணவர்கள் வினாத்தாளை வாங்கியதுமே சுறுசுறுப்பைக் காட்டினார்கள். முருகன் விடை எழுதும் போதே அதற்கான விளக்கப் படங்களைப் போட்டுக் கொண்டே வந்து முடித்தான். ஆனால் கோபி விளக்கப் படங்கள் வரையத் தெரியாமல் விழித்து அதற்கு இடம் விட்டு விடைகளை மட்டும் எழுதிக் கொண்டு வந்தான்.

ஆசிரியர் ஏமாந்த சமயத்தில் கோபி, முருக னிடம் சைகை காட்டி, விளக்கப் படங்களை வரைந்து தருமாறு கேட் டான்; கெஞ்சினான். முருகன் கண்டு கொண் டதாகவே காட்டிக் கொள்ளவில்லை!

கோபி, மனதுக்குள் "சே! இவனெல்லாம் நண்பனா! நாம் இவ னுக்கு எவ்வளவு உதவி கள் செய்திருக்கிறோம்? வழக்கப்படி வரைந்து கொடுத்தால் எங்கே நம்மை விடக் கூடுதலாக மதிப்பெண் வாங்கி விடு வானோ என்ற எண் ணத்தில்தானே மறுத்து விட்டான்" என்று எண் ணினான்.

வேறு வழியில்லாமல் கோபி விளக்கப்படங் களை வரையாமலேயே விட்டு விட்டான். முரு கன் மீது கோபிக்கு அது வரை இல்லாத அளவுக் குக் கோபம்!



தேர்வு முடிந்தது. மாணவர்களிடம் 'நீ எவ் வளவு மார்க் வாங்குவே, நான் எவ்வளவு வாங் குவேன்?' என்ற சல சலப்பு எழுந்தது. முருகனும், கோபியும் அமைதியாக வெளியே வந்தனர்.

கோபி முருகனைத் தவிர்க்க முயன் றதை முருகன் உணர்ந்து கொண்டான். "என்னடா கோபமாக இருக்கிறாய்?" என்று கேட்டான் வெளிப்படையாக.

"தேர்வில் உதவி செய்யாத நீயெல் லாம் ஒரு நண்பனா? என் கூட இனிமே பேசாதேடா" என்று கடுகடுத்தான் கோபி. முருகனுக்காகக் காத்திராது தனியே போய் விட்டான்.

அதன் பிறகு முருகனும், கோபியும் பேசிக் கொள்ளவேயில்லை. இவர் களுடைய இணைபிரியா நட்பைக் கண்டு பொறாமைப்பட்டவர்களுக்கு இப்படி இருவரும் வடதுருவமும் தென் துருவமுமாக இருந்தது மிக்க மகிழ்ச்சி யைக் கொடுத்தது. பால் பாயசம் குடித்த நிறைவு ஏற்பட்டது. அவர்கள் ஆவலாக எதிர்பார்த்து, ஏங்கியது இதற்காகத் தானே? இந் நிலையில் பொதுத் தேர்வும் நெருங்கியது.

கோபி படிக்க எடுத்துக் கொண்ட நேரத்தை விட அதிக நேரம் அறிவியல் வினாக்களுக்கு விளக்கப் படங்கள் போட்டுப் பழகுவதிலும் செலவழித் தான். அந்த விடாமுயற்சிக்கு நல்ல பலன் இருந்தது. 'நம்மாலும் இப்படிப் படங்கள் போட வருகிறதே!' என்று



தானே மகிழ்ந்து பெருமை கொள்ளும் அளவுக்கு அவை இருந்தன. 'சித்திரமும் கைப் பழக்கம்' என்பது எத்தனை உண்மை என்று வியந்து கொண்டான்.

முருகனும் கோபியும் நன்றாகப் பொதுத் தேர்வை எழுதினர். விடுமுறையில் கூட இருவரும் பேசிக் கொள்ள வில்லை.

தேர்வு முடிவுகள் தெரியும் நாளும் வந்தது. அந்தப் பள்ளியில் எழுதிய மாணவர்களில் தொண்ணூறு சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றிருந்தனர். மதிப்பெண் பட்டியல்கள் வழங்கப்பட்டன. "இவ்வாண்டு பத்தாம் வகுப்புத் தேர்வில் கோபி முதல் மதிப்பெண் பெற்றிருக்கிறான். அவனுக்கு எனது வாழ்த்துகள்'' என்று அறிவித்தார் தலைமையாசிரியர்.

கோபி மகிழ்ச்சியில் தன்னை மறந்தான். முருகனைக் கட்டித் தழுவினான். இதுவரை பேசாமலிருந்தவன் இப்பொழுதாவது பழையபடி நண்பனாக ஏற்றுக் கொண்டானே என்று முருகனும் மகிழ்ந்தான்.

கோபி, கண்ணீர் மல்க, "முருகா! மாதிரித் தேர்வு நடந்த போது, ஓவியத் திறமை இல்லாததால் மதிப்பெண்ணை விட்டு விட்டேன். அன்று நீ மறுத்ததும், எனக்கு ஒரு வைராக்கியம் எழுந்தது. எனக்கு வர மறுக்கும் ஓவியத்தை எப்படியாவது கற்றே தீருவது என்று முடிவெடுத்து முயன்றேன். வெற்றி கிடைத்தது. அதன் பயன்தான் முதல் மதிப்பெண். அன்று நீ மட்டும் வழக்கப்படி நட்பு முறையில் ஓவியம் வரைந்து கொடுத்திருந்தால், என் திறமை இன்னும் மங்கிப் போய் இருக்கும். நல்வழியில் முயல என்னை உசுப்பி விட்ட நீயே என் வெற்றிக்குக் காரணம்" என்று நா தழுதழுக்கச் சொன்னான்.

''நீ இப்படித் தன்மானத்துடன் கிளம்பி முயல வேண்டும் என்றுதானே நான் அன்று மறுத்தேன்? என் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை" என்றான் முருகன்.

முருகனும், கோபியும் பழையபடி ஒருவருக்கொருவர் பேசத் தொடங்கியதை மற்ற நண்பர்கள் வியப்புடன் பார்த்தனர்.

சார் தபால்!

• அட்டைப் படம் ஒரே அசத்தல்! புதுமையாக இருந்தது. கவியரங்கம் பக்கவாத்தியம் இன்றிப் பாட வைத்தது! - குடந்தை மா. பஞ்சநாதன், புதூர் மீ. செங்கல்வராயன், நாகலூர் எஸ். தட்சிணாமூர்த்தி, விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், சென்னை கி.சிவா, மேலப்பாதி ராஜலட்சுமி நாகராஜன், திருவாரூர் தவரதன்.

• 'உண்டேன் உண்டேன்!' - இனிய தீஞ்சுவையை ரசித்தோம் ரசித்தோம்! எப்படி உங்களுக்கு மட்டும் இத்தகைய கதைகள் கிடைக்கின்றன பொன்ராசன்? - குடியாத்தம் மு. வேலாயுதம், சின்னமனூர் கா. லலிதா, புதுப்பாளையம் மா.ஆரோக்கியம், சென்னை கி. சிவா.

• பரிசுக் கதை, இன்றைய குழந்தைகளுக்கு அற்புதமான கலங்கரை விளக்கம்! யாருமே துணியாத படிப்புரை! நடுவர் குழுவுக்குப் பாராட்டு - பாலூர். வெ. கண்ணப்பன், எழிலாம்பட்டி. மு. சின்னத்தாயி, சென்னை. கி. சிவா, குடந்தை ஆர். எஸ். நாதன், சர்க்கார் கொல்லைப்பட்டி பெரு. இளங்கம்பன், விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், ஆரணி கே. யுவராஜ்.

• 'ரோபோ ரேவதி' திடீர் திருப்பங்களுடன் ஒரே மூச்சில் படிக்க வைத்தது! - துறையூர் வா. கிருஷ்ணமூர்த்தி, தாண்டவபுரம். வி. பெருமாள், கோவை. மீ. சுத்தானந்தன், கடலூர் கி. கணேஷ்ராம், சர்க்கார் கொல்லைப்பட்டி பெருங்கம்பன், ஏழுகிணறு எஸ். பாலாஜி.

• இனிமேல் சின்னபாபுவின் கதையோடு வயிற்று வலி மாத்திரையை இலவச இணைப்பாகத் தரவும். பிள்ளையார் சாபத்தைப் படித்து, சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகி விட்டது சார்! - தரங்கை. மாவேம்புலி, கிரிஜாபாளையம் வெ. சாம்பமூர்த்தி, சாமந்தியூர் கா.சுல்தான் முகம்மது, குளச்சல். கே. வினித் சகோதர சகோதரிகள். அரசரடி. பால்துரை, மேல்மலையனூர் எஸ். செந்தில் குமார், சர்க்கார் கொல்லைப்பட்டி பெரு. விசுவேஸ்வரன்.

• பிருந்தாவனக் கதையரங்கம் இல்லாத குறையை, ஒரு பக்கக் கதைகள் போக்கின. இதைத் தொடரவும் திருப்பூர் கா. பாட்சா, கருங்கல்பாளையம் வி. இராமசாமி, சாத்தூர் வி. அற்புதராஜ், திருவாரூர் மு. தனபாலன்.

• "கூம்பு ராஜா பொம்மை" எங்கள் பள்ளி மாணவர் கைப் பொருள் கண்காட்சியில் இடம்பெற்றுப் பாராட்டைப் பெற்றது! - வடலூர். கி. கன்னியப்பன், நெய்வேலி மா.தனசேகரன், திருவாரூர். த. சாந்தி.

• "ரத்தினபுரி ரகசியம்" புதுத் திருப்பங்களைத் தந்து ஆவலைத் தூண்டுகிறது. - காங்கேயம் மா. சுத்தபாக்கியம், நாகை. வி. இரத்தினவேல், பெரியபாளையம் கா. மணிகண்டன், மேல்மலையனூர் எஸ். சரவணன், ஆரணி கே. யுவராஜ், வே. மாதப்பள்ளி கே. ஜெ. ஹரிபாபு.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. மூரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.


உப்பு மூட்டை ஏறியே
ஊர் முழுக்க சுற்றுவேன் !

GOKULAM (Tamil) May '95 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper in Sri Lanka

